

KUMARAN PRESS, CONJEEVERAM.

# குமார விகடன்

உலகத்தார்க் கின்பநல மூட்டிடவே எஞ்ஞான்றும்
உலகங் களிக்க உற்றேன் பராபரமே

| மாலை 3 | 1936௵ ஏப்ரல்௴<br>யுவ௵ பங்குனி௴ | மலர் 12 |
|---|---|---|


உ

ஓம்

## :: நமச்சிவாயம் ::

கழிபேருவகை பூத்துத் தமிழ்ப் பேரறிஞர் உயர் திருவாளர் கா. நமச்சிவாய முதலியார் அவர்களின் அறுபதாமாண்டு நிறைவு நாளைத் தமிழுலகமே விழாவெனக் கொண்டாட எல்லா ஏற்பாடுகளையுஞ் செய்துகொண்டிருந்த இது சமயத்தில், இச் செந் தமிழணங்கின் அருந்தவப் புதல்வரே இறந்து பட்டமையால், முன் கூட்டிச் செய்திருந்த ஏற்பாடுகளனைத்தும் குலைந்துபோனதோடல்லாது, தமிழுலகுக்கே பெரு நட்டமும் விளைந்து விட்டது.

எண்ணித் தொலையாத விண்ணனைய நலன்களை இந் 'நமச்சிவாய'ப் பேராளரிடமிருந்து தமிழர்கள் பெற்றுத் துய்த்தும் வருவதால், இத் தமிழறிஞரின் அறுபதாமாண்டு நிறைவு நாள் பற்றி, நறு மணங் கமழும் 'நமச்சிவாய மலர்' ஒன்றினைத் தொகுத்துத் தொடுத்து முடிக்கக் 'குமார விகட'னும் முற்பட்டான். அந்தோ, நினைத்த தெல்லாம் விழலுக் கிறைத்த நீர்போலவே யாயிற்று.

* * * *

அத்தனையும் முப்போகம் விளையக்கூடிய நிலங்கள். வண்டல் நிறைந்த காவேரி நீர்ப் பாய்ச்சல். கவனிப்பாரற்றுக் கன்னாபின்னாவென்று செடிகொடிகள் தாமாகவே முளைத்துத் தழைத்துப் படர்ந்து கிடந்தன. சிற் சில விடங்களில் அரவுக் கூட்டங்கட்கு உறைவிடமாய்ச் சப்பாத்திப் புதர்கள்; பல்லாண்டுகளாய் இப்படியே இந் நிலங்கள். போவார் வருவார் பார்த்து ஒரு முறை "அந்தக் குடும்பம் இப்படியும் பூண்டற்றுப் போகுமா?" என்பார்கள். சிலர் வெறும் நொச்சு கொட்டிவிட்டுப் போவார்கள்.

உழுது பயிரிட்டு வாழ்ந்த நிலங்களின் சொந்தக்காரன் உயிர் துறந்ததற்குப் பின்னர், அவனது குடும்பத்துப் பரம்பரையிலேயே யாரும் தோன்றாமல் பல ஆண்டுகள் கழிந்தன. பின்னர் தோன்றின சிலர் நிலங்களைக் கவனிப்பவர்களல்ல; இப்படியே பின்னும் பல ஆண்டுகள். அந்த பரம்பரையைச் சார்ந்த ஒரு குடும்பத்திலே, பல்லாண்டுகள் கழித்து, ஒருவன் தோன்றினான். சின்னஞ் சிறு வயதிலேயே அந் நிலங்களுக்குச்சென்று அங்கே ஒடியாடித் திரிவான். வயது வந்தது. யாருக்கும் பயனற்றுக் கிடக்கும் அந் நிலங்




தமிழ்நாடு உளங்கலங்க, தன்னாட்டிற்குத் தமிழ்மணியைக் கொண்டுசெலவந்த காலன்

களைப் பார்த்து ஏங்கினான்; பிறகு எப்படியும் உழுது பயிரிட்டுச் சாகுபடி செய்வதென்று தேர்ந்தான். நாளாக ஆக, எண்ணம் அதிகரித்தது; ஊக்கமும் வளர்ந்தது. சிறிது சிறிதாக ஆறுமாத காலங்களில், தன்னந் தனியாகவே செடி கொடிகளை முற்றுந் துப்புறப் படுத்தி விட்டான். காவேரி நீர் ‘சிலு சிலு’வென அவன் வெட்டிவிட்ட மடை வழியாக நிலங்களில் தடைபடாது ஓடி வந்தது. வேண்டியமட்டில், நீர் பாய்ச்சிக் கொண்டதும் மடையை மூடிவிட்டான் அவன். மனம் போல இரவு பகலாய்த் தானாகவே உழுது, சிறு உரனிட்டு, பின்னர்சாகுபடி செய்வதற்கு ஒரு கலக்கோட்டை நெல்லையும் விதைத்தான். கேட்பானேன்? தாயின் கூக்குரல்கேட்டதும் குழந்தைகள் ஓடோடி வருவதே போல, தளதளவென்று முளைவிட்டு நாற்றுகள் கிளம்பின. களை யெடுத்து மீண்டும் நாற்றுகளை நட்டுவிட்டான். ஆறுமாதம் அறுவடைக்குத் தலைவணங்கி, செம்பொன்னிற நெற்கதிர்கள் தயாராய் இருந்தன.

நாளைக் காலை அறுவடை. சலியாது உழைத்த அக்குடியானவன் விடியுமுன்னதாக, இன்றிரவே இறந்துபட்டான்.

வாசகர்கட்கு வருத்தத்தைவிட இங்கு கோபமே அதிகமாக ஏற்படக்கூடும். அதற்கு நாமென்ன செய்வது? குடியானவன் இறந்துவிட்டான்! வயல்வேலை தீர்ந்துவிட்டது; குடியானவனின் உயிரும் நீங்கிவிட்டது. அனுபவிப்பதற்கு உற்றார், உறவினர், மற்றோர் பலர் இருக்கின்றனர். அக்குடியானவனும் அப்படித்தான் சொல்லிக் கொண்டிருந்தான்.

“நிலங்கள் இக் கிராமத்துக்கே பொது; எக்காலத்தும் பொது: உழைப்பு என்னுடையதாயிருக்கட்டும், அனுபவிப்பதற்கு இக்கிராமத்தவர் எல்லோருக்கும் உரிமையுண்டு” என அடிக்கடிச் சொல்வது வழக்கம். இப்போது தன் பங்கையும் நீக்கிக்கொண்டு விட்டான்; ஏழைக் குடியானவன்: அவன் ஒரு நல்ல குடியானவன்!

‘நமச்சிவாய’ரும் இத்தகைய நல்ல தமிழர். தமிழ்நாட்டிலே, காவேரிப் பாக்கத்திலே தமிழராய்ப் பிறந்தார். தாய்மொழி கற்றார். ஓயாமல் அம்மொழியையே செவ்வையாய்க் கற்றுவந்தார். கற்கக் கற்க, மொழியிடத்தில் ஒரு செருக்கான வாஞ்சை; தமிழர்களிடத்தே தனித்த அன்பு! மெலிந்து போன தமிழ் மொழிக்கு, வலிமைதேட விழைந்தார்; இழித்து நடத்தப் பெற்ற தமிழர்க்கும் புகழ் தேடப் புறப்பட்டார்!

உரைநடையிலே பற்பலப் படிகளையமைத்தார்; சிறுவர்முதல் பெரியவர் வரையில் படிப்பதற்குப் பல்வேறுபாட புத்தகங்களை எழுதிவெளியிட்டார். ‘வயதை யொட்டி அறிவு வளர்கிறது; எனவே, வகுப்பை யொட்டி பாடங்களின் நடையும் படிப்படியாய்ச் செல்லுதல் வேண்டும்’ என்பதைக் குறிக்கோளாய் வைத்து, பொருளையும் நடையையும் அறிவிக்கு ஏற்றாற்போலப் பாடங்களில் ஏற்றி வைத்தார். படிக்கும் சிறுவர் சிறுமியருக்கு எளிதாயிருந்தது; போதிக்கும் ஆசிரியர்கட்கும் இலகுவாயமைந்தது. தங்கு தடைஎன்பதே யில்லை; வலிந்து எழுதின கடின நடையைச் சுமத்தி உடனே விழுந்து விடுதல் போன்ற அசம்பாவிதங்கள் அவரது புத்தகங்களில் எந்த ஏட்டிலும், எந்தப் பக்கத்திலும் கிடையாது. அறிவை யளந்து பார்த்து, எடைபோட்டு நடை யெழுதும் பழக்கம் நம் ‘நமச்சிவாயர்’க்குத்தானுண்டு. எனவே, எல்லா கலாசாலை மாணவர்களும் மொழியை மகிழ்ந்து படிப்பாராயினர்.

தாமே தமிழ்ப் பேராசிரியரா யிருந்த தோடல்லாமல், ‘நல்லாசிரியன்’ எனும் பத்திரிகைக்கும் ஆசிரியரா யிருந்து பல்வேறு கலாசாலைத் தமிழாசிரியர்கட்குந் தமிழ் மொழி கற்பிக்கும் செவ்விய முறையை அடிக்கடி எடுத்துக் காட்டி வந்தார். மாணவர்கட்கு இத்தமிழ் மொழியின் பால் ஊக்கம் ஊட்ட பற்பல புதிய வழிகளையும் அவ்வப்போது எழுதிப் பரப்பினர்.

இவ்வாறு தாய் மொழியின்பால் வாஞ்சை கொண்டு பெரிதும் உழைத்து வந்த ‘நமச்சிவாயர்’, தமிழர்களுடைய வறுமையை நினைந்து, தமிழ்மொழியில் வல்ல அறிஞர்கட்கும் தனித்ததோர் புகழ் கிடைக்குமாறு வழிகாண விரைந்தார். ஆங்கில மொழி வாடையால் பெரிதும் மெலிந்து போன இந்தியத் தாய் மொழிகளுள், தமிழ்மொழி இழிந்தநிலை செப்புந்தர மற்றுக் கிடந்ததால், “தனித்து இலங்கும் தமிழ்மொழி யாதலால், தயக்கமின்றித் தனிப்பட்டம் தந்தாக வேண்டும்”

என்று மன்றுடி 'வித்துவான்' பட்டம் ஈட்டித் தந்தார், அஞ்சாத நெஞ்சத்தோடு. மற்றும், பண்டிதர்கள் பெருமைப்படத் தக்க வழியில் எவர்க்கும் கலாசாலைகட்குரிய புத்தகமெழுத உரிமையுண்டெனச் சாதித்து வைத்து, அழியா நிலையினை நிறுவினர் இத்தமிழறிஞர். இது வன்ன எத்தனையோ நலன்கள் புரிந்துள்ள இச் செந்தமிழ்ப் புலவர்தம் அறுபதாம் ஆண்டு நிறைவு நாளைத் தமிழர்கள் எல்லவரும் பெரு முழக்கத்தோடு கொண்டாட முனைந்திருந்த சமயத்திலே, எண்டிசையு முள்ள பண்டிதர்களையெல்லாங் கண்டு அவர்களிடமிருந்து வாழ்த்துரைகளை வாங்கி, 'நமச்சிவாய மல'ரைக் குமார விகடன் தொடுத்துக் கொண்டு வருகையிலே, நாவுக்கரசராம் மணி. திருநாவுக்கரசர் நெடுமரம்போல் வீழ்ந்திறந்த துன்பம் நீங்காது ஓர் புறம் தமிழணங்கு ஏங்கி நிற்கையிலே, கண்ணின் மணியாய திரு.மாணிக்க நாயக்கர் அவர்களும் பின்னர் இம் மண்ணுலகை விடுத்த கொடுமை ஓர் புறம் நெஞ்சைத் துளைத்துக் கொண்டிருக்கும் சமயத்திலே, எஞ்சிநிற்கும் ஒரு சிலருள் 'ந ம சி வா ய' மெனும் ஐந்தெழுத்தும் நெஞ்சழுத்தும் பஞ்சாட்சரப் பேராளரும் உயிர் நீத்த சேதி எட்டுணைக் கொடுமை என்பதை யாரே சொல்லி முடிப்பது? எவரே எழிதித் தீர்ப்பது? அந்தோ! எங்கும் அடுக்காத கொடுமையிலும் கொடுமையலவோ தமிழன்னை படுங் கோலம்!

தமிழர்கள் முழக்கி வந்த ஆசையிலே ஒரு பேரிடி முழக்கத்தோடு வீழ்ந்து, பெரும் அலங்கோலம் விளைத்த இந்த அநீதியை யாரிடம் எவ்வாறு உரைப்பது?

இந்திய நாட்டிலே, விந்தியமலை தலையமையக் குமரி வரையும், அதற்கு மப்பாலும் பரவி நிற்கும் எல்லாத் தமிழர்க்கும் இப்பெருந் தகையாளரின் ஊழிய வாழ்க்கை பின்பற்றற் குரிய உயரிய தொன்று. அமைதி நிலை எய்திவிட்ட 'நமச்சிவாயர்' ஆன்மா நந் தமிழரை எக்காலத்தும் ஊக்குவதாக.




கேட்லாக் இலவசம்

ஆல் இந்தியா சுதேசி எக்ஸிபிஷன்களில்
தங்கமெடலும், வெள்ளிமெடலும்,
நற்சாக்ஷிப் பத்திரங்களும் பெற்றதுமான

**பிரகாசம் தங்க நகைகள்**

| | |
|---|---|
| ஒட்டியாணம் டபுள் வங்கி செஜ்ஜையுடன் | 20—0—0 |
| சாதா ஒட்டியாணம் | 12—0—0 |
| கழுத்துச்சங்கிலி இரட்டை வடம் | 14—0—0 |
| ஷை ஒற்றைவடம், செயின் | 7—0—0 |
| குழந்தைசெயின் டாலர் உள்பட | 5—8—0 |
| வளையல் பெரிய சைஸ் ஜோடி 1-க்கு | 3—0—0 |
| குழந்தை வளையல் ஜோடி 1-க்கு | 2—0—0 |
| அட்டிகை பதக்கமில்லாமல் செயின் 1-க்கு | 7—0—0 |

10—வருஷம் உத்திர வாதமுள்ள எங்கள் பிரகாசம் 18-கேரட் ரோல்டு கோல்டு தங்க நகைகள் அசல் சவரன் நகைகளுக்குப் பதிலாக உபயோகித்துக் கொள்ளலாம். எங்கள் கம்பெனியின் கேரண்டியுள்ள நகைகளைவரவழைத்து அணிந்து ஆனந்தமடையுங்கள்

இந்த பத்திரிகையில் பிரசுரித்திருந்த ஜெயம் & கம்பனி எங்கள் கம்பனியோடு இணைக்கப்பட்டு விட்டபடியால் நேரில் எங்களிடமிருந்து வேண்டியவைகளை தருவித்து கொள்ளவும்

**ஆர். எஸ். பிரகாசம் அண்டு கம்பெனி,**
மெட்டல் ஜுவலரி ஒர்க்ஸ்,
நெ. 187. சைனபஜார் ரோட், ஜி. டி. மதராஸ்.

# :: பிறிந்தோர் பிரிவு ::

அன்பும் அழகும் ஒருங்கே திரண்டு டில்லியிலே சமைந்த உருவம்; உடன்பிறந்தாரற்று, ஒரு கோடீசுரக்குடும்பத்திலே தனிமகளாய்த் தோன்றி, செல்வத்தின் முழுப்பொருளின் விளைவைவிளைந்த விலையிலா வைரம்: செல்வச் சிறப்பிலேயே பிறந்து வளர்ந்து, ஆடம்பர வாழ்க்கையை எத்தனை தூரம் உயர்த்தக்கூடும் என்பதைத் தம் அனுபவத்தில் உயர்த்தி வாழ்ந்த முடிசூடா இளவரசு பண்டித ஜவகர்லாலை மணம் புரிந்து கொண்டு, அறிவுச் சுடராம் இந்திரா நேருவை இந்தியாவுக்களித்த பேறு பெற்ற கமலா நேரு, இதுகால் அந்நிய நாட்டிலே உயிர் நீத்தமை கேட்டு தேசமே வெதும்பி நிற்கின்றது.

அது ஓர் நாள். பதினாயிரக் கணக்கான மக்கள் அலகாபாத் ஆனந்த பவனத்தைச் சூழ்ந்து கிடந்த சம்பவம். வங்கர், தெலுங்கர், கேரளர், தமிழர் ஆய எல்லா இந்திய வகையினரும் குழுமியிருந்தனர். சிற்றரசர்கள் முதல், உயர்தர உத்தியோகத்தவர் உட்பட ஏழைப் பாமரர் ஈறாக கலந்து கொண்ட வைபவம் அவ் வைபவத்தோடுதான் பண்டித ஜவகர்லால் நேருவுக்கும், ஸ்ரீமதி கமலா நேருவுக்கும் திருமணம் நடந்தேறிற்று. கண் கொள்ளா ஏராளமான கூட்டத்தில், பற்பல கிழ உருவங்களும் தம்பதிகளை ஆசீர்வதிக்கலாயினர். கிழட்டுக் காந்தியடிகளும் அவர்களிலே ஒருவர். ஆனந்த சாகரத்திலே மூழ்கிக்கிடந்த அந்த ஆனந்த பவனத் திருமணக் கூட்டத்திலே, காந்தியடிகட்குத் தம்பதிகளைக் காணும்போது என்னதான் தோன்றிற்றோ, எது நிகழ்ந்ததோ யாரே அறிவர்?

முக்காலமு மறிந்தவரே போல மகாத்மா அருகிலிருந்த நண்பரை யணுகி,

"இச் சதிபதிகளைச் சாதாரணக் குதிரைகள் என மதித்து 'சாரட்டு' வண்டியில் கட்டிவிட்டோம். கேவலம் சிற்றின்பச்சாரட்டு வண்டிக்காக இக் குதிரைகள் ஒன்றோடொன்று ஒன்றியிருக்க மாட்டா. இரண்டும், இடையே தடுத்துக் கொண்டிருக்கும் சாரட்டு வண்டியினின்றும் அறுத்துக்கொண்டு எல்லாவற்றிற்கும் மேலாம் சுயேச்சையை நாடி ஓடப் பார்க்கின்றன. இடையூறு ஏற்படுத்துவதுபோல் தோன்றினால், இரண்டும் சேர்ந்து வண்டியை தூள் தூளாக நொறுக்கிப் பொடி செய்துவிடும். சிற்றின்பத்துக்காக இத் தம்பதிகள் பிறக்கவில்லை. ஓர் கட்டுப்பாடாக நினைத்துக் கூட்டிவைத்த போதிலும் இருவருடைய நோக்கமும் ஓர் உயர்ந்த அதீதமான விடுதலைச் சுடர் கூடியதாயிருக்கிறது. சுருக்கமாய்க் கூறவேண்டுமாயின், நாம நினைப்பதுபோல, இல்லற வாழ்க்கையிலே முனைந்து நிற்பவர்களன்று. இதுதான் என் மனதில் படுகின்றது. எதிர்காலத்தில் இதனைச் சோதித்தல் வேண்டும்" எனக்கூறினார்.

பண்டித ஜவகர்லாலின் உண்மை வாழ்க்கையினையும், உயரிய கருத்தினையும், அன்னாருக்குத் துணைவியாயமைந்த ஸ்ரீமதி கமலா நேருவின் துரும்பனைய மேனியிலே குடிகொண்டிருந்த இரும்பனைய வைராக்கியத்தையும் உணர்ந்த, முற்றுந் தெரிந்த மகாத்மா இத்தகைய முடிபு கூறியது அக்காலத்தில் ஓர் வியப்பே யாயினும், தற்காலம் அதனை மெய்ப்பித்துவிட்டது.

மணம் முடிந்தபின், முக்கால் பாகமாகிய மண வாழ்க்கை சிறை வாழ்க்கையாய் நேர்ந்துவிட்டது. ஆடையிலே சிறந்த பாரிஸ் நகரத்துக்கனுப்பி, தம் ஆடைகளைச் சலவை செய்து அணிந்து வந்த மெல்லிய உடலிலே, இந்திய மக்களின் மெலிவான கரத்தால் நூற்று நெய்த வலுவான காந்தியடிகளின் முரட்டுக் கதர்த்துணி பற்றுவதாயிற்று. வீசிடும் வாசனை பூசும் ஆசை அறவே ஒழிந்துபட்டது: நானாவித ஆகாரங்களும் ஒழிந்து, சிறைச்சோற்றிலே அதுவும். அடிமைப்பட்ட இந்திய நாட்டின் சிறைச் சோற்றிலே வயிற்றுப் பசிப் பிணியைப் போக்குவாராயினர். இந்திய நாட்டுத் தனித் தலைமை பூண்ட தம் இளங்காளைக் கணவன் ஜவகரையும், தம் அருமை மாமி ஸ்வரூபராணி, அரிய மகள் இந்திரா போன்றோரையும் பிரிந்து நின்று, தாம் ஓர் சிறையிலும், தம் கணவன் ஓர் சிறையிலுமாகி, பெரும்பாலான வாழ்க்கையை இந்திர போகத்தில் கழிக்காமல், மனதுக்கு யாதொரு மகிழ்ச்சியுமின்றி, இந்திய மக்களின் வறுமையினை நினைந்து நினைத்து, நொந்து, நைந்துபோய் கொடும் காச நோய்க்கு இளம் பருவத்தே சிறைச் சாலையிலே இலக்காகிவிட்டார். நல்ல உரன் கொண்ட உடல் படைத்த சுபாஷ் சந்திரபோஸ், பண்டித ஜவகர்லால், எல்லைப்புற காந்தி எனுஞ் சிறப்புப் பெயரால் வழங்கப்பெறும் கான் அப்துல் கபார்கான் போன்றோரே நமது அருமைச் சிறைச் சாலைகளில் புகுந்தபின் அரையாள்களாக ஆகிவிடுகின்றனரென்றால், இலவம் பஞ்சை யொத்த மேனி படைத்து, மேலான உப்பிரிகையிலே உயர்ந்த வாழ்க்கையில் வளர்ந்த கமலா, உடல் நலங்குன்றி, நிறையை யிழந்து, கொடிய காச நோய்க்கு ஆளாகிவிட்டமை ஒரு பெரிதன்று. அத்துணைச் சிறப்பு வாய்ந்தன வலவோ நம் சிறைகள்!

இந்த அடிமை இந்தியாவில் கமலாவின் நோயைக் குணப்படுத்த முடியாமல் ஓர் யதேச்சையான 5000-மைல்கட்கப்பால் கடல் கடந்த ஜர்மனி எனும் அந்நிய நாட்டுக்கு சிகிச்சைக்காக அம்மையாரை நாம் அனுப்பும்படி நேர்ந்தது. சிகிச்சையிலே வல்ல அந் நாட்டினர் கைகளில் நமது கமலா குணமடைந்து வருவதாய் அவ்வப்போது சேதிகள் வந்துகொண்டிருந்தன. திடீரென்று மண்டையிலே இடி வீழ்வதுபோல, கமலா நேரு கடந்த பிப்ரவரி மாதம் 28-தேதி திங்கட்கிழமை இறந்த செய்தி நமக்கு எட்டியது. என் செய்வது? கொடுங் கூற்றுவன் தட்டிவிட்டுக் கொட்டிக்கொண்டு போய்

# இடம்-பொருள்-ஏவல்

## கபோதித்தனம்

நமது இந்திய சட்டசபைச் சர்க்கார் அங்கத்தினர்களிடம், ஒரு ஜாப்தா இருக்கும்போலத் தெரிகிறது,—அல்லது அவர்கள் இந்தியர்களை யெல்லாம் மூன்று பிரிவினர்களாய்ப் பிரித்து அவர்களுடைய பெயர்களை மனப்பாடஞ் செய்து வைத்திருப்பதாயறிகிறோம்—அதாவது, ஜஸ்டிஸ் கட்சியாரைப் போன்று எக்காலத்தும் அரசாங்கத்தின் நல்ல **பிள்ளைகள்** இன்னாரின்னாரென்றும், சர். சிவசாமி, ரைட் ஆனரபிள் போன்ற **சாதுப்பிள்ளைகள்** இன்னாரின்னாரென்றும், காந்தியடிகள் போன்ற கேட்ட **பிள்ளைகள்** இன்னாரின்னாரென்றும் எப்போதும், எந்த நிமிடத்திலும் நினைவில் வைத்திருக்கின்றார்கள். அரசாங்க அங்கத்தினர்களுடைய பாகுபாட்டைப்பற்றியும் பகுத்தறிவைப் பற்றியும் இப்போது நாம் கவனிக்க வேண்டியதில்லை. ஏனெனில், உலகத்தில் எத்தனையோ ஒத்து ஊதுபவர்கள் இருக்கின்றார்கள், இருக்கத்தான் செய்வார்கள். அவர்களை யெல்லாம் நாம் கவனித்துக்கொண்க்க முடியுமா?

இந்த மூன்றாம் பிரிவைச் சார்ந்தவர்கள்தாம் எல்லா உண்மையான அரசியல் வாதிகளும். அரசியவில் விடுதலை வேண்டுவோர் அனைவரையும் இன்வங்கத்தினர்கள் அரசாங்கத்தின் விரோதிகளாய்க் கருதுகின்ற தீபபழக்கத்தைக் கையாண்டு வருகின்றனர். மற்றும், இந்தப் பிரிவில் பண்டித ஜவகர்லால்நேரு உட்பட, 'எல்லைப்புறக் காந்தி' எனுஞ் சிறப்பும் பெயரால் வழங்கப்பெறும் கான் அப்துல் கபார்கான், சுபாஷ் சந்திரபோஸ் போன்றாரைப் பெரிய 'புரட்சிக்' காரர்களாய் மதித்து நடத்திக் கொண்டு வருகின்றனர். இவர்கள் 'புரட்சி' எது எனவும், புரட்சிக்காரர்கள் யாரெனவும், அத்தகையவர் இந்தியாவில் இதுகால் இருக்கமுடியுமா வெனவும், அப்படி யிருப்பார்களாயின் அவர்கள் விகிதாசாரம் என்ன என்பதையும் நன்றாய் ஆராயவேண்டும். 'புரட்சி' எனின், வெறும்மாற்றம் அல்லது பழைய ஒன்றினை ஒழித்து புதுப்பித்தல் என்பது தான் பொருள். இந்த 'புரட்சி' அல்லது மாற்றுந் திட்டத்தைத்தான் இன்றைய உலகம் அன்றாடம் செய்துவருகின்றது. மக்கள் உடைகளை மாற்றி தோற்றத்தை மாற்றுகின்றனர், நடையை மாற்றுகின்றனர், தம்தொழிலை மாற்றுகின்றனர், தம்பழக்க வழக்கங்களை மாற்றுகின்றனர்; சுருக்கிச் சொன்னால் எந்த விதத்திலும் ஏமாற்றியாவது, பழம்பழக்கத்தை யொழித்து புதிய வாழ்க்கையிலே, புதிய நோக்கத்தோடு எல்லா மக்களும் ஈடுபட விரும்புகின்றனர். அரசாங்கம் கூட இதனைத்தான் செவ்வையாய்ச் செய்துவருகின்றது. நேற்றிருந்த சட்டபுத்தகங்கள் இன்றைக்கில்லை, நிறைவேறின காந்தி இர்வின் ஒப்பந்தம் பிறந்த உடனேயே இறந்துவிட்டது; 1800ம் வருடத்துக் காசு இன்று செல்லுபடியாகாமலிருக்கிறது. இப்படித்தான்எல்லாமுமே. ஆகவே, உலகமக்கள் எல்லவருமே புரட்சிக்காரர்கள்தான்; மாறுதல் வேண்டுவோர் தான்: இதில் என்ன தவறு யிருக்கிறது?

தந்திக்கம்பிகளை அறுத்தெறிவது, டெலிபோன் சம்மந்தங்களை வெட்டிவிடுவது, ரயிலைக் கவிழ்ப்பது குண்டு போடுவது, சுட்டுப்பொசுக்குவது போன்ற

---

விட்டான் நமது இந்தியநாட்டின் அருமையான தலை உயிர்களில் ஒன்றான கமலா நேருவின் உயிரை. ஆயினும் உயிரைக்கொண்டுபோன நமன் நம்மிடத்தே கமலாவின் ஆன்மாவை விட்டுவைத்திருக்கிறான்.

கமலாவின் சின்னம் இந்திரா. இந்திரா இந்தியாவுக்கு எதிர்காலத்தில் அறிவைக் கொளுத்த வேண்டிய சிறுமிகளில் ஒன்று. தம் தாயாரின் வாழ்க்கையும், தம் தந்தை ஜவகர்லாலின் போதனையும் இந்திராவுக்கு ஆறுதலளிக்குமென எண்ணுகிறோம்.

துக்கப்படுபவர்களில், கமலாநேருவின் மாமியார் படுகின்ற துக்கம்தான் சகிக்க ஒண்ணாதது. கேட்கக் கூட ஒண்ணாததாயிருக்கின்றது. காருண்ய பிரித்தானிய அரசாங்கத்தார் மிகுந்த யோசனையின்பேரில், நிபந்தனையற்ற அனுமதி யளித்ததும், சிறைச்சாலையினின்றும் வீறிட்டு, விரைந்து, ஆகாயத்திலே பறந்து சென்று மீட்டுவரப்போன தன் மைந்தன், ஒரு சிறு வெள்ளிப் பெட்டியிலே, தன் அருமை மருமகளின் வெறும் அஸ்தியைக் கொண்டுவந்த பரிதாபகரமான காட்சி அன்னை ஸ்வரூப ராணியைக் பதறிப் பதறிக் கண்ணீர் விட்டுக் கதறும்படி வைத்தது. மருமகள் இறந்தமைக்கு இன்னும் வருந்தி வருந்தி, வெந்துயரில் ஆழ்ந்து, வெதும்புவதாயறிகின்றோம். அன்னாருக்கும் பண்டித ஜவர்கலால் நேருவுக்கும், இந்திராவுக்கும், இதர குடும்பத்தவர்க்கும் நம் மனமார்ந்த துக்கத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம். 'பிறந்தார் இறப்பர்' என்பதைத் தவிர்த்து நம்மால் வேறு எவ்விதம் ஆறுதல் கோடல் இயலும்?

உயிர்ச்சேதம் விளைவிக்கத்தக்க முறைகளை இன்று மேனாடுகளில்தான், ஏகாதிபத்திய வெறிபிடித் தலையும் நாடுகள் கையாள்கின்றனவே யல்லாமல் இந்த உலகத்தில் வேறெங்கும் எந்தப்பாகத்திலும் கிடையாது. இன்னும், 'சுயேச்சை' பெறவிரும்புகின்ற நாடுகளும்; முடியரசை வீழ்த்தவும், மீட்டும் நிலை நிறுத்தவும் முனைகின்ற நாடுகளும்; புதியதோர் அரசியலை ஸ்தாபிக்க முற்படும் மேனாடுகளுந்தாம் இப்போது இந் நவீன நாகரீக உயிர்ச்சேத 'புரட்சி'க் காரியங்களைப் புரிகின்றனவேயல்லால், இந்த இந்தியாவில் இதுவரை நடந்ததுமில்லை; நடக்கப்போவதுமில்லை என்பது உறுதி. இரண்டோர் பகவத் சிங்குகளும், பாலகுருக்களும், சுகதேவர்களும் இந்நாட்டில் முளைத்தனரே அது எவ்வாறெனின், அதற்குங் காரணம் மேலை நாட்டினர்தான். அளவுகடந்து மேனாட்டு நாகரீகங்களை—இந் நாட்டினுக்கு என்றென்றும் ஒவ்வா ஒழுக்கங்களை—இங்கு புகுத்தியதால் மேனாட்டு வாடை பட்டு இவர்கள் தம் மனவலியிழந்து, இந்நாட்டுக்கே ஆகாத வழிகளில் கலந்து விடுவாராயினர். இத்தகைய மனப்போக்குடையார் இன்னுமிருக்கின்றனர் என இன்று நம் அரசாங்கம் கூறுமாயின், அதற்குங் காரண கர்த்தர், அவர்களே என்றுதான் நாம் கூறுவோம். சுயேச்சையையிழந்து வேலையற்றுத் திண்டாடும் 36 கோடி மக்களுட் பெரும்பாலானவர்களில் ஒரு சிலர் இத்தகைய தவறிய வழிகளில் வீழ்ந்துவிடுவது இந்நாட்டில் மட்டும் நிகழ்வதல்ல, எந்நாட்டிலுஞ் எந்த அரசாங்கத்துக்கும் எந்தக்காலத்திலும் விரோதிகள் இருந்தே வருகின்றனர். இதற்கு யாரென்ன செய்வது?

ஆனால், இற்றை வரையில் உயிர்ச்சேதம் என்பதை எக்காரணம் பற்றியும் புரிவதற்கு ஒருப்படக் கூடிய பிண்டமல்லாத பண்டித ஜவகர்லால் பேரில் எத்தனை அரசாங்கத் தடைகள்? எத்துணைக் கண்காணிப்பு? எத்தனை நிபந்தனைகள்?

எல்லைப்புறக் காந்தியாய கான் அப்துல் கபார்கான் பேரிலும் அப்படித்தான். விசாரணையின்றியே சிறைக் கைதி! இத்தகைய எல்லாக் கௌரவங்களும் அரசாங்கம் அளிக்கும்! அத்துணை அன்பு; அவர்பால் அத்துணை நல்லெண்ணம்!

இந்த ரகத்தில் வங்க நாட்டார் சுபாஷ் சந்திர போஸ் ஒருவர். பாவம், பிரமச்சாரி, சுயராஜ்யம் இந்தியாவுக்குக் கிடைத்த பின்னர்தான் திருமணம் செய்து கொள்வாராம்—ஏயப்பாடி! சுத்தப் பைத்தியக்கார மனிதர்!

இவருடைய மனவுறுதியைப் பார்த்து விட்டு அரசாங்கத்து அங்கத் தினர்கள் பயந்து விட்டனர் போலிருக்கிறது; இச்சிறந்த அறிவாளியின் நடவடிக்கைகள் பூராவும் நெடு நாட்களாய் கட்டுப்பட்டேகிடக்கின்றன. ரயிலைக் கவிழ்க்கவில்லை; தந்திக் கம்பிகளை யறுக்கவில்லை: இந்த மாதிரியான முரட்டுப் புரட்சிச் செயல்களில் ஈடுபடவே யில்லை. என்றாலும் அங்கத்தினர்கள் இவரைப் புரட்சிக்காரராய் நினைக்கின்றனர்; முடிவிட்டும் வைத்திருக்கின்றனர்.

சிறையிலே நோய்; சிகிச்சைக்காக அந்நிய நாடு; வழக்கம் போலல்லாமல் ஏதோ குணமும் அடைந்து விட்டார். போக உத்திரவு கொடுத்த அதே அரசாங்கம், அவர் பிறந்த இந்தியாவுக்குத் திரும்பி வரக் கூடாது என்று உத்திரவு பிறப்பித்திருக்கிறது. 1936ல் இந்த இந்தியாவைத் தவிர வேறு எந்த நாட்டில் இத்தகைய விந்தை நிகழக்கூடும்?

வேறு ஒன்றுமே யில்லை; இந்தியாவுக்கு வந்தவுடன், பண்டித ஜவகர்லாலும் இவருமாய்ச் சேர்ந்து பொது மக்களைத் தட்டி யெழுப்பிவிடுவார்களாம். அரசாங்கத்துக்கு 'அவர்கள் தூக்கத்தை இவர்களேன் கெடுக்க வேண்டு' மென்ற பச்சாத்தாபம்; மற்றப்படி வேறென்ன யிருக்கிறது?

தாம் இந்தியா வந்தவுடன் பண்டிதருடன் சேர்ந்து காங்கிரஸ் ஊழியஞ் செய்யப் போவதாக மேனாட்டிலிருந்து போஸ் கூறினார். அண்மையில், சுபாஷ் சந்திரரைத்தான் பொதுக் காரியதரிசியாகக் கொண்டு அகில இந்திய தேசியக் காங்கிரசு நடைபெறுமென ஜவகர்லால் கூறினார். இரண்டு பேர்களுடைய் சேர்க்கையும் அரசாங்க அங்கத்தினர் கண்களில் உறுத்தின போலும்! ஒரு நான்கு வரி உத்திரவு—மாதக் கணக்கில் சுமக்காமல்—கொள்ளாமல்—பிறந்து விட்டது! போக விடை; வரத்தடை! ஒரே அரசாங்கம்! இதை இந்தியா சட்ட சபையிலே சர்க்கார் அங்கத்தினர் கூட வெள்ளிடையாகக் கூறி விட்டார், அவர் ஒரு புரட்சிக்காரர் தானென்று.

ஐரோப்பா முற்றும் சுற்றித்திரிந்த போஸ் அவர்களைப் பிரிட்டனில் கூடத்தான் விட மறுத்தார்கள். அங்கிருப்பவர்களைத் தான், கலைத்துக் கெடுத்து விடக்கூடும். இங்கு அவர் பிறந்த நாட்டிலே, அந்நிய ஆதிக்கத்திலே என்ன செய்து விடுவாரோ ஏது செய்து விடுவாரோ நமக் கெல்லாம் தெரிய மாட்டேனென்கிறது. ஆகவே, அரசாங்கமே, பயப்படுகிறபோது நாம் எந்த மூலை? சுபாஷ் சந்திரரை நாம் சாதாரணத் தலைவராய் நினைக்கலாமா?

தடை யுத்திரவை மீறி, சுபாஷ் சந்திரர் எவ்வாறேனும் இந்த ஏழைத் தாய் நாட்டுக்குத் திரும்பி விட முடிவிட்டுப் புறப்படத் தயாரா யிருக்கின்றார்.

*          *          *          *

காருண்ய அரசாங்கம் என்ன சொல்லுமோ, ஏது செய்யுமோ?




"தொல்காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சி"—அகப்பட்டுக்கொண்டீரே, தும்பட்டிக்கா பட்டரே!

# : நாங்களும் நீங்களும் :

நேயர்களே! என்னதான் இருந்தாலும் நாமெல்லோரும் இப்படியா துரதிர்ஷ்டம் பிடித்த பேர் வழிகளாயிருப்போம்? அட யாராவது ஒரு நண்பருக்காவது சுக்ரதசை யடித்து, இத்தமிழ் நாட்டைப் பீடிக்க வந்த சனியனை மென்னியைப் பிடித்துத் தள்ளி விடும்படியான பாக்யம் வாய்க்கக் கூடாதா? நமது தமிழ்ப் பேரறிஞரும், நாம் படித்த புத்தகங்களின் ஆசிரியருமான திரு. கா. நமச்சிவாய முதலியார் அவர்களின் அறுபதாவது ஆண்டுப் பூர்த்தியை வெற்றி முழக்கத்தோடு கொண்டாட வேண்டுமென்று செய்திருந்த யோசனைகளிலெல்லாம் ஒரு பெருத்த வல்லிடியல்லவோ வீழ்ந்து விட்டது!

மூன்றும் பேருக்குச் சொல்லாமல் கொள்ளாமல், நமது குமார விகடன் ‘நமச்சிவாய மலர்’ எனப் பெயர் சூடி நேயர்கள் கையில் இருக்கிற நேர்த்தியைப் பார்க்க வேண்டுமென்றிருந்த பாக்யத்தை இழந்ததோடல்லாமல், யார் பொருட்டு இம் முயற்சிகளெல்லாம் நடைபெற்றனவோ அவரே, அம்மலையே சாய்ந்து விட்டது; திரு நமச்சிவாய முதலியாரவர்கள் உயிர் துறந்தார் எனுங்கொடிய செய்தியைக் குமார விகடன் நேயர்களுக்குத் தெரிவிக்கும்போது, என்னென்று சொல்வது, எதென்றுரைப்பது! சில நாட்களாய் நோய் வாய்ப்பட்டிருந்தாரென்பதை நாமறிவோம். ஆனால், விரைவில் குணமடைந்து, நம்முடன் அவரது விழாவில் கலந்து குலாவுவார் என்றல்லவோ சபலத்தனமாய் நினைத்து ஏமாந்தோம். விழா குறிப்பிட்ட தேதியில் நடத்த முடியாத போழ்துங் கூட, அதனை மறுதிங்கள் ஒத்திப்போட்டு, அன்று நம் நமச்சிவாய மலரையும் வெளியிட்டு விடுவதென்று தானே நினைத்திருந்தோம். ஏழை மனம் நினைத்ததெல்லாம் பாழாயிற்றே!

‘நமச்சிவாய’ மலை சாய்ந்திட்ட செய்தி கடலகத்திலிருந்து நமக்குத் தந்தி மூலம் எட்டியது. நம் காரியாலய ஆசிரியர்கள் கூட்டம் ஸ்தம்பித்து விட்டது. குமாஸ்தாக்களும் மானேஜரும் திடுக்கிட்டு, “நிறுத்து நிறுத்து” என்று ‘நமச்சிவாயமலருக்காக’ அச்சு கோர்க்கும் கம்பாசிட்டர்களிடம் கூக்குரலிட்டனர். அவ்வளவு தான், எங்கும் இருள், காரிருள், நிசப்தம் ஐயகோ! அந்த பரிதபிக்கத்தக்க நிலையை மீண்டும்நினைத்து, நினைவூட்டி துயரத்தில் நம் நேயர்களையும் ஆழ்த்த விருப்ப மில்லை.

என்ன செய்வது? அத்தனையும் பாழ், நமச்சிவாய முதலியார் அவர்களைப் பாராட்டிச் சீராட்டி வரைந்து வாழ்த்துகள் கூறின வசனங்கள், பாக்கள் யாவும் நம் முதலியார் அவர்களின் உயிரைக் காக்க முடியவில்லை. உள்ளங் கசிந்து, முதலியார் ஆற்றிய பெரும் பணியை உணர்ந்து, அவரால் மென் மேலும் தமிழர்கள் உய்ய வேண்டுமே என ஏங்கிய எல்லாப் பிற தமிழறிஞர்களும், தமது நேரத்தைக் கவனியாது, சிரமத்தைக் கவனியாது, முதலியார் பாலுள்ள வாஞ்சை மிகுதியால் வரைந்தனுப்பிய வாழ்த்துரைகளை, தளரா ஊக்கத்துடன் சேகரித்து, பொருட் செலவைக் கிஞ்சித்தும் கவனியாது வெளியிட யிருக்குங்கால் திடீரென்று, ஒரு நொடியிலே,—ஒரு நண்பர் கூறியது போல—‘வெண்ணெய் திரண்டு வரும்போது தாழியுடைந்தது’ போன்ற கதையாய் முடிந்து விட்டது.

## வாசகர்களுக்கு.

பெருமுயற்சியால் திரு முதலியார் அவர்கள் ஆண்டு நிறைவு விழாவின்போது, ‘நமச்சிவாய மல’ராக வெளியிட, இதிற் காணும் பேரறிவாளர்களிடமிருந்து அழகிய கட்டுரைகளைப் பெற்றோம். அஃது ஊழால் மாறுபட்டது. மேற்கொண்டு, திரு முதலியாரவர்களின் மறைவாற் கொண்ட இன்னலால் தளர்வுற்ற அறிஞர்களைத் தூண்டி, மாற்றியமைக்கத் துணிவு கொளாமையால், பெரும் பகுதி வாழ்த்துகளாகவே மிளர்வதற்கு மன்னிப்பதோடு அறிஞர்களின் தூய சிந்தை கண்டு மகிழவேண்டுகிறோம். மற்றும் பல அறிஞர்களின் கட்டுரைகள் வாழ்த்துரைகளாகவே யுள்ளமையால், பதிப்பிக்காமைக்குப் பொறுக்கவேண்டுகிறோம்.

—ஆசிரியர்.

நமச்சிவாய மலருக்கென தனித்தாள்கள் வரவழைத்தாய் விட்டது, கட்டுரைகள் சில வலியவும், சில சாதாரணமாயும், சில வற்புறுத்தல் பேரிலும் காலக்கிரமத்திலோ அல்லது காலந் தாழ்த்தியோ பெற்றாய் விட்டது. பல தமிழறிஞர்களை மிகுந்த பொருட்செலவின் பேரில் படமெடுத்து பிளாக்குகள் எடுத்தாய் விட்டன. அச்சு கோர்த்து, பிரசுரமாகவேண்டிய நேரத்தில் ‘கபீ’ரென்றாற்போல ‘குமார விகடன்’ தலையில் இத்தகைய பாரச்செய்தி

வீழ்ந்தால், என்னென்றிருக்கும் நினைத்துப் பாருங்கள். 'சொல்லிக் கொள்வதில் பயனேயில்லை' என்றுதான் விகடனும் இருந்தான். ஆனால் இம்மாத முதல் தேதி 'குமார விகடன் வராததற்குக் காரணத்தை யறியாதவர் சிலர் இருக்கின்றார்களே, அவர்களுக்காகத் தெரிவித்து விடவேண்டியது கடமையல்லவா? மற்றும், நீங்களும், தினசரியில் திரு. நமச்சிவாய முதலியார் அவர்கள் உயிர் துறந்த சேதியறிந்த போது, "குமார விகடன் நமச்சிவாய மலருக்காக என்ன பாடுபட்டிருப்பானே, அவன் தலையில் இப்படியும் விழுமா?" என்று நினைத்திருப்பீர்கள். என்னசெய்வது? துக்கம் என்னமோ சிறிது அதிகம்தான். ஆனால் அதற்கு மாற்று ஒன்றும் விரைவில் தென்பட்டது. நந் தமிழறிஞர்கள் விரைந்து வரைந்தனுப்பிய அத்தனைக் கட்டுரைகளையும்வீணே பயன் படுத்தாமலிருப்பதை விட, நமச்சிவாய முதலியார் அவர்கள் இறப்பதற்கு முன்னதாகவே எல்லாம் எழுதப்பட்டு விட்டபடியால், எல்லாம் வாழ்த்துரைகளாய்த் தானிருக்குமென நாமே முன்னுரையாகக் கூறிவிடுவதென்பது! என்ன? யோசனை சரிதானே?

தமிழ்ப் பண்டிதர்களுடைய எழுத்துக்களைத் தமிழர் அனைவரும் பார்க்கட்டுமே, அவர்களுடைய வாழ்த்துரைகளைப் படித்துப் படித்து, நன்றாக நமச்சிவாய முதலியாரவர்கள் உயிரைக் கவர்ந்து போன நமனைத்திட்டிக் கொட்டட்டுமே! — இத்தனைப் பெரியவர்களெல்லாம் வாழ்த்தியுங்கூட அவனுக்கென்ன அவ்வளவு நெஞ்சழுத்தம்!

அடுத்தபடியாக, ஒரு பெரிய மாறுதல் நமது குமார விகடன் சம்மந்தமாய் நிகழப் போகின்றது. எதைப்பற்றி யிருக்குமோ என்று உத்தேசிக்க ஆரம்பிக்காதீர்கள். சட்பட்டென்று சொல்லி விடுவதுதானே, நல்லது? குமார விகடன் பிரதி, இனிமேல் ஒரு அணா தான்! வெகு பேஷான காரியமல்லவா இது? பொருளாதார நெருக்கடி ஒரு பக்கம். பத்திரிகைகளின் போட்டா போட்டி நம்மிடம் இன்னும் தலைகாட்ட வில்லைதான் என்றாலும் கூட, சமீபத்தில் பத்திரிகைச் சம்பந்தமாய் காஞ்சீபுரத்தில் இரண்டுவித நோட்டீசுகளைப் பார்க்கும்படியாயிற்று. சாதாரணமாக கையில் கொடுக்கிற சின்ன நோட்டீசு என நினைக்காதீர்கள். சுவரொட்டி நோட்டீசுகள்—ராயல் அளவில்! ஒன்றில்,

"50 ஆண்டுகளாய்க் கீர்த்திவாய்ந்தது. உலகமெங்கும் நிருபர்கள். விலை அரையணாத்தான்" என்றிருந்தது. மற்றொன்றில் "கிழடுதட்டிய தல்ல ......உயிருக்கு அஞ்சி ஓடி ஒளிப்பதல்ல— விலை அரையணா" என்றிருந்தது. இன்னும் விளக்கமாய் விளம்பரப்படுத்த வேண்டுமா? முன்னாற் சொல்லப் பட்டது சுதேசமித்திரன். பின்னாற் சொல்லப் பெற்றது தினமணி

இப்படியாக, தினசரிப் பத்திரிகைகளெல்லாம் அரையணாவுக்கு உயிரைத் திரணமாய் மதித்து வெளிவரும்போது, நமது குமார விகடன் மாத்திரம் 'இரண்டணா' விலை கேட்பது சிறிது தமிழர்கள் நிலைக்கு உயர்ந்ததென்று நேயர்கள் முறையிடவே, இத்தகைய முடிவுக்கு வர நேர்ந்தது. என்ன, இனிமேல் உங்களுக்கெல்லாம் திருப்தி தானே?

ஓகோ, அது ஒரு சந்தேகமிருக்கிறதோ, அளவு, பக்கங்கள் முதலியன ஒன்றும் குறையவில்லை போங்கள்.

நேயர்கள் ஏராளமாய் குமார விகடனை ஆதரிப்பார்களென்று எதிர்பார்க்கலாமல்லவா? இன்னுமோர்—ஒரே ஒரு சேதி. நல்ல கிளேஸ் கடிதத்தில், நான்கு பக்கங்கள் மலர்தவறாமல் அழகிய படங்களோடு விகடன் வருகிறான் இனிமேல். ஆகவே, வாசகர்கள் மனமுவந்து விகடனை ஆதரிக்கவேண்டிய அவசியம் உண்டாய்விட்டது. மற்றோர் செய்தி மட்டும்கேட்டுவிடுங்கள், அதாவது இத்துடன் மூன்றாவது ஆண்டு விகடனுக்கு முடிந்துவிட்டது. அடுத்தது நான்காவது ஆண்டுப் பிறப்பு மலர். ஆகவே புதுமையான மணம் வீசும் என்று நிச்சயமாய் எதிர்பாருங்கள்; கிளேஸ் கடிதத்தில் நான்கு பக்கங்களோடு படங்கள் வருகின்ற புதுமை ஒன்றுதான், குமாரவிகடனது நான்காமாண்டு மலர்களில் காணப்படும் போலும் என்று நினைக்கவேண்டாம். முன் கூட்டியே சொல்லி இந் 'நமச்சிவாய மலர்' சம்மந்தமாய் ஏமாற்றம் ஏற்பட்டு விட்டபடியால், நேயர்கள் பொறுத்திருந்து, புத்தாண்டுப் புதுமைகளைக் கண்டு களிப்பார்களாக. இம் மூன்றாண்டுகளாய் குமாரவிகடன் பால் நேயர்கள் வைத்திருக்கும் அன்பை நாம் முற்றுமுணர்வோம். எத்தனையோ குறைகள் நமக்குத்தெரியாமலே இருந்திருக்கக் கூடும். அவ்வளவையும் பொறுத்துக்கொண்டு இதுவரை ஆதரித்துவந்த வாசகர்கட்கு நம் மனமார்ந்த மகிழ்ச்சிப் பெருக்கைத் தெரிவிக்கிறோம்.

இன்னும் ஒரே ஒருசெய்தி! பரவாயில்லை— சரி— போங்கள்—அடுத்தமலரில் அதைச் சொல்லுகிறேன்; மறந்துவிடாமல் வாருங்கள்.



திரிசிரபுரம். ஆ. காசிவிசுவநாதன்.

# சக்ரவர்த்தியும் :: :: ஜவகர்லாலும்

அது என்னவோ உண்மைதான்; பண்டித ஜவகர்லால் நேருவும், வேல்ஸ் இளவரசராயிருந்த புதிய சக்ரவர்த்தி எட்டாவது எட்வர்டும் இங்கிலாந்திலே ஒரேபள்ளிக்கூடத்தில் படித்தவர்கள். பள்ளிக்கூடத்துச் சிநேகிதம் மாத்திரமல்ல; இருவரும் ஒரே வகுப்பில் பயின்றவர்கள்.

ஒரே வகுப்பில் படித்த தோழர்கள் என்றால் தெரிகின்றதல்லவா? அவர்கட்குள்ள சம்மந்தமே எவரிடத்தும் காண இயலாத ஓர் அலாதியான விஷயம். அவர்களுடைய நட்பின் சிறப்பைப் பிறவற்றோடு ஒப்பிடமுடியாது. அது மின்சார சக்தியைப் போன்று ஊடுருவிச்சென்று, என்றென்றும் உடலில் தோய்ந்து கிடப்பது. சிற்சில சமயங்களில், காதல் சக்தியும், உறவினர் வாஞ்சையுங்கூட அதனை எதிர்த்து நிற்க முடியாமல் அழிந்து ஒழியும். இத்தகைய அனுபவம் பெறாதவர், 'தமக்கும் இத்தகைய பேறு பெறுதற்கில்லையே' என்று நொந்து கொள்வதைத் தவிர, இஃது எவ்வாறு உண்மையாம் என்று ஐயுறுதற்குச் சிறிதும் அருகரல்லர்.

அரசியல் உலகத்தில் வேண்டுமானால், கொஞ்சதூரம் வரை 'பள்ளிப் பிள்ளைகள்' என்று ஒதுக்கி வைத்துவிடலாம்; ஆனால் உலகத்திலே மாணவர் கூட்டம் தனக்கென்று தனிக் கௌரவத்துக்கு இடம் தேடிக்கொண்டுவிட்டது. பணச்செருக்காலோ, அல்லது சாதி வேற்றுமையாலோ எழுகின்ற 'உயர்ந்தான் தாழ்ந்தான்' என்ற பாகுபடு மாணவர்களிடையே தொடக்கம் முதல் இறுதிவரை கிடையாது. அனைவரும் சரிநிகர் சமானமாய், பள்ளித் தோழர்களாய்ப் பழகுகின்றனர்; உணர்கின்றனர்: நடக்கின்றனர்! (நடுநிலைமை என்ற பெயர் மூலம் அளிக்கப்படும் அரசாங்க அனுசரணையின் பேரில் இந்த அடிமைப்பட்ட இந்திய நாட்டில்மட்டும், மாணவர் கூட்டத்திலும் சாதிப்பிரிவு சிற்சிலசந்தர்ப்பங்களில் தலைகாட்ட முடிகின்றது. ஆனால் இத்தகைய சாதியுணர்ச்சி, சேட்டும நிலையை இப்போது எய்திவிட்டபடியால் விரைவில் இறந்துபடும் என்று உறுதியாய் நம்பக்கூடும்.)

பள்ளிக்கூடத்துச் சிநேகிதர்களிடையே பணத்துக்காக முழுமதிப்பும் அளிக்கின்ற பழக்கம் கிடையாதென்று சொன்னேனல்லவா, அத்துடன் இல்லை. அவர்களிடம் பரம்பரைப் பெருமைக்கும் குடும்ப செல்வாக்குக்கும்கூட இடம் கிடையாது. அவர்கள் கவனிப்பதெல்லாம், ஒன்றே ஒன்றைத்தான்; அந்த ஒன்றும் அறிவுதான்! பாடங்கள் முதற்கொண்டு, ஒழுக்கம் உட்பட, விளையாட்டுகள் ஈறாக ஒவ்வொரு மாணாக்கனையும் அறிவைக்கொண்டுதான் அளவிடுகின்றார்கள். அறிவு ஒன்றினுக்குத்தான் பெருமையளிக்கின்றனர்; அது ஒன்றுக்குத்தான் பயப்படுகின்றனர்; அதை யபிவிருத்தி செய்வதில்தான் ஒவ்வொருவரும் முனைந்து நிற்க முற்படுகின்றனர். தமது ஆசிரியர்களுடைய அறிவைக்கூட நிறுத்துப்பார்த்து ஏற்றவோ தூற்றவோ ஆரம்பித்துவிடுகின்றனரென்றால், பணத்துக்குத் தனிப்பெருமை யளிக்க அவர்கள் ஒருப்படுவதுமில்லை, எதிர்பார்ப்பதுமில்லையென்பது ஓர் வியப்பல்லவே! நிற்க பண்டித ஜவகர்லாலும், வேல்ஸ் இளவரசராயிருந்த புதிய மன்னரும் ஒரே வகுப்பில் படித்தவர்கள்என்கின்ற உண்மையை அடிப்படையாய் வைத்துக்கொண்டு, அவர்கள் இருவருக்குமுள்ள நெருக்கத்தைப்பற்றி எத்தனையோ ஆச்சரியமான ருசிக்கத்தக்க சம்பவங்களைக் கதைகதையாய்க் கூறுகின்றனர். ஜவகர் இங்கிலாந்திலிருக்கும்போது டாக்டர் கிச்சுலுகூட இங்கிலாந்தில்தான் இருந்தார். இவர் மூலமாகவும், மற்றும் அங்கு போயிருந்த பிற பல இந்தியர்கள் மூலமாகவும், இவ்விருவருடைய தோழமை பற்றி பல நுணுக்கமான செய்திகள் கிடைத்ததாகப் பலர் வெளியிடுகின்றனர். ஆனால், பண்டித ஜவகர்லாலுக்கு இதனைப்பற்றி வெளியிடுவதற்கு அவசியமான சந்தர்ப்பங்கள் இற்றைவரை நிகழாத காரணத்தாலோ, அல்லது வேறு எதனாலோ இந்த இரண்டு தோழர்களுடைய நட்

பின் நெருக்கத்தைப்பற்றின செய்திகள் நல்ல ஆதாரத்தோடு வெளி வருவதற்கில்லை. ஆயினும், மறுத்துரைக்க எவரும் இற்றைவரை முன் வராததால், ஒருக்கால் அனைத்தும் உண்மையாயிருத்தலுங்கூடும் என்கின்ற நோக்கம்பற்றி, சக்கிரவர்த்தி எட்டாம் எட்வர்டு சம்மந்தமாயும் பண்டித ஜவகர்லால் சம்மந்தமாயும் உலவிவருகின்ற சிற்சில செய்திகளைக் கீழே தருகின்றேன். நான் இவ்வளவு தூரம் பீடிகை போட்டுக்கொண்டு துவக்குவதன் நோக்கம் நன்கு புலனுகின்றதா? அதாவது சேதிகளின் உண்மைக்கு நான் ஒருசிறிதும் உத்தரவாதமல்ல என்பதைத்தான் வற்புறுத்துகிறேன்;பிறிதொன்றுமில்லை.

சுமார் 20-ஆண்டுகட்கு முன்னம் பள்ளிக் கூடத்திலே மாணவர்களாய் ஓடியாடித்திரிந்த இருதோழர்களில் ஒருவர் இன்று பிரித்தானிய சாம்ராஜ்யத்துக்கே சக்ரவர்த்தியாய்த் திகழ்கின்றார். மற்றவராய பண்டித ஜவகர்லால் 36-கோடி மக்களின் ஏகப்பிரதிநிதிச் சபையாகிய அகில இந்திய தேசியக் காங்கிரசுக்குத் தலைவராய்த் தேர்ந்தெடுக்கப்பெற்று, லட்சுமணபுரியிலே தலைமை வகிக்கப் போகின்றார். இருவருடைய வாழ்க்கையிலும் ஒரு மூன்றுமாத காலத்துக்குள்ளாக, நெருக்கடியான சந்தர்ப்பத்தில் உலகத்தையே பொறுத்து நிற்கின்ற உச்ச நிலைப்பதவிகளை எய்தியிருக்கின்றனர். வேல்ஸ் இளவரசராயிருந்ததால், அவரைப் பொறுத்த மட்டில் பிற்கால பிரித்தானிய மன்னர் என்று நினைத்து விடக்கூடும். ஆனல் அவருடன் படித்த ஜவகர்லாலைப் பற்றி அப்போது எவரேனும் ஜவகர்லாலின் வாழ்க்கை இத்தகையதாய் மாறும் எனக் கனவு கண்டிருக்க முடியுமா? இது இவ்வாறிருக்க, இன்று உலக கவனத்தையே ஈர்த்து நிற்கின்ற இவ்விரு வாலிபர்களின்—பிரத்யட்ச உலகமறியாத-மாணவ வாழ்க்கை ஒரு தனித்த போக்கைக் கொண்டது. ஈதென்று சொல்வதற்கில்லை. இயற்கையாக விளையும் பழக்கத்தைக் காட்டிலும் இளவரசர்க்கும் ஜவகருக்கும் தனிப்பட்ட உள்ளன்பால் பிணைக்கப்பட்ட உயர்ந்த நட்பு வேரூன்றி நாளடைவில் வளர வாரம்பித்தது. பள்ளிக்கூடம் விட்டதும், விளையாட்டுகள் முதல்,உலா, கேளிக்கைகள் வரையில் பெரும்பாலும் ஒன்றாய்த்தானிருப்பராம். சாதாரண இரு நண்பர்களைப்போலப் பழகிக் கொண்டாலும், ஆடம்பர வாழ்க்கையிலே அபரிமிதமான உத்சாகத்தோடு ஒருவர்க்கொருவர் போட்டி போட்டு சளைக்காமல் தமக்கு ‘பெருமை’ தேடிக் கொண்டு வந்தனர்.

பண்டித ஜவகர்லாலை இப்போதல்லவா, இந்தியர் இந்தியாவின் முடிசூடா மன்னர் என்கின்றனர். முதன் முதலில், வேல்ஸ் இளவரசர்தான் தமது நண்பர் ஒருவர்க்கு நமது ஜவகரை அறிமுகப்படுத்துமுகத்தான்,

“இவர் யாரென்று தெரிகின்றதா? இவர்தான் இந்தியாவின் முடிசூடா இளவரசு ஜவகர்லால்நேரு. எனது தோழர், என்னுடன் படித்துவருகின்றார்” என்று கூறினாராம்.

ஓர் முறை ஜவகர்லாலும் இளவரசரும் துணிமணிகள் ஏதாவது பார்த்துவிட்டு வரலாமென்று ஓர் பெரிய ஜவுளிக் கடைக்குள் நுழைந்தனர். இளவரசர் முன்னதாக மோட்டாரை விட்டிறங்கி கடைக்குள் புகுந்துவிட்டார். கடைக்கார், வெளிப்பார்வைக்காக (Show) ஓர் விலையுயர்ந்த படுக்கைவிரிப்பை முன்னால் தொங்கவிட்டு வைத்திருந்தார். அது நூற்றுக் கணக்கான பவுன்விலையுள்ளது. அது இளவரசரின் கவனத்தைக் கவர்ந்துவிட்டது; அதை நன்றாகத் தொட்டுப் பார்த்து, அதன்பேரில் பிரியப்பட்டு அதன்விலை இன்னதென்பதை அதிலிருந்த சீட்டின் மூலம் அறிந்த பின்னர் திடுக்கிட்டுவிட்டார். வாய்திறக்காமல் உள்ளேசென்று இதர துணிமணிகளைப் பார்த்துக் கொண்டிருக்கும்போது நம் பண்டித ஜவகர்லால் வந்தார். இவரைப்பார்த்ததும், இளவரசர் “ஜவகர்! வெளிப்பார்வைக்காக வைக்கப்பட்டிருக்கிற அந்த விரிப்பைப் பார்த்தாயா? அது எவ்வளவு மனக்கவர்ச்சியா யிருக்கிறது!” என்று கூறவும், பண்டித ஜவகர்லால்,

“ஆம், ஆகையினல்தான் அதை பில்போட்டு கட்டி மோட்டாரில் வைக்கச்சொல்லி விட்டேன்” என்றாராம்.

வேல்ஸ்இளவரசரின் செலவுக்காக ஒதுக்கப்பட்ட மான்யத்தைவிட, பண்டித ஜவகர்லாலுக்கு அவரது தந்தையார் மோதிலால்நேரு அனுப்பிவந்த பணம் அவ்வளவு குறைந்ததல்ல! என்பது இதனல் நன்கு விளங்குகின்றது.

இதைப்போன்ற பள்ளிக்கூடத்துப் பழங்கதைகள் இன்னுஞ் சில சொல்லப் படுகின்றன. அவர் இவர் விருந்தினராகவும், இவர் அவர் விருந்தினராகவும் பற்பல சந்தர்ப்பங்களில் போவதுண்டு என்றும், இளவரசரின் நண்பர்களில் பண்டித ஜவகர்லால் மிகமுக்கியமானவர் என்பதை காலஞ்சென்ற ஜியார்ஜ் சக்கரவர்த்தி முதல் ராஜ குடும்பத்திலுள்ள எல்லோரும் அறிவர் என்றும் தெரிகிறது. இதெல்லாம் இவ்விரு வாலிபர்களின் வாழ்க்கையில் ஒரு பெரிதல்ல! ஆனல் அத்தகைய ஆடம்பர வாழ்க்கையில் ஈடுபட்ட இருவர்களுடைய வாழ்க்கையும் மகத்தான மாறுதலடைந்து, இதுகால் மாட்சிமையுற்றிருக்கிறது. ‘எளிமை’ என்பது இருவருடைய உள்ளத்தையும் கொள்ளை கொண்டு, உலகமக்களின் ஒருமைப்பாட்டுரிமையிலே கண்ணுங் கருத்துமாயிருக்கும்படி வைத்துவிட்டது. இருவருடைய தோள்களின் பேரிலுமுள்ள சுமை சாதாரணமானதன்று. ஆக்கவும், அழிக்கவும் வல்ல

ஆன்மசக்தி இல்லையென்றாலும், உலகமக்கள் 'ஓ ஓ' எனஆர்வத்தோடு இருவர் வாயையும் பார்த்த வண்ண மிருக்கின்றனர்.

'அரசியல் விஷயங்களில் சம்மந்தபட்டவரல்ல சக்ரவர்த்தி' என்பது மனிதன் தனதுசௌகரியத்திற்காக ஏற்படுத்தி வைத்திருக்கின்ற, அல்லது சொல்லிக்கொள்வதற்காக ஏற்படுத்தி வைத்திருக்கின்ற ஒரு முன்னெச்சரிக்கையான ஐதீகம். ஒருசில மக்களால் ஏற்படுத்தப்பட்ட இத்தகைய கட்டுப்பாடுகட்கு ஏனைய மக்கள் அடங்கித்தான் நடக்கின்றன ரென்றாலும், அதற்கும் ஓர் வரம்பு கற்பித்து வைத்திருக்கின்றனர். அவ்வரம்பை விட்டு, கட்டுப்பாடுகள் அப்பாற் செல்லுமாயின், மக்கள் அத்திட்டங்களைத் தகர்த்தெரிகின்றனர். இது உண்மை; கண்கூடு: அனுபவம்!

மற்றும் அரசியல் என்று ஒதுக்கி வைப்பதற்கு,அறிவைக்கொண்டு கூர்ந்து நோக்கு மிடத்து யாதொரு எல்லையும் ஏற்படுத்த முடியாதவாறு எல்லா விஷயங்களும் ஒன்றோடொன்று பின்னிக் கொண்டுதா மிருக்கின்றன. சமுதாயம், பொருளாதாரம், விஞ்ஞானம், இலக்கியம், கலை முதலான பல்வேறு துறைகளும் எதேச்சையான நாடுகளில் பிரிக்க முடிகின்றனவே ஒழிய, அடிமை நாடுகளில் இவ்வெல்லாத் துறைகளும் ஒன்றோடொன்று கலந்தே யிருக்கின்றன. உதாரணமாக, சமுதாய முன்னேற்றத்துக்கு மிகத்தீங்கு பயப்பதாகிய 'தீண்டாமை' எனும்பழக்கம் ஒழிக்கப்பெறுதல் வேண்டும் என்கிற முயற்சியில், சில 'உயர்' சாதியினர் எனப்படுவோர் தமது பெருளாதாரத்தைக் குறைப்பதோடல்லாது, தமது பண்டைக்காலச் சாத்திரத்தில் கூறப்பெற்ற விஞ்ஞான இலக்கியக் கலை முதலானதுகட்கும் ஊறுவிளைப்பதாய் ஊளையிடுவராகின்றனர். அரசாங்கம் பிறிதோர்புறம், 'தீண்டாமை விலக்கு'ப் பிரச்னையை ஓர் அரசியல் செய்தியாய் பாவித்து, நாட்டுக்கே ஒவ்வா நடவடிக்கைகள் எடுத்துக்கொள்வதிலும் ஈடுபடுகின்றது. எனவே, அடிமை நாடுகளில் பின்னணியிலிருக்கும் எக்குறைபாட்டை யெடுத்துக்கொண்டுசீர் திருத்த முயன்றபோதிலும், அது இறுதியில் அரசியல் விஷயமாய் வெகுவிரைவில் மாறிவிடும். இது பற்றித்தான் காந்தியடிகள் அண்மையில், கதர் பிரசாரம், மதுவிலக்கு, தீண்டாமை ஒழிப்பு முதலான மக்கள் ஒழுக்கத்தையும் பொருளாதாரத்தையும் சீர்திருத்தும் செயல்களில் முனைந்தபோது, நம் காருண்ய பிரித்தானிய அரசாங்கம் 'ஓ! இது அரசியல் குழப்பம்!' என்று குறுக்கிட்டு, அடக்கி, ஒடுக்கிவிட்டது. ஆதலின், 'இது அரசியல்' என்று உலகமக்கள் ஒருமிக்க எதனையும் பிரித்து வைக்க முடியாதவாறு, மனிதன் அவனவன் அறிவைக் கொண்டும் திறத்தைக் கொண்டும் அரசியலுக்கு உட்பட்டதாகவோ, அல்லது புறம்பானதாகவோ, கையாண்டு கொள்வதற்கு எல்லாச் செய்திகளும் தாராளமாக இடமளிக்கின்றன! சிறிது உய்த்துணர வேண்டும்!!

இவ்வுயரிய உண்மையை உணர்ந்தவர் நமது புதிய மன்னர் எட்டாவது எட்வர்டு. அவர் புகுந்து பார்க்காத ஏழைத் தொழிலாளருடைய குடிசில்கள்லண்டனுக்கு அருகாமையில் இல்லவேயில்லை. தொழிலாளர்கட்கு இந்திய நாட்டைப் பற்றினமட்டில் எவ்வாறு பண்டித ஜவகர்லாலிடத்து அதிக நம்பிக்கை வேரூன்றி கிடக்கின்றதோ, அதேபோல, இங்கிலாந்திலே, தொழிலாளர்களின் அன்புக்கு உறைவிடமாகப் புதியமன்னர் விளங்குகின்றார். நேற்றுவரை, அவரது கையால் நூற்கப்பட்ட துண்டுகளும், கழுத்தங்கிகளும் ஏழைகள் சங்கத்துக்கு இலவசமாக அளிக்கப்பட்டு வருகின்றன. அவரது பழந்துணிமணிகளும், அவரது மனதுக்குப் பிடிக்காத துணிகளும் ஏழைத் தொழிலாளர்கட்கென்று, காப்பாற்றப் பெற்று, ஒப்படைக்கப் படுகின்றன. எல்லா மக்களையும் சமத்துவமாய்க் கருதி, உரையா

52, பாந்தியன் ரோடு எழும்பூர்
2—2—36.

அன்பார்ந்த நமசிவாய முதலியார் அவர்களே!

இம்மாதம் நிகழ்வதாயுள்ள தங்களுடைய 61-வது பிறந்த தினத்தையறிந்து பெரிதும் மகிழ்ச்சி யடைகிறேன். எதிர்காலத்தில் யாதொரு முன்னேற்றமுங் காணமுடியாத நிலையில், 22 ஆண்டுகளுக்கு முன்னம் ஒரு சின்ன பள்ளிக்கூடமாயிருந்த அந்த மேரி ராணிக் கல்லூரி சம்மந்தமாகத்தான் நாமிருவரும் சேர்ந்துழைக்க ஆரம்பித்தோம்.

அங்கே, தமிழ்ப் பிரசங்கங்கள் புரிந்துகொண்டிருந்த பல வருஷங்களில், தாங்கள் கல்லூரியின் வளர்ச்சிக்காக எடுத்துக்கொண்ட முயற்சி கொஞ்சமல்ல.

உயர்தரக் கலாசாலையில் படிப்பவர்களுக்கு மட்டுமல்ல, பொது மக்களுக்குக்கூட அவர்களுடைய தமிழறிவில் எவ்வளவோதூரம் முற்போக்கு ஏற்படுத்த உழைத்திருக்கின்றீர்கள் என்பதை நான் நன்குணர்வேன். இக்காலத்தில் தமிழ்க்கல்வியிலும் சிறிது அதிக கவனம் எடுத்துக்கொண்டு வருவதைப் பார்க்கத் தங்களுக்குப் பேரானந்தம் உண்டாகுமென்றே நினைக்கிறேன்.

ஊக்கத்தோடு தங்கள் வேலையைத் தொடர்ந்து நடத்துவதற்கு இன்னும் பல்லாண்டுகள் நீங்கள் நீடூழி வாழும்படி இறையால் காக்கப்படுவீர்கள் என்று நான் நம்புகிறேன்.

டி லா ஹே

டிப் பழகி வருகின்றார். பெருமை என்பதைச் சிறிதும் பாராட்டாதிருக்கின்றார். கூட்டங்களில் கலந்துகொள்வது முதல், தம்மைப்பார்க்கவருவோர்க்கு இனியசொல் கூறி உதவி புரிதல்வரை அவரது நற்குணம் பரவி நிற்கின்றது.

சில ஆண்டுகட்கு முன்னர், இந்தியாவிலிருந்து ஓர் நண்பர் அவருக்கு எழுதின கடிதம் வருமாறு:

"இளவரசே!

தாங்கள் பிறந்த அதே வருடம், அதே மாதம், அதே தேதியில்தான் நான் பிறந்தேன். நிமிஷங்கள் வேண்டுமாயின் மாறுபட்டிருக்கலாம்; ஆனல் அதே மணியில்தான் நானும் பிறந்தேன். என்றாலும், நான் ஒரு ஏழைக்குடும்பத்திலே பிறந்து, வறுமையிலேயே படித்து, வேலையற்று, நல்ல உணவற்று அலைகின்றேன். ஆனல், தாங்களோ பிரித்தானிய அரசர் புதல்வராய்ப் பிறந்து, வேல்ஸ் இளவரசராய் உலக சம்போகங்கள் அனைத்தையும அனுபவிக்கின்றீர்கள்.

"மக்கள் அனைவரையும் கடவுளே படைத்து காத்து வருகின்றனரென்றும் அவரிடத்தில் பாரபட்சம் இல்லையென்றும் உலகத்தார் கூறுகின்றனரே, தங்கள் நிலை இப்படியிருக்க, என் நிலை மாத்திரம் என் இவ்வாறு இருக்கிறது?"

என்று மனம் நொந்து எழுதியிருந்தார். அந்த நண்பருக்கு சிலமாதங்களுக்குள்ளாக எதிர்பாராமல் வேல்ஸ் இளவரசராயிருந்த இம் மன்னரிடமிருந்து பதில் கிடைத்தது! அதில்,

"அருமை நண்பரே,

எனது நிலைமையைப்பார்த்து நீங்கள் பொறாமைப் படுகின்றீர்கள். ஆனல், என்னைப் பொறுத்தமட்டில் கடவுள் எனக்கு விதித்த தண்டனையாகவே நான் கருதுகின்றேன். நான் பரிபூரணமான ஆனந்தத்தில் மூழ்கியிருக்கிறேன் என்பதாகத் தாங்கள் நினைப்பதாயிருந்தால் அது முற்றுந்தவறு; ஏனெனில், நான் ஒரு தண்டனையை அனுபவிப்பதாய் உணர்கின்றேன் என்று முன்னமேயே சொன்னேனல்லவா?

"தன்னைத்தான் அறிந்துகொள்வது என்பதே பெரியவிஷயம்; இவ்வாறிருக்க, பிறர் நிலையிலிருந்து அதனை உணர்ந்தும் விடுதல் முடியுமா? எனவே, எல்லவர்க்கும் இன்ப துன்பமுண்டு. இவற்றைக் கூட்டியும் குறைத்தும் அறிவு ஒன்றினல் மட்டுந்தான் அனுபவிக்கலாம். ஆகவே, தங்கள் நிலையை விட உலக மக்கள் அனைவரும்,—அரசர்கள்கூட—மிகுந்த மோசமான நிலையில் இருந்துவருவதாய் நினையுங்கள். கூடுமானல் அப்படி பாவித்தும்விடுங்கள். உடனே, உங்களுக்கு எத்தகைய மகிழ்ச்சி உதயமாகிறது பாருங்கள் "அதிகமாய் மனத்தை ஓடவிடாதீர்கள். அமைதியிலேயே நிலை நிறுத்துங்கள்."

என்றிருந்தது. எத்தகைய ஆழ்ந்த அனுபவம் பெற்ற கருத்து பாருங்கள்! எனவே, அரச குடும்பத்தில் பிறந்து வளர்ந்தவரெனினும், உண்மையான உலக வாழ்க்கையை அறிந்து கொள்வதற்கு இவருக்கு வசதியற்றுப் போகவில்லை. இதுவரை எவரும் சுற்றித்திரிந்து பழகியிருக்க முடியாதபடி புது மன்னர் உலக முழுதும் சுற்றி ஏராளமான அனுபவம் பெற்றிருக்கின்றார். பள்ளிக்கூடத்திலே யிருந்த வாழ்க்கையின் போக்கு வேறு; தற்கால நிலை வேறு. அறவே வேறு.

பண்டித ஜவகர்லால் வாழ்க்கையை நாம் நன்கறிவோம். விரிந்த அறிவும், பரந்தநோக்கமும், அன்பு சுரக்கும் உரன் கொண்ட நெஞ்சும் படைத்த பண்டித ஜவகர்லால் இற்றைய இந்தியாவின் தனித் தலைவராய்த் திகழ்கின்றார்.

இவ்விரு உலகப் பெரியார்களும் தத்தம் மாறுபட்ட வாழ்க்கையில்—(ஆனல் ஒரே, போக்கில்) கலந்துகொள்வதற்கு எண்ணினராம். இதனை முதன் முதலாக மன்னர்தான் யோசித்து, பண்டித ஜவகர்லாலை அரண்மனைக்கு வரவேற்று கலந்து பேச வேண்டுமென்று வேண்டினராம். பண்டித ஜவகர்லால், "பொதுமக்கள் வேறுவிதமாய் நினைத்துக்கொள்வர்; அனவசியமாக இதற்கேன் இடங்கொடுப்பானேன்?" என்றுகூறி சந்திக்க மறுத்து விட்டாராம். டில்லிப் பத்திரிகைக்கு ஒரு மாஜி பார்லிமெண்டு அங்கத்தினர் இவ்வாறு எழுதியுள்ளார்.

"வாழ்க்கைச் சரித்திரமே நன்றாகப் பேசுகின்றதே; அப்படியிருக்க நேர்பட அவரிடம் பேச்சென்ன? அதனல் அவருக்குத் தொந்தரைதானே ஒழிய வேறில்லை."

சி. சௌடப்ப அய்யர்
3, ரேஸ் கோர்ஸ், கோயம்புத்தூர்.
27—1—36.

திரு. நமச்சிவாய முதலியார் அவர்களுடைய விழா வன்று நான் சென்னைக்கு வரலாமென்றிருக்கிறேன். 1910வது ஆண்டிலேதான் நான் முதன் முதலாக முதலியார் அவர்களின் பிரசங்கத்தை விக்டோரியா டவுன்ஹாலில் கேட்டேன். அது முதல் தமிழறிவில் எனக்கு ஓர் நன் மதிப்பு ஏற்பட்டிருக்கிறது. அவரது தமிழறிவுக்குஒப்பாக சம்ஸ்கிருத அறிவு படைத்த காலஞ் சென்ற பேராசிரியர் எம். ரங்காச்சாரி அவர்களைத்தான் கூற முடியும். தமிழிலுள்ள இவரது நாவன்மை, ஆங்கிலத்தில் டாக்டர் பெசண்ட் அம்மைக்குத்தான் உண்டு. இவர் பிறந்த தின விழாவைமிகவும் காலந் தாழ்த்தித்தான் கொண்டாடப் போகின்றோம்; எனினும் மிகுதியும் வரவேற்கப் பாலதே............

சென்னை நகர சபையைச் சார்ந்த வடபாரிசத்து ஆசிரியர்கள் சங்கத்துக் காரியதரிசியும், நகர சபைக் கலாசாலைத் தலைமை யாசிரியருமான திருவாளர் **மோகன சுந்தர முதலியார் அவர்கள்,** கண்டுள்ளதாவது:—

இம் மாகாணத்திலே ஆரம்பக் கல்விக்காக உயர் திருவாளர்: நமசிவாய முதலியாரவர்கள் செய்துள்ள வேலை மிகுதியும் மெச்சற்பாலதாகவும், முதல் தரமானதாகவும் இருக்கிறது. அறிவு கொளுத்தும் நூதன முறையில் அவருடைய புத்தகங்கள் ஒப்பற்று விளங்குகின்றன. எந்தப் புத்தகத்தையெடுத்துக் கொண்டாலும், அதில் ஒவ்வொரு பக்கமும் தனிச்சிறப்போடு கூடியிருக்கிறது. சின்னஞ் சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரையில் படித்த மாத்திரத்தில் எளிதில் விளங்கி, உள்ளத்தில் பதித்துக் கொள்ளத் தக்க வகையில் கருத்துக்களும் நடையும் அமைந்திருக்கின்றன.

தேர்ச்சி பெற்ற அறிவும், பழுதுபடா ஒழுக்கமும், சாந்த குணமும், இனிய சொற்களும் வாய்க்கப் பெற்றதால் தான், தமிழ் நாடு முழுதும் முதலியார் ஒரு தனிப் பெருந் தமிழ்ப் பண்டிதராய் விளங்குகின்றார்.

என்று அண்மையில் ஜப்பானியக்கவி 'நொகுச்சி' என்பார் காந்தியடிகளிடம் பேச முடியாததனால் கூறினரல்லவா? அதைப்போல ஜவகர்லால்நேருவும் எண்ணிவிட்டார் போலும். இல்லாவிடில், "பெரியார்கள் தத்தம் வாழ்க்கை மூலம் எப்போதும் பேசிக் கலந்துகொண்டு தாமிருக்கின்றனர்" என மத போதகர்கள் கூறிப் போந்தனரே, அது ஒருகால் மெய்யோ என்னவோ!

எவ்வாறேனும் இருந்துபோகட்டும். புதிய மன்னர் எட்டாவது எட்வர்டு, பண்டித ஜவகர்லால் ஆகிய இரு பெரியார்களால் உலகத்தில் பெரும் பயனும், மாறுதலும், முன்னேற்றமும் விளையுமென நாம் எதிர்பார்ப்போமே!






1910-வது ஆண்டிலே கலாசாலைகளின் இன்ஸ்பெக்டராயிருந்த ராவ்பகதூர் வில்லியம்ஸ் பிள்ளை, B. A., F. M. U. என்பார் முதலியார் அவர்களின் புத்தகமொன்றுக்கு முகவுரையாக எழுதியுள்ளதாவது:—

தாய் மொழிகளில் பயிற்சி பெறுவதென்பது முற்றும் புறக்கணிக்கப் பெறுகின்றது; இஃதோர் வருந்தத்தக்க உண்மையாகும். தாய்மொழிகளிலே ஏதேனு மொன்றில் பெரும் நிபுணத்துவம் பெற்று வயிற்றுப் பிழைப்பைத் தேடுவதைக் காட்டிலும், ஆங்கிலத்திலே நுனிப்புல் மேய்ந்து வருவாய் தேடிக்கொள்வது இக்காலத்தில் இலகுவா யிருப்பதால் சம்ஸ்கிருதம் உட்பட இந்திய மொழிகளெல்லாம் புறக்கணிக்கப் பெறலாயின. தாய் மொழிப் பயிற்சி கீழ் நோக்கிப் போகும் வேகத்தைப் பார்த்தால், வெகு சீக்கிரத்தில் இந்து மாணவர்களெல்லாம் கம்பனையும் காளிதாசனையும், திருவள்ளுவரையும் வில்லிப்புத்தூராரையும் இன்னாரென்றே தெரியாமல் விழிக்கப்போகின்றனர்; ஆனால் வர்ஜிலைப் பற்றியும் ஹோமரைப் பற்றியும், ஷேக்ஸ்பியரைப் பற்றியும் மில்டனைப்பற்றியும் சண்டப் பிரசண்டம் புரிவர்.

இப்படிப் பொதுவாக யேற்பட்ட புறக்கணிப்புக்குத் தமிழும் உட்பட்ட தெனினும், நல்ல வேளையாக முதிர்ந்த அறிவு பெற்ற ஆறுமுக நாவலர், தாமோதரம் பிள்ளை, மகா மகோபாத்யாய சுவாமிநாதய்யர், மதுரைத் தமிழ்ச்சங்க அங்கத்தினர்கள் முதலானோர் செல்லரித்துப்போன தாள்களை யெல்லாந் திரட்டி அரிய தமிழ் நூற்களாய், வெளியிட்டு தென்னிந்தியா இலங்கை முதலான இடங்களில் வதியும் தமிழர்கள்அனைவர் நலத்துக்கும் வழிகாட்டியுள்ளார்.

இத்தகைய அறிஞர்களின் அன்பினாலும் போப், கால்டுவெல் போன்ற ஐரோப்பியர்கள் தமிழ்மொழியைப் புகழ்ந்ததனாலுமே, இன்றும் இது ஒரு சிறு பான்மையரால் நன்கு வளருவதாகின்றது.

இக் கலப்பற்ற தூயமொழித் தமிழை வளரச் செய்வதற்கு அரும்பாடு பட்ட மிக மிகச் சிலரில் திரு: நமசிவாயமுதலியார் அவர்களும் ஒருவராவார்.

ஏனைய நூல்களோடு, ‘டிரமெடிக் இண்டர்லூட்’ எனும் சிறு தமிழ் நாடகங்களைக் கொண்ட புத்தகத்தையும் வெளியிட்டுள்ளார். இதில் உயர்ந்தபல்வேறுச் செய்திகள் சம்பாஷணை தோரணையிலே, அழகான, தூய, எளிய நடையில் எழுதப் பெற்றிருக்கிறது.

பேச்சுகள் மிக ருசிக்கத்தக்க முறையில் போதிக்கத் தக்கனவாயு முள. சொந்தச் சிறு பாட்டுகள் எளிதாகவும் இன் பூட்டுவதாகவும் அமைந்து, புத்தகத்துக்கே தனிச்சிறப்பை யளிக்கின்றன.

பொதுமக்கள் மாத்திர மல்லாமல், நல்ல தூய தமிழ் எழுத விழையும் மாணவர்களுக்கும் இது நல்ல மாதிரிப் புத்தகமா யமைதல் வேண்டும்.

தமிழ் நாட்டவருக்கு தோழர் ஈ. வே. ராமசாமி அவர்களை அறிமுகஞ் செய்து வைப்பது என்பது குறும்புத்தனமாகும். நெடு நாட்களாய்க் கும்பகர்ண சேவை செய்து வந்த நம் பாமர மக்களைக் ‘குடியரசு’ எனும் குத்தூசி கொண்டு வீறிட்டெழும்படிச் செய்த பெருமை இப்பெரியாருக்கே தனியுரிமை. சமூக சீர்திருத்தம் என்பதைத் தமது ‘சுய மரியாதை’ எனும் கட்சியால் தனியுரிமையோடல்லாது தமது தனியுடைமையாகவும் பாவிக்கின்றார்.

—ஆசிரியர்.

## ஈ. வே. ராமசாமி

பண்டிதர் நமசிவாய முதலியார் அவர்களது 60-ம் ஆண்டு பூர்த்திச்சமயத்தில் பல பெரியோர்கள் பண்டிதரைப் பாராட்டி வைத்து அவரது தொண்டினைப்போற்றுகையில் நானும் கலந்து ஏதாவது சில வார்த்தைகள் கூறுவது பொறுத்த மற்ற தாகாதென்றே கருதுகிறேன்.

ஏனெனில் பண்டிதர் நமசிவாயமவர்கள் தமிழ் நாட்டிலுள்ள பண்டிதர்களில் 100-க்கு 90 பேர்கள் போன்று மதப் பற்றாலும் புராணப் பற்றாலும் மூட நம்பிக்கையாலும் குருட்டுப் பழக்க வழக்கங்களாலும் பீடிக்கப்பட்டு தங்களது பாண்டித்யத் திறமையினால் மக்களை மாக்களாக்கும் அழுக்கு மூட்டைக் கூட்டங்கள் போல் அல்லாது பெரிதும் பகுத்தறிவுக்கு மதிப்புக் கொடுத்து எதையும் பகுத்தறிவுக் கண்ணால் பார்க்கும் தைரியமுடைய ஒரு உண்மைப்பண்டிதராவார். இப்படிப்பட்ட இவருக்கு அதற்குள் 60 வயது ஆகிவிட்டது என்பதை நினைக்கும் மனதுக்கு சங்கடமும் இன்னும் இவர் சிறிய வயதை உடையவராக இருக்கக்கூடாதா என்கின்ற ஆசையுமே உண்டாகின்றது. பண்டிதர் அவர்களுடன் எனக்கு உள்ள அனுபவத்திலிருந்து அவருடைய உணர்ச்சி சுயமரியாதை கொள்கைகளில் பெரிதும் பற்றுடையது என்பதும் அவருடைய பேச்சும் எழுத்தும் பெரிதும் அக்கொள்கைகளை மதித்ததாக இருந்து வந்ததும் வருவதும் நான் நன்றாய் உணர்வேன்.

பண்டிதரின் முயற்சியினாலேயே பள்ளிக்கூடப் பாட புத்தகங்கள் பல பகுத்தறிவை நோக்கிச் செல்லத்துடங்கியது என்பதும் மற்றும் பல பண்டிதர்களுக்கும் பகுத்தறிவை உபயோகிக்க தைரியம் வந்தது என்பதும் எனது துணிபு.

# மோசி கீரனார்



வித்வான்
மு. வரதராஜன் அவர்கள்
திருப்பத்தூர்

அருங்குணம்வாய்ந்த ஒரு அரசனது அரண்மனைக்கு ஒருநாள் மோசிகீரனார் மிகவும் களைப் படைந்தவராய்ச் சென்றார். அச்சமயத்தில் அரசனுடைய முரசுநீராடப் பெற்று வருவதற்காக எடுத்துக் கொண்டு போகப்பட்டிருந்தது. அரசர் முரசு தெய்வத் தன்மைவாய்ந்தது; உலகத்தைக் காப்பது; போர் முதலிய காரியங்களை யெல்லாம் வெற்றியுடன் நடத்தி விளங்குவது. ஆகையால் சிம்மாசனத்திற்கு அடுத்தபடியான சிறப்புக்களுடன் அதற்கென ஒரு கட்டில் உண்டு. அதன்மேல் பூக்கள் தூவப்பட்டிருக்கும் (மென்மைக்கு எண்ணெய் நுரையைப் புலவர் ஒப்பிடுகின்றார்). புலவர் சென்ற அப்போது முரசு நீராடச் சென்றிருந்ததால், அதன் கட்டில் காலியாக இருந்தது. புலவர், களைப்புமிகுதியால் ஒன்றும் அறியாது—ஆராயாமல் அதன்மேல் ஏறி அமர்ந்து அவ்வாறே சோர்ந்து உறங்கிவிட்டார்.

சேரமன்னன் சிறிதுநேரத்திற் கெல்லாம் அவ்விடம் நோக்கி வந்தான்; முரசு கட்டிலில் யாரோ உறங்குவதைக் கண்டான்; மனதில் சினம் கிளர்ந்து எழுந்தது; வாளெடுக்க எண்ணினான். ஆனால் அணுகிச் சென்றவுடன் அம்மனம் மாறியது; புலவரைக் கண்டான்; கண்டதும் சினம் அன்பாக உருக் கொண்டது; வாளெடுக்க எண்ணிய மனம் சாமரம் எடுக்க எண்ணியது. புலவர் களைப்பு தீரவும் குளிர்ச்சியடையவும் சாமரத்தால் வீசித்தொண்டு செய்யத் தொடங்கினான். இவ்வாறு அரசன் மகிழ்ந்து வீசிக்கொண்டிருக்கையில், புலவர் கீரனார் துயிலுணர்ந்து எழுந்து நோக்கினார்; அரசனைக் கண்டவுடன் திடுக்கிட்டார். தான் களைப்பால் ஒன்றும் அறியாது முரசு கட்டிலில் ஏறி உறங்கிய பெருந்தவறை நினைத்து மனம் பதைத்தார். அரசன் தன் வாள் கொண்டு தண்டித்தலை மறந்து கவரி கொண்டு வீசுவதைக்கண்டு உள்ளம் உருகினார். தன்னைக் காப்பாற்றிய தமிழ்க்கல்வியின் தனிச் சிறப்பைக் கருதி உவகையும் கொண்டார். அப்போது அரசனை நோக்கி அவர் கூறியதாவது:—

"அரசே! இதனை முரசு கட்டில் என்று அறியாமல் ஏறிக்கிடந்த என்னை நீ உனது வாளால் இரு துண்டாக வெட்டி யிருக்கவேண்டும். அக்கோபத்தை மாற்றிக்கொண்ட அதுவே, நான் தமிழ்க்கற்று அறிந்தமைக்குப் போதுமான பயனாயிற்று. அவ்வளவோடு நீ நிற்கவில்லையே! பகைவரோடு பொருதல் இரவலர்க்கு வழங்குதல் முதலிய காலங்களில் அசைகின்ற பெருமை வாய்ந்த உனது தோளால் சிறியேன்மேல் வைத்த பெருங்கருணை காரணமாகக் கவரிகொண்டு வீசினாய். அவ்வுலக வாழ்விற்காக இவ்வுலகில் புகழ்வேண்டும் என்பதை நீ தெரிந்து கொண்டதனால் இவ்வாறு செய்தாய் போலும்!" என்று மொழிந்து உருகினார்.

இந்நிகழ்ச்சியால், பண்டைய அரசர்கள் தமிழ் மொழியினிடத்தும் தமிழ்ப்புலவர்களிடத்தும் செலுத்திவந்த அன்பு—பேரன்பு—நன்கு விளங்குகின்றது.

சென்னை பிரசிடென்சி காலேஜ் தமிழ்ப் போதகாசிரியராயிருந்து தற்போது உபகாரச் சம்பளம் பெற்று சாந்தோம் கடலகத்தில் இருக்கும் ம-௱-௱-ஸ்ரீ முதலியார் அவர்களைத் தெரியாதவர் ஒருவரும் இல்லை என்று சொல்லலாம். ஏனென்றால், முதலியார் அவர்களின் புஸ்தகங்களைப் படிக்காதவர் ஒருவருமில்லை. இந்த தமிழ் நாட்டைத் தவிர பர்மா, இலங்கை முதலிய நாடுகளிலும் அவருடைய புஸ்தகங்களைப் படிக்காதவர் ஒருவருமில்லையென்றே சொல்லலாம். தமிழ் புஸ்தகங்களைத்தவிர கணக்கு, பூகோளம், தேச சரித்திரம் முதலிய நூல்களையும் இயற்றி மாணவர்களுக்கு உதவி புரிந்திருக்கின்றனர்.

முதலியாரவர்கள் பொறுமை, தயாள சிந்தை, பரோபகாரமுள்ளவர். யார் எதைக்கேட்கினும் கர்ணனைப்போன்றும் சடையப்பவள்ளலைப்போன்றும் கொடுக்கும் குணமணி. பெரியோர், சிறியோர் பணக்காரர், ஏழை எல்லோரையும் ஒரேவிதமாக நடத்தும் நண்பர். ஒரு உதவி கேட்டால் 'முடியும்' என்று சொல்லமாட்டார். முடித்த பிறகு ஏன் நீங்கள் முன்னால் முடியும் என்று சொல்லவில்லை என்று கேட்டால் நாம் தைரியம் கொடுத்துவிட்டு பின்னால் முடியாவிட்டால் என் செய்வது என்று சொல்லுவார். தான் ஒருவருக்கு ஒரு உபகாரம் செய்ய வேண்டுமென்று நினைத்து விட்டால், யார் உபகாரம் செய்யாமல் தடுத்தாலும், அல்லது உபகாரம் செய்தால் கெடுதல்வரும் என்று சொன்னாலும் கேளார். நாம் நல்லது செய்வோம், எது வரினும் வரட்டும் என்று சொல்லும் பெரியோர். பிறர் கஷ்டத்தைத் தன் கஷ்டம் போல் கருதுபவர். பிறர் கஷ்டப்படுவதைத் தன் கண்ணால் பார்க்க சகியார். எந்நேரமாயினும், எவ்விடமாயினும் கஷ்டப்படுவோரின் துன்பத்தை நீக்குபவர். யார் எந்நேர வேளைக்குப் போனாலும், எச்சாதியினராயினும் அமுதுண்டு போகச் சொல்லும் அண்ணல். ஒரு நாளாயினும் விருந்தில்லாமல் சாப்பிடார். அநேகரைப்போன்று சுயநலக்காரரல்ல, எல்லோரும் வாழ வேண்டும், எல்லோரும் சந்தோஷமாயிருக்க வேண்டும் என்று எண்ணும் கொள்கையுள்ளவர். நீங்கள் எல்லோரையும்நம்பிவிடுகிறீர்களேஎன்றுசொன்னால், நீ ஒருவன் எவ்வளவு நம்பிக்கை யில்லாதவனா யிருந்தாலும், 'நீ அவனை நம்பு' அவன் நீ நம்பும்படி நடப்பான் என்று போதிப்பார். அநேகர் தங்கள் காரியம் ஆக வேண்டியதா யிருந்தால் பிறரிடம் போவார்கள். முதலியாரோ தன்னிடம் வர வேண்டியோர்களிடமும் தானே வலியச் செல்வார். அவர்சொன்ன பழமொழியும் உண்டு, அதாவது, 'If Muhammad does not come to Mountain, Mountain should go to Muhammad'.

பள்ளிக்கூட மாணவர்களுக்கு தான் எழுதி உதவியுள்ள புஸ்தகங்களைத் தவிர பண உதவியும் செய்து வந்திருக்கின்றனர். அவர் உதவியால் படித்து முன்னுக்கு வந்திருப்போர் பலர். பிராமணர்,பிராமணரல்லாதார் என்ற வித்தியாசமில்லாமல் அநேக பிராமண வித்தியார்த்திகளுக்கும் புஸ்தகங்களும், பணமும் கொடுத்துதவி யிருக்கின்றனர். Madras Central Educational Association என்று பிராமணரல்லாத மாணவர்களுக்கு உதவி செய்ய ஒரு சங்கத்தை ஸ்தாபித்து அதற்கு அவர் பட்டபாடு சொல்லி முடியாது அநேக கனவான்கள் வாக்குறுதி செய்தபடி நடவாததால், தன் கையிலிருந்து எவ்வளவோ தொகை ஏழை மாணவர்களுக்குதவி யிருக்கின்றார். பிறகு, மாணவர்கள் இருக்க வசதி ஒன்று கட்ட வேண்டுமென்று பாடு பட்டார். இக்காரியங்களுக்காக முதலியாரவர்கள் காலஞ்சென்ற திவான் பகதூர். ராஜ ரத்தினமுதலியார் அவர்கள் வீட்டுக்கும், எதிராஜ முதலியார் அவர்கள் வீட்டுக்கும் மாணவர்களை அழைத்துக் கொண்டு போய் அலைந்தது சொல்ல முடியாது.

ஒரு தேசம் முன்னுக்கு வரவேண்டுமானால், முதலில் தன் தாய் பாஷையைக் கவனிக்க வேண்டுமென்பார். பிரஞ்சு பாஷைக்காக எவ்வளவு கஷ்டபட்டார்களென்றும், அவர்களைப்போன்று தமிழ் பாஷையை காப்பாற்ற ஒருசங்கம் அவசியம் இருக்க வேண்டுமென்றும் Madras Tamil Academy என்று ஒரு சங்கத்தை சற்றேறக்குறைய 25 வருஷங்களுக்கு முன் முதலில் ஸ்தாபித்தவர் இவரே. அச்சங்கத்துக்கு ஒரு கட்டடம் கட்ட வேண்டுமென்றும், அது தமிழைப் படிக்கும் மாணவர்களுக்கு விடுதியாக இருக்கவேண்டுமென்றும், அவர் சங்கத்துக்குப் பாடு பட்டது இவ்வளவல்ல. அவரால், உத்தியோகங்களில் அமர்ந்திருப்பவர் இந்த தமிழ் நாடு முழுதும் பரவி யிருக்கின்றனர். பண்டிதர்களின் கஷ்டங்களை நினைந்து நினைந்து அவர்களுக்காக பல வழியிலும் உதவி புரிந்து வந்திருக்கின்றார். அவருடைய நற்குணங்களைப் பற்றியும், ஒவ்வொரு சந்தர்ப்பங்களில் அவர் போதித்த போதனைகளைப்பற்றியும் நான் 22-வருஷங்களாக அளவளாவி என் அநுபவம் வரையில் எழுதினால் விரியும் என்று நினைத்து இத்துடன் நிறுத்துகின்றேன்.

G. திருவேங்கடம்.
கோமளீஸ்வரன்பேட்டை,
மதராஸ்.

---

எங்கும் பிரயாணம் செய்யலாம்
சாப்பாட்டுகவலை இனி இராது

# ருக்மணி குக்கர்




சமையல் அடுக்கு ஒன்றிருந்தால் போதும். எல்லோரும் வாங்கும் பொருட்டு விலையை மிகவும் குறைத்திருக்கிறோம்.

**1, 2, 4, 6, 8, 12 & 16**
பேர்களுக்குரிய
7—அளவுகளின்
விலை ரூபா
**9, 12, 16, 21, 26, 32 & 38**

**விபர புத்தகம் இனும்**

## ருக்மணி குக்கர் கம்பெனி

ராயபுரம் (8) சென்னை

எமது ஏஜண்டுகள்

1 **மட்டுங்கா**:- சௌத் இந்தியன் கன்சர்ன்ஸ் அமிர்தநிவாஸ்.
2 **கல்கத்தா**:- சௌத் இந்தியன் கோவாபரேடிவ் ஸ்டோர்ஸ், 114. B. லான்ஸ் டௌனி ரோட் டாலிகஞ்.
3 **ரங்கூன்**:- ஸ்ரீ கணேஸ் ஸ்டோர்ஸ்125—127 பிரகாண்டட் தெரு. கிழக்கு ரங்கூன்.
4 **வேலூர்**:- S. V. நாதம் & கோ, லாங்பஜார்.
5 **சேலம்**:- சுதேசி எம்போரியம்.
6 **ஈரோடு**:- ஸ்ரீ கிருஷ்ண & கோ.
7 **கோயமுத்தூர்**:- பெஞரிஸ் சில்க் எம்போரியம் 115/116 ராஜ வீதி.
8 **உதகமண்டலம்**:- சுதேசி எம்போரியம்; காஷ் பஜார்.
9 **பாலக்காடு**:- ஸ்ரீ கிருஷ்ணவிலாஸ் மெடிகல் ஸ்டோர்ஸ்.
10 **நாகர் கோயில்**:- சென்ட்ரல் ஸ்டோர்ஸ்.
11 **திருவனந்தபுரம்**:- இந்தியன் எம்போரியம், மெயின் ரோடு.
12 **திருநெல்வேலி**:- P. K. சாமி & கோ. தெற்கு ரத வீதி.

# குமரன் பிரஸ்

## காஞ்சீபுரம்

திருந்திய தப்பில்லாத, அழகிய
அச்சு வேலைகள்

**உங்கள் வியாபார
விருத்திக்கு
மிகவும் துணை செய்யும்**

---

நேர்த்தியாகவும், குற்றமில்லாமலும்,
கண்கவர் வனப்புடன்
கலியாணப் பத்திரிகைகள் சகாயமாய்
அச்சிடுவதில் எங்கட்கு ஈடு எடுப்பு
இல்லை

---

பெரிய புத்தகங்கள்
பிழையின்றி அச்சிடுவதில் எங்கள்
புகழ்தமிழ்நாடெங்கும் பரவியுள்ளது

---

உங்கள் அச்சு வேலைகளை
தப்பில்லாமல், அழகாக, சகாயமாக
அச்சிட்டுக்கொள்வதற்கு குமரன்
பிரஸ்தான் சிறந்ததென்று மற்ற
வர்களைப்போல் நீங்களும் தெரிந்து
கொள்வீர்கள்

**ஜாப் மானேஜர்,
குமரன் பிரஸ்.**

திருவாளர் முதலியார் அவர்களைத் தமிழ் கற்குங் குழந்தைகள் அறியும்; பெரியோர் அறிவர். பால பாடம் முதல் பல்கலைக் கழக பாடம் வரை அவர்கள் எழுதிய நூல்கள் இனிமைக்கே இருப்பிடமாம். அந்நூல்களுள் வேம்புபோன்ற பொருள்களையுந் தீம்பாவென ஆக்கித் தரும் பெற்றி அவர்கட்கே உரியது. இதனாற் றமிழ் கற்கும் பிறநாட்டவரும் முதலியாரவர்களை அறிவர்.

ஐயா அவர்களைக்காணப்பெற எவரும் அவர் முகத்தே நகை ஒளிவீசக் காண்பர்; அமைதித் தாண்டவம் புரியப்பார்ப்பர்; அவர் திருவாயினின்றும் இன்சொல் எழக்கேட்பர் இவையாவும் அவரது அன்பு நிறைந்த உள்ளத்தினின்றும் வழிவனவேயாம்.

தமிழறிஞர்கள் வறிஞர்; பொறாமை யுடையார் என்பர். இவை முதலியார் அவர்கள் இருக்கும் எல்லையையும் எட்டிப்பாரா. இன்னும், தமிழறிஞர் ஒருவரோ டொருவர் அளவளாவக் காண்பது அருமை என்பர். இதற்கு மாறாக, தமிழறிஞர்கள் ஒரு சிலரேனுஞ் சூழ, இல்லாமல் முதலியார் அவர்களைக் காண்பது அருமை. இம்முறையில் பல இடம்புரிச்சங்குகள் என்றுஞ் சூழவிருக்கும். வலம்புரியேயாவர் இப்பெரியார். இதனால், தமிழன்னைத் தனிமகனென விளங்கும் முதலியார் அவர்களை அறியப்பெறாத தமிழறிஞரில்லை, நாடப்பெறாத தமிழ்ப்பண்டிதரில்லை யென்னலாம்; பெரும் பான்மை கருதி.

பெருமிதமின்மையாற் பெருமை யெய்திய ஐயா அவர்களைத் தனியே காணப்பெறுவோர், அவர்கள் முகத்தால் விரும்பி, இனிது நோக்கி, இன்சொல் கூறி, நலஞ் செய்வோர் என்பர். ஒருவர் ஓர் உதவியை நாட, அது தம்மால் இயலாதேனும், அதனைப் பிறர்பால் அவ்வமயத்திலேயே சென்று எய்துவிக்கும் நல்லுள்ளம் அவர்கள் மாட்டதே என்றும் எவருங் கூறுவர். எல்லாச் செல்வங்களையும் ஒருங்கே பெற்ற அவர்கள் செல்வத்துட் பால் செல்வமாய பணிவுச் செல்வமும் பரந்து விளங்குகிறது.

இனி, நான் தமிழ்த்துறையில் மூழ்கப் பெறாதவனாகலின் அவர்கள் அன்பில் பலகால் மூழ்கப் பெற்றேனில்லை. ஆயினும் ஒருகால் அதனைப் பெற்றுள்ளேன். இற்றைக்கு இருபது ஆண்டுகட்கு முன்னர், கற்றல் நிமித்தம் ஓர் உதவியை நாடி, அறிஞரொருவர் கடிதத்துணை கொண்டு, அவர்களைக் கண்டேன் அவர்கள் அன்று கூறிய இனிய மொழிகள் இன்னும் என் நினைவில் உள. "இவ்வொரு முறை வந்ததேபோதும். பலமுறை வரவேண்டாம். பலமுறை சென்றேன்; அவர் ஒன்றுஞ் செய்யவில்லை" என்று சொல்ல வேண்டாம். கல்லூரியில் இடம் பெற்று வாருங்கள். இயன்றதைச் செய்வேன்" என்றார்கள். அவர்களை மீண்டும்காண நேரவில்லை.

திருவாளர் முதலியார் அவர்கள் அறிவு நலத்தாலும் குண நலத்தாலும் இம்மையின்பம் பெற்றதேபோல் மறுமை யின்பத்தையும் பெறுவரென்பது திண்ணம்.

ப. துரைசாமி.

'நான் பல வாண்டுகளுக்குமுன், திரு. கா. நமச்சிவாய முதலியார் அவர்களைக் கண்டு ஒருசிலநாள் பழகியபோது அவர்களின் அன்பு, ஒப்புரவு முதலியவற்றை அறிந்தேன். அதனால், என் உறவினராகிய மாணவரொருவரை 'மணலி ஹாஸ்ட'லிற் சேர்க்க எண்ணி, அவர்களுதவியை வேண்டினேன். அவர்கள், 'அங்ஙனமே சேர்க்கலாம்' என்றார்கள். பின்னர், நான் என் ஊருக்குப் போய்விட்டேன். அங்கிருந்து, உரியகாலத்தில் முதலியாரவர்களுக்கு விண்ணப்பஞ் செய்தேன். அப்பொழுது அவர்கள் நீலகிரியில் இருந்தார்கள். அங்கிருந்தே, நாங்கள் சென்னைக்கு வரும் நாளைக் குறிப்பிட்டு அந்நாளில் அங்கு (சென்னைக்கு) வருமாறு திருமுகம் விடுத்தார்கள் அதன்படி நான் உறவினரை உடன்கொண்டு சென்னை சென்றேன். முதலியாரவர்கள் வந்து சேர்ந்ததும், மணலிமுதலியாரவர்களுக்கு இச்செய்தியை நண்பரொருவர் மூலம் சொல்லி யனுப்பினார்கள். அவர்கள் (மணலி முதலியார்,) "மாணவர்கள் சேர்ந்துவிட்டனர். ஆதலின், இப்பொழுது இடமில்லை" என்று கூறி அனுப்பிவிட்டார்கள். அதனை யறிந்து நான் திரு. முதலியாரவர்களிடம், "நான் இவரை ஊருக்குக் கூட்டிச் செல்கிறேன்" என்றுகூறினேன். அதற்கு அவர்கள், "அவர் இங்கேயே இருக்கட்டும். வேண்டுவன செய்கிறேன்" என்றார்கள். அன்பளாவிய அவ்வின்புரையைக் கேட்டு, "இது முறையன்று. ஹாஸ்டலில் இடமில்லையாயின், தாங்கள் என்செய்வீர்கள்? நான் ஊருக்கு உடன்கொடுசெல்ல அனுமதி தரல்வேண்டும்" என்று வேண்டினேன். அதற்கு அவர்கள், "நான், அவரைக் கூட்டிக்கொண்டு வரச் சொன்னதால், கூட்டிக்கொண்டு வந்தீர்கள்; விட்டு விட்டுப் போகச்சொன்னால் விட்டு விட்டுப் போகவேண்டியது தானே" என்று கூறி, வற்புறுத்தினார்கள். அதன்படியே நான், விட்டுச்சென்றேன். அவ் வாண்டு முழுதும் அவருக்கு ஹாஸ்டல் செலவுமுதலியன நல்கி உதவினார்கள்.

"ஈசன் வானவர்க் கென்பன் என் றால்அது
தேச மோதிரு வேங்கடத் தானுக்கு
நீச னேன்நிறை யொன்றுமி லேனென்கண்
பாசம் வைத்த பரஞ்சுடர்ச் சோதிக்கே"

என்னும் ஆழ்வார் செய்யுளை நினைத்துக் கொள்ளுகிறேன். இச்செய்யுளை அந்நண்பர் கூறுவதன் கருத்து என்ன?

வே. வேங்கடராஜுலு ரெட்டியார்.

காலஞ்சென்ற அறிஞர்—திவான் பகதூர் L. D. சுவாமிக்கண்ணு பிள்ளை அவர்கள் M. A., B. L., LL. B., F. M. U. 'பிருதிவி ராஜன்' என்கிற முதலியாரவர்களின் நயமிகு நாடகப் புத்தகத்துக்கு முன்னுரையாக எழுதியதாவது:—

'பொற்குடத்திற்குப் பொட்டிட்டுப் பார்க்க வேண்டுவதில்லை'. அதுபோலவே, சிறந்த அறிஞராகிய நமச்சிவாய முதலியாரவர்கள் எழுதுகிற புதிய நாடகத்திற்கு முன்னுரை வேண்டியதேயில்லை. எனினும், புதிய தமிழ்க்கலை யபிவிருத்திக்கு ஒரு சிறிதும் பயன் படாத ஒருவர், இத்தகைய சந்தர்ப்பங்களைக் கைநழுவ விடாமல், (தான் பிச்சையிட முடியாது போயினும், பிச்சையிடக்கூடிய வீட்டைச் சுட்டிக் காட்டுவதுபோல,) ஒரு புகழ்ச்சொல் பகன்று, இதுபோன்ற புத்தகங்கள் வெளிவர ஊக்கப்படுத்தக் கூடும்.

'தமிழ்க் கலைக்குப் புத்துணர்ச்சி' என்பது பொருத்த மற்றது. செத்துப்போன மொழி மீண்டும் பிழைத்தெழ முடியாது; இருக்கின்ற மொழிக்கு வேண்டுவது புத்துணர்ச்சி யன்று: ஆரோக்கியமான வளர்ச்சி, அப்பியாசம், அபிவிருத்தி. முன்பிருந்த தமிழ்ப் பண்டிதர்கள், புதுஉலகக் கருத்துக்களை, பண்டையுலக நடையைக்கொண்டு அணிவித்து, ஆகாய விமானத்திலிருந்துகொண்டு லத்தீன்பாடல் பாடுவதைப்போன்று செய்துகொண்டிருந்தனர்.

பிராயத்தை யொத்து எவ்வாறு மனிதனின் உடல் வளம் பெறுகின்றதோ, அதுபோல விரிந்தே செல்லுகின்ற நவீன உலகத்தைப் படம் பிடித்துக் காட்டவல்ல ஓர் நடையை தமிழ்ப் பண்டிதர்கள் உண்டாக்க முனைகின்றனர். இத்தகைய நோக்கத்தைக்கொண்ட இயக்கப் பிரதிநிதியாகிய திரு. நமச்சிவாய முதலியார் அவர்கள் இதற்கு முன்னால் வெளியிட்ட புத்தகங்களின் வெற்றியிலிருந்து, இயக்கமே வெற்றி பெறும் என்பதற்கோர் அறிகுறியாகிறது.

திரு. C. S. ராஜாப்பிள்ளை, தலைமைத்தமிழாசிரியர் ஊர்ஹீஸ்கல்லூரி வேலூர்,

திருவாளர் கா. நமச்சிவாய முதலியார் அவர்களைப் பெயரளவில் 1910ம் யாண்டு முதன் முதல் யானறிந்தேன். அக்காலத்தே விளங்கிய ஆரம்பப் பாடசாலைகளிற் பயிலும் எல்லா மாணவர்கள் கைகளிலும் திரு முதலியார் அவர்கள் எழுதிய தமிழ்ப் புத்தகங்களே காணப்படும். அவைகளையான் காணும்போது நந்தமிழன்னை யித்தகைய ஒரு தவப் புதல்வனைப்பெற என்னோற்றனளோ? என்றெண்ணுவதுண்டு. இக்காலத்தில் மேனிலையில் வாழும நம் நாட்டுப் பெரியார்கள் பலரும் முதலில் முதலியாரவர்களுடைய புத்தகங்களைப் படித்தவர்களே.

பின் பற்பல பத்திரிகை களில் முதலியாரவர்கள் சொற்பொழிவைக் கண்டு அவர்களுளப் பான்மை அறிந்தேன். பின் அவர்பால் எனக்கெழுந்த அன்பு நாளுளும் நன்குவளந்தது. அதன்பயனாக 1924ம் யாண்டு மார்ச்சுமாதம் வேலூர் ஊர்ஹீஸ் கலாசாலையின் மாணவர் தமிழ்விழாவிற்குத் தலைமை வகிக்க அவர்களை வேண்டினேன், அதற்கிணங்கி இந்நகர்க்கெழுந்தருளி மாணவர்கட்கு மாசிரியர்கட்கும் மற்றவர்களுக்கும் பல புத்துணர்வு தோன்ற, உளக் கருத்தை யொளித்து இடத்திற்கேற்ப வேறொன்று பேசும் ஏனையோர் போலன்றி, தாங்கண்ட மெய்ப் பொருளைக்கேட்பார்ப் பிணிக்குந் தகையவாய்ப் பேசிப் பெரு மகிழ் வளித்தார்கள்,

இவர்கள் சிற்சிலவமயங்களில் தமது இளமைப் பருவ நிகழ்ச்சிகளை யென் போன்றோரிடங் கூறுவதுண்டு. அவை ஒவ்வொன்றும் பல அறிவுரைகளைத் தன்னகத்தே கொண்ட மணிவாசகமாய்த் தோன்றும் "இன்னா செய்தார்க்கு மினியவே செய்யாக்கா லென்ன பயத்ததோ சால்பு" என்னும் நாயனார் நல்லுரைக்கு எடுத்துக்காட்டு திரு. முதலியாரவர்களேயாம் என்பது என் உள்ளக்கிடக்கை.

ஒருநாள் கடலகத்தில்யானும் சில அன்பருமாகப் பேசும்பொழுது, ஒரு தமிழ்மகனார், திரு. முதலியாரவர்களைச் சிறிது புறங்கூறியதாக ஒருவர் கூற அதனைக்கேட்ட இவர்கள் பாம்பிற்கியற்கைக்குணம் விடமளிப்பதேயாம். அக்குணமதற்கியற்கையாகலின் அதைமாற்ற வியலாது. ஆயினும் நாம் அவருக்கும் நன்மையே செய்வோம், என்றுரைத்துப் பின்பல நன்மைகளையும் செய்துள்ளார்கள். இந்நிகழ்ச்சியை யான் அடிக்கடி நினைப்பதுண்டு இச்செயற்கருஞ் செயலைச்செய்த இவரன்றோ பெரியார்.

தமிழகமுழுவதுந் தனிப்பெருந்தகவு பெற்றுயரிய திரு. வி. கலியாண சுந்தரனா ரவர்கள் பல வமயங்களில் நமது முதலியாரவர்கள் குணங்களைப் பெரிதுங் கொண்டாடிப் பேசி மகிழ்வார்கள், இத்தகைய பெரியோர்களால் போற்றப்படும் முதலியாரவர்களைப் பற்றிக் கூற யான் வல்லேனல்லன். இந்நாளில் சிறார் முதல் அறிஞரீறாகவுள்ள யாவர்க்கும் தமிழ்ப்புத்துணர்ச்சி தருவது முதலியாரவர்கள் நூல்களே எனின் அது மிகையாகாது.

இவர்கள்சென்னைப் டல்கலைக் கழக மூலமாகத் தமிழை வளர்க்கு முறையும் பழந் தமிழ் நூல்களைப் பதிப்பித்து மக்களுக் குதவுந்தன்மையும் மிகப் போற்றற்குரியன.

# செய்தித்  திரட்டு

ஆட்டாவா ஒப்பந்தத்தை இந்தியா சட்டசபை அடியோடு நிராகரித்துவிட்டது.

* * * *

1937-ம் வருடம் மே மாதம் 8-ம் எட்வர்டு மன்னருக்கு பட்டாபிஷேகம்.

* * * *

இந்தியாவின் புதிய வைசிராயான லார்டு லின்லித்கோ தமது மனைவி, காரியதரிசிகள் சகிதமாய் எப்ரல் 18-ம் தேதி யன்று டில்லிவந்து சேருவார்.

* * * *

பம்பாய்க் கார்ப்பொரேஷன் மேயராக ரயில்வேத் தொழிலாளர்களின் தலைவரான ஸ்ரீமான் ஜம்னதாஸ் மேத்தா தெரிந்தெடுக்கப்பட்டார்.

* * * *

ஜூன் 23ந் தேதி (செவ்வாய்க் கிழமை) அரசர் பெருமான் பிறந்த தினமாதலால், அன்று பொது விடுமுறையாகும்.

* * * *

தற்போது நடந்த வேலூர் ஜில்லாபோர்டு தேர்தலில் மொத்தம் 34 ஸ்தானங்களில் 22 ஸ்தானங்கள் காங்கிரசுக்கு.

* * * *

கோயம்புத்தூர் ஜில்லாபோர்டை, ஈரோடு என்றும் கோயம்புத்தூர் என்றும் இரண்டு படுத்தப் போகின்றார்கள்

* * * *

ஆந்திரநாட்டுக் காங்கிரஸ் தலைவர்களில் ஒருவராகிய ஸ்ரீ. சி. ஆர். ரெட்டி ஆந்திர சர்வகலாசாலை வைஸ் சான்ஸ்லர் பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்.

* * * *

அவசியம் நேர்ந்தால், 18 வயதுக்கு மேலும் 42 வயதுக்குட்பட்டும் உள்ள எல்லா ஆடவர்களையும், பட்டாளத்தில் சேர்க்க ஆஸ்திரியா தேசத்தில் ஒரு சட்டம் நிறைவேறி யிருக்கிறது.

* * * *

சேத் காஞ்சி காளிதாஸ் என்பார் போரிபந்தரில் ஒரு கன்யா குருகுலம் ஸ்தாபித்து, பெண்களுக்குரிய நல்ல கல்வியளிப்பதற்காக 3 லட்சம் ரூபாய் ஒத்திவைத்திருக்கிறார்.

* * * *

இவ்வருடம் உதகமண்டலத்துக்கு ஐதராபாத் நைஜாம் இளவரசர், ஜோத்பூர் மகாராஜா, பரோடா மன்னர் ஆய பல சுதேசமன்னர்கள் வருவர். உதகமண்டல முனிசிபாலிடியார் பற்பல நந்தவனங்களை உற்பத்தி செய்கின்றனர்.

* * * *

சென்னைச் சதி வழக்கில் கைதியான ஸ்ரீ முகுந்தலால் சர்க்கார் சேலம் ஜெயிலுக்குள்ளே தினம் $1\frac{1}{2}$ ராத்தல் கயிறுகள் திரிக்கின்றார்.

தூங்குகின்றவர்கள் தொடையில் கயிறு திரிப்பவர்களெல்லாம் சிறைக்கு வெளியிலே!

* * * *

எப்ரல் முதல் தேதி முதல், சகல தபால் கவர்களுக்கும் (முதல் ஒரு தோலாவரை) ஒரு அணா தான். மேற்கொண்ட ஒவ்வொரு தோலாவுக்கும் அரையணா. ஆகவே ஒரு அணா கவர் ஒரு ரூபாய் எடையிருக்கலாமாகையால், பயப்படாமல் கொள்ளாமல் நிறைய சமாச்சாரம் எழுதலாம்.

* * * *

நாளொன்றுக்கு இருபதினாயிரம் பவுன் வீதம் வருஷத்தில் ஒருவர் 60 லட்சம் பவுனுக்கு மேல் அமெரிக்காவில் சம்பாதித்தாராம். தருமத்திற்காக மட்டும் சுமார் 2 லட்சம் பவுன் ஒரு வருஷத்தில் கொடுத்திருக்கிறாராம்.

இவ்வளவு தருமச் சிந்தனை யிருந்தாலல்லவோ சம்பாதிக்கலாம். அதற்கு நாம் எங்கே போவது?

சீனத்து ஷான்வி மாகாணத்து துருப்புகள், பெஞ்சோவிற்கு அருகில் படையெடுத்து வந்த பொதுவுடைமைக்காரர்களை சூறையாடி முறியடித்து விட்டனர். பெஞ்சோ ஜில்லாவில் பொதுவுடைமைப் பூண்டையே வேரறுத்து விட்டனர். பொது வுடைமைத் துருப்புகள் மேற்கு திக்கை நோக்கி ஓடி விட்டனவாம்.

* * * *

ஜோகான்ஸ் பர்க்கிலுள்ள ராபின்சன் தங்கச் சுரங்கத்தில் தொழிலாளர்கள்—(கருப்பர்கள் மாத்திரம்; வெள்ளையர்களல்ல) 8000 அடி, அதாவது $1\frac{1}{2}$-மைல் ஆழத்திலிருந்து வேலை செய்துவருகின்றனர். ஒரு வாரம் சேர்ந்தாற்போல வேலை செய்வதால் அவர்கள் எடையில் 5 ராத்தல் குறைந்து விடுகிறது.

ஸ்தூல சரீரக்காரர்கள் பணக்காரர்களா யிருந்தால் அங்கு போய் வேலை செய்துவிட்டு வரலாம்!

* * *

ஜப்பான் சக்ரவர்த்தி லார்டு சபை தலைவரான கோனுயியை இருமுறை அழைத்து பிரதம மந்திரி பதவியை ஏற்றுக் கொள்ளுமாறு கூறினர். உடல் நலம் குன்றியுள்ள காரணம்பற்றி அப்பதவியை மறுத்துவிடவே, ஸ்ரீ ஹிரோடா, சக்ரவர்த்தி கூறியதற்கிணங்கி தாம் அப்பதவியை ஏற்றுக்கொண்டார். அவருக்கு வயது இப்போது 53. அனுபவம் வாய்ந்த அறிவாளி. சென்ற மந்திரிசபையில் அந்நிய நாட்டு மந்திரியாக யிருந்தார்

* * * *

கள்ளி கன்னி மேயோ எழுதிய 'இந்தியத்தாய் முகம்' எனும் புத்தகத்தை இங்கிலாந்திலே வழங்க வொட்டாமல் தடுக்க தங்கட்கு அதிகாரமில்லை யென்று இந்தியா மந்திரி தெரிவித்து விட்டார்.

சுபாஷ்சந்திரர் போன்ற இந்தியர்களை இங்கிலாந்தில் நுழையமுடியாமல் தடுக்கமுடியும்; ஆனல் அமெரிக்க நாடோடியின் குப்பைத்தாள்களைத் தடுக்கமுடியாமலா அவாது அதிகாரம் இருக்கிறது? உருப்பட்டது,உத்தியோகமும் அதிகாரலட்சணமும்!

* * * *

சுயமரியாதை மகா நாட்டின் ஜாப்தாவில் அகப்பட்டாத தோழர் எஸ். வி. லிங்கம் அவர்களிடமிருந்து "மாகாண சினிமாக்காரர் மகாநாடு" என்று ஓர் நூதனச் செய்தி வருகிறது. சகல சினிமாச் சொந்தக்காரர்கள், சினிமா நடிகர்கள், ரசிகர்கள், விமர்சனக்காரர்கள் கலந்து கொள்ளும்படி ஏற்பாடுகள் நடக்கின்றனவாம். மே மாதம் மகாநாடு. இத்தகைய முக்கியமான விஷயத்தை யெடுத்துக் கொள்ளுதற்காக தோழருக்கு மனமார்ந்த பாராட்டு.

கொச்சியில் திவானுகயிருக்கும் சர்: ஷண்முகம் செட்டியாரை வேலையிலிருந்து நீக்கிவிடவேண்டுமென்று கடந்த மாதம் 23-ம் தேதி திருச்சூரில் ஒரு பெரிய கூட்டம் கூடிற்று. பின்னர் கொச்சி சமஸ்தானமே இதுவரை கண்டிராதபடி ஒரு பெரிய கருப்புக்கொடி ஊர்வலம் நடந்ததாம். சட்டசபை கூடியபோது, ஒத்திவைப்புப் பிரேரணையைச் சர். சண்முகம் (தலைவர்) அனுமதிக்காததால் திரு. T. K. நாயர் தலைமையில் 15 அங்கத்தினர்கள் சட்டசபையைவிட்டு வெளியேறி விட்டனராம்.

* * * *

திருச்சி நகரசபையைக் கலைத்து இரண்டு ஆண்டுகள் ஆகப்போவதால், ஜூன்மாதம் 19ம் தேதி புது அங்கத்தினர்களது தேர்தல் நடந்து வழக்கம் போல் சபைநடக்கலா மென்பது இப்போது சர்க்கார் இட்டுள்ள உத்திரவு. பொதுமக்கள் திரு: பி. ஆர். தேவர் அவர்களையே தேர்ந்தெடுப்பதும், சர்க்கார் நிராகரிப்பதும், மீண்டும் அவரையே பொதுமக்கள் தேர்ந்தெடுப்பதுமாக இந்தத் திருச்சினுப்பள்ளிக்கு இதே வேலையாகிவிட்டது. இனி இம்மாதிரியான விளையாட்டுகளில் அரசாங்கம் கலக்க முடியாதாகையால், திருச்சினுப்பள்ளி, திரு: தேவர் கட்சியாரையே மீண்டும் தேர்ந்தெடுத்து, முனிசிபாலிடியைச் சீர்திருத்திக் கொள்ளலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

* * * *

திருத்துறைப் பூண்டியில் சுயமரியாதைக்காரர்கள் கடந்த 21-ம் தேதி ஒரு மகாநாடு கூடினர்கள். தோழர்கள் பொன்னம்பலம், அழகிரிசாமி, ஜீவானந்தம், வல்லத்தரசு, ஸ்ரீமதி. லீலாவதி (தோழர் எஸ். வி. லிங்கத்தின் பெயரை என்னமோ காணேம்) போன்றவர்கள் வந்திருந்தனர். ஈ. வே. ரா. வும் விஜயம் செய்திருந்தார். முடிவு குழப்பம்!

குழப்பம் ஏற்பட்டால் உடனே கைமேல் பலன் கிடைத்து விடுமல்லவா? ஆகவே திருத்துறைப் பூண்டி குழப்பத்தின் பயனுக மாகாணச் சுயமரியாதைக் கட்சி ஒன்று புதிதாய் முளைத்திருக்கிறது. கட்சி யென்றால் மகாநாடு மிகமிக முக்கியம். மிக வழக்கமானதாகவு முள்ளபடியால், பிறந்த உடனேயே மாகாண சுயமரியாதைச் சமதர்மக் கட்சியின் முதலாவது கூட்டம் நடைபெறப் போகிறது. இடம்—திருச்சினுப்பள்ளியைச் சார்ந்த தென்னூரில். காலம்—13-4-36 ஞாயிற்றுக்கிழமை மாலை, இராகு காலத்துக்கு முன்னதாக, மூன்று மணிக்கு!

'இஷ்டம் போலப் போவதற்கு' ரெயில்வே டிக்கட் உள்ளவர்கள் போய்விட்டு வரலாம்!



# :: அதிசயச் ::
# செய்திகள்



**குரங்குப் பிள்ளைகள்**

ஆசிரியர் ஆஸ்போரன் மனிதன் 1,50,00,000 வருடங்களுக்கு முன் குரங்கினத்திலிருந்து பிரிந்தவன் என்று கூறியிருக்கிறார்.

**பெரிய மோட்டார்**

உலகத்திலேயே பெரிய மோட்டார் ஜெர்மனியில் தானிருக்கிறது. அதன் நீளம் 70 அடி 6 அங்குலம்; 7 அடி அகலம்: 11 அடி உயரம். இவ்வளவு பெரிய மோட்டார் வண்டியை ஒரு சலவைச்சாலை சொந்தக்காரர் வைத்திருக்கிறார்.

**விநோதமான முட்டைகள்**

ஒரு கண்காட்சிச் சாலையில் பல்வேறு அளவுகளிலுள்ள, பல்வேறு முட்டைகள் வைக்கப்பட்டிருக்கின்றன. சகல வித நிறங்களிலும் முட்டைகளிருக்கின்றன. மொத்தம் ஒரு லட்சத்துக்கு மேலிருக்கிறது. அவற்றுள் நூற்றுக் கணக்கானவை ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக இருந்துக் கொண்டிருக்கின்றன. வர்ணங்களோடு கூடிய முட்டைகளை சுடுசாம்பலில் வைத்திருந்தால் ஓடு இருகி உள்ளேயுள்ளது சுண்டி, காய்ந்து, வறண்டு விடுகிறதாம்.

**கிள்ளியதால் விவாகரத்து**

ஒரு 'இழவு'க் காரியத்துக்குப் போயிருக்கும் போது அங்கே தன்னைத் தன் புருஷன் கிள்ளியதால், விவாகரத்து செய்துவிட வேண்டுமென்று ஒரு பெண் கோர்ட்டில் தாவா செய்திருக்கிறாள். சமீபத்தில் தான், ஆறு மாதத்துக்கு முன்னதாக, தங்களுடைய திருமணத் தங்க விழாவைக் கொண்டாடிக் கொண்டார்கள்!

**'சிகரெட்டைத் தின்றுவிடுங்கள்'**

சிறுவர்கள் 'சிகரெட்' குடிப்பதால் தீங்கு விளைகின்ற தென்பதை யறிந்து, இங்கிலாந்தில் சில பெற்றோர் தம் குழந்தைகளுக்குச் 'சிகரெட்'டைத் தின்கின்ற பழக்கத்தை ஏற்படுத்தி வருகின்றார்கள். சிகரெட் குடிப்பதைக் காட்டிலும், இது மகாமோசமானதென்றும், சிற்சில வேளைகளில் உயிருக்கே ஆபத்து விளைக்கத்தக்கதெனவும் ஒரு டாக்டர் ஆங்கிலப் பத்திரிகையிலே வரைந்துள்ளார்.

அப்படியானால், 'சிகரெட்'டைத் தின்னும் சிறுவரைக் காட்டிலும் சிகரெட் குடிக்கும் சிறுவர் நல்லவர்களாகின்றனர்.

**பாடுபட்ட பண்டம்**

ஆறு ஆண்டுகட்கு முன்னர் 'கிரேடா கார்போ' எனும் பிரபல நடிகையின் விலை யுயர்ந்த மோதிரம் படம் பிடிக்கும் இடத்தில் காணமற்போய்விட்டது. ஸ்டுடியோவிலுள்ளவர்கள் அனைவரும் தேடிப் பார்த்தும் அகப்பட வில்லை. சமீபத்தில் அதற்குள் இருந்த ஒட்டலின் ஒரு பாகத்தை இடித்த போது அம்மோதிரம் அகப்பட்டு விட்டது!

**சாரீரத்துக்கு மருந்து**

சுகமான சாரீரம் மாத்திரமில்லாமல், வேறு எல்லா வித சங்கீத, நடிப்பு ஞானமும் பொருந்தியவர்களுக்கு இப்போது விமோசனம் ஏற்பட்டு விட்டது. அமெரிக்காவிலே, நியூயார்க் நகரத்திலே ஒரு பெரிய பேசாப்பட இஞ்சினீயர்கள் கூட்டத்திலே தெரிவிக்கப்பட்டது. இது சூரிய வெளிச்சத்திலிருந்து, ஓர் வித கதிரைக் கொண்டு, ஓசையைப் பதியும்போது, பாயச்செய்து சுகமான—இனிமையான—இஷ்டத்துக்குத் தக்கபடி ஏற்படுத்திக் கொள்ள உதவுகின்றதாம்.

**தானாகவே மீன் வேகும்**

கீழேயிருந்து பூமிக்குமேலே 40 மைல்கள் தூக்கிச் சென்றால், மீன் தானாகவே வெந்து பக்குவமாகிவிடுகிறது என்று ஓர் தத்துவ ஆராய்ச்சிக்காரர் கூறுகிறார்.

**தத்துவ ஆராய்ச்சியாளர்**

வைட்டமின் வகையறாக்களை A. B. C........ என்று பெயரிட்டுக் கொண்டே போகின்றார்கள். இப்போது 'வைட்டமின் 'K,' என்று நூதனமான வஸ்துவைக் கண்டு பிடித்திருக்கிறார்களாம். அது பன்றியின் கொழுப்பிலும், சில அபூர்வ காய்கறிகளிலும் இருக்கின்றதாம்.

தத்துவக்காரர்கள் போகின்ற போக்கைப்பார்த்தால் வைட்டமின் Y, Z, களைக்கூட கண்டு பிடித்துவிட்டு ஆங்கிலத்தில் எழுத்தில்லாமல் விழிக்கபோகிறார்கள்!

# உயர்திருவாளர் ::
# கா. நமச்சிவாய முதலியார்
# வாழ்க்கை வரலாறு ::

திரு. எஸ். எஸ். அருணகிரிநாதர்

சிறப்பாகப் புலவர்களுக்கும், பொதுவாக ஏனையோருக்கும் பேருபகாரியாய் இருப்பவரும், 'சிறந்த தமிழ்ப்பேராசியர்' எனக் கொண்டாடத் தக்கவரும், அன்பு நிறைந்த பேருள்ளம் படைத்தவருமாகிய முதலியாரவர்களின் வாழ்க்கை வரலாற்றை நமது நாட்டாரேனும் அறியவேண்டியது அவசியமாகும். நமது நாட்டில் சிறந்த கல்வியாளர் பலர் இருக்கலாம். தமது புகழ், தமது செல்வம் ஆகிய இவைகளில் கண்ணுங் கருத்துமாய் இருப்பவர் பலரைத் தினந் தோறும் இக்காலத்தில் நாம் காண்கின்றோம்.

ஆனால், முதலியாரவர்களைப் போலப் பிறர் நலங்கருதிப் பிறர் நன்மைக்காக உழைப்பவர்களைக் காண்பதரிதாகும் முதலியாரவர்களின் பொருளுதவியால் நலமடைந்தவர்கள் பலர்; வாக்குச் சகாயத்தினால் வாழ்வு பெற்றவர்கள் பலர்: அவர்கள் இனிய நடையில் கற்போருள்ளம் களிக்கும்படி எழுதிய நூல்களைக் கற்று மேன்மை அடைந்தவர்கள் பல்லாயிரவராவர். ஆற்றொழுக்கைப்போல் வழுவின்றி அழகிய இனிய வசனநடை எழுதத் தமிழ் மக்களுக்கு வழிகாட்டியவர் முதலியாரே யாவர். இத்தகைய பெருந்தகையாளரான அன்பு கசியும் மனத்தினராகிய முதலியாரவர்களின் வாழ்க்கை வரலாற்றை எழுதும் பாக்கியம் எனக்குக் கிடைத்தமைக்காக நான் பெரு மகிழ்வடைகின்றேன்.

முதலியாரவர்கள் 1876 ஆம் வருடம் பிப்ரவரி மாதம் 20 ஆம் தேதி வெள்ளிக்கிழமை இரவு பத்தரை மணிக்கு வடஆற்காடு ஜில்லாவில் காவேரிப்பாக்கம் கிராமத்தில் வாழ்ந்து வந்த உபாத்தியாயர் இராமசாமி முதலியாருக்கும், அன்பு நிறைந்த மனமுள்ள அவரது மனைவியார் அகிலாண்டவல்லி அம்மாள் அவர்களுக்கும் அருமைப் புதல்வராகத் தோன்றினார். முதலியாரவர்களின் தந்தையார் தாமே சிறந்த முறையில் ஒரு பள்ளிக்கூடத்தை ஆரம்பித்து நடத்திக்கொண்டிருந்தார். முதலியாரவர்கள் கற்க வேண்டிய பருவம் வந்தவுடன் கற்கத்தொடங்கி நன்கு கற்றுக் கல்வியினாலுண்டாகக்கூடிய நலத்தைக் கண்டார்கள். பின்னர் முதலியார் தமது வாழ்க்கையின் நலத்துக்கான வழியைத்தேட நினைத்தார்கள். ஆகவே, அவர்கள் 'சென்னைக்குச் சென்றால் சிறப்படையலாம்' எனக்கருதியோ என்னவோ 1891 ஆம் ஆண்டில் நிலையாகச் சென்னையை அடைந்து அப்போது தண்டையார் பேட்டையில் இருந்த ஓர் ஆரம்பப் பள்ளிக்கூடத்தில் ஆசிரியராய் அமர்ந்தார்கள். அக்காலத்தில் அவர்கள் தாம் தமிழில் பெரும் புலமை பெற வேண்டுமெனக் கருதினார்கள். அதனால் அவர்கள் இப்போதும் சீரும் சிறப்பும் பேரும் பெருமையும் பெற்று விளங்கும் சென்னைத் தொண்டை மண்டலம் துளுவ வேளாளர் பாடசாலையில் அப்போது தமிழாசிரியராயிருந்த திருமயிலை மகா வித்துவான் சண்முகம் பிள்ளை அவர்களை அடைந்து அவர்களிடம் தமிழ் கற்க வேண்டுமென்னும் தமது கருத்தை வெளியிட்டார்கள். அருள் நிறைந்த மனமுள்ளவர்களாகிய பிள்ளை அவர்கள் அகமகிழ்ந்து முதலியாரவர்களை மல்லீஸ்வரன் கோயிலுக்கு அழைத்துக்கொண்டு போய், அங்குள்ள ஆறுமுக சாமிக்கு முதலியாரவர்களின் பேரால் தம்செலவில் அர்ச்சனை செய்வித்துப் பிறகு கோயில் குளக்கரைக்கு முதலியாரவர்களை அழைத்துக் கொண்டு போனார்கள். அங்குச் சென்ற பிறகு பிள்ளையவர்கள் முதலியாரைப்பார்த்துத் தாம் சொல்லும் பரியந்தம் சுயமாகப் பாட்டு வரைதல் கூடாதென்றும், எக்காலத்தும் மத சம்பந்தமான சச்சரவுகளில் தலையிட வேண்டாமென்றும், சாதிச் சண்டைகளில் புகுதல் வேண்டாமென்றும் கூறி வாக்குறுதிப் பெற்றுக்கொண்டு தமது கையிலிருந்த தமது புஸ்தகத்தையே முதலியாரவர்களிடம் கொடுத்துப் பாடம்

சொல்லத்தொடங்கினார்கள். இத்தகைய பேரன்பு வாய்ந்த ஆசிரியர்களை இக்காலத்தில் காண்பது அரிதேயாகும். பிறகு முதலியாரவர்கள் பிள்ளையவர்களிடம் பதின்மூன்று வருட காலம் அதாவது 1892 ஆம் வருடம் முதல் 1905 ஆம் ஆண்டு வரையில் ஐயந்திரிபறக் கல்வியை ஓதி உணர்ந்தார்கள். முதலியாரவர்கள் தமது ஆசிரியரிடம் மிகுதியும் பற்றுள்ளவர்களாய் இருந்தார்கள். ஆசிரியருக்குப்பிள்ளை இல்லாமையினால் ஆசிரியர் விருப்பப்படி ஆசிரியர் இறந்த பிறகு முதலியாரவர்களே ஆசிரியருக்குச் செய்ய வேண்டிய கிரியைகள் யாவற்றையும் செய்ததுமன்றி, ஆசிரியர் மனைவியார் இறக்கும் வரையில் அவர்களுக்குப் பொருளுதவி செய்து அவர்களைக் காப்பாற்றியும் வந்தார்கள்.

முதலியாரவர்கள் ஆரம்பப் பள்ளிக்கூட ஆசிரியர் வேலையைவிட்டு ஓராண்டு சென்னை ஐகோர்ட்டில் உத்தியோகம் பார்த்து வந்தார்கள். ஆசிரியத் தொழிலையே விரும்பிய அவர்கள் மனம் ஐகோர்ட் வேலையில் செல்லவில்லை. அதனால் முதலியாரவர்கள் பிறகு ஆசிரியராவதற்கே விரும்பினார்கள். அவர்கள் விரும்பியபடியே அவர்களுக்கு 1896 ஆம் வருஷம் 'பிராட்வே செயின்ட் ஜேவியர்' பாடசாலையில் தமிழாசிரியர் பதவி கிடைத்தது. அந்த பாடசாலையில் அவர்கள் நான்கு வருடகாலம் தமிழ்ப் புலவராயிருந்து வந்தார்கள். சிறுவர்களின் தகுதிக்கேற்றபடி அரிய பல விஷயங்களை அமைத்து எழுதப்பட்ட புத்தகங்களை அக்காலத்தில் தமிழில் காணமுடியவில்லை. சிறப்பாகச் சிறுவர்களுக்கு ஏற்ற வகையில் அமைந்த இலக்கண நூல்கள் அக்காலத்தில் இரண்டொன்றும் இருந்ததில்லை. இந்தக் குறையில் இலக்கணங்கற்கும் சிறுவர்கள் படும் இடர்ப்பாட்டை நீக்கவேண்டுமென்றெண்ணிய முதலியாரவர்கள் முதன் முதலாக வாக்கிய இலக்கணம் என்னும் பெயரோடு சிறுவர் சிறுமியர்களுக்காக ஓரிலக்கணத்தை எழுதி வெளியிட்டார்கள். சிறுவர்களுக்கேற்ற வகையில் வெளிவந்த அச்சிறந்த இலக்கணத்தை அக்காலத்துக் கல்வித்துறை யாழ்ந்த அறிஞர்கள் போற்றிப் புகழ்ந்தார்கள்.

போதிக்கும் குணம் பிறவியில் அமைந்தது கற்றுக்கொள்வதொன்றினால் மட்டும் அமைவதன்றென்பதை நாம் அனைவரும் அறிவோம். முதலியாரவர்கள் பிறவியிலேயே சிறந்த ஆசிரியத்தன்மைகள் பல அமையப் பெற்றவர்களாவர். அதனால் அவர்கள் பால் கற்றோரனைவரும் எவ்விஷயத்தையும் எளிதாகச் சந்தேகமின்றிக் கற்றுக் களித்தார்கள். அவர்கள் சிறந்ததொரு தமிழாசிரியர் என்னும் செய்தி அப்போதிருந்த ஆங்கிலக்கலாசாலை அதிகாரிகள் அனைவருக்கும் எட்டியது. அதனால் முதலியாரவர்களைப் பல ஆங்கிலப் பள்ளிக்கூட அதிகாரிகளும் தங்கள் தங்கள் பள்ளிக்கூடங்களில் தமிழாசிரியராய் அமைத்துக் கொள்ள விரும்பினார்கள். அது காரணமாக முதலியாரவர்கள், இப்போது 'கார்ஷிக் கர்ல்ஸ் ஐஸ்கூல்' என அழைக்கப்படுவதும், அக்காலத்தில், 'யுனைட்டட் பிரீ சர்ச் மிஷன் கர்ல்ஸ் ஐஸ்கூல்' என அழைக்கப்பட்டது மாகிய கலாசாலையில் சிலகாலம் தமிழாசிரியராய் இருந்தார்கள். அப்போது அங்கு அவர்கள் நல்லாசிரியன் என்னும் பெயரை நன்கு பெற்றார்கள். மாணவிகள் முதலியாரவர்களின் தமிழ் வன்மையைக் கண்டு தமிழில் தாங்களும் தனித்ததோர் அவாக் கொண்டார்கள். சிறந்த பேராசிரியர்களிடம் கற்கும் எவரும் அவர்கள் கற்பிக்கும் விஷயத்தினால் அன்பு கொள்ளுவதும் அனுபவமே யன்றோ?

இவ்வாறு முதலியாரவர்கள் மகளிர் கலாசாலையில் தமிழ்ப்புலவராயிருக்குங்கால் இப்போது 'நாஷனல் பாங்க்' கட்டடமிருக்கும் இடத்தில் அப்போதிருந்த 'சிங்க்ளர்ஸ்' கல்லூரியில் தமிழ்ப்புலவராயிருந்த உயர் திருவாளர் வை. மு. சடகோப ராமானுஜாச்சாரியாரவர்கள் ஆறுமாத காலம் விடுமுறைபெற்றுச் சென்றார்கள். அவர்கள் இருந்த இடத்திற்கு, தக்க ஒரு தமிழறிஞரைத் தேட வேண்டியது அக்கல்லூரியின் தலைவரைப் பற்றிய கடமையாயிற்று. அத்தலைவர் பலவாறு முயன்று இறுதியாக நமது முதலியாரவர்களை ஏற்றவரென்றுஅறிந்து, அவரைப்பெரிதும் முயன்று தமது கல்லூரியில் தமிழ்ப் புலவராயிருக்க இணங்கச் செய்தார். இந்தக் கல்லூரியிலும் முதலியாரவர்கள் 'சிறந்த பேராசிரியர்' என்று மாணவர்களாலும் பிற ஆசிரியர்களாலும் மெச்சிப் பேசும்படியான பெருமையைப் பெற்றார்கள்.

'அறிவுடை ஒருவனை அரசனும் விரும்பும்,' 'கற்றோர்க்குச் சென்றவிடமெல்லாம் சிறப்பு'

என்னும் வாக்கியங்கள் முதலியாரவர்கள் விஷயத்தில் முழுவதும் உண்மையாயின. அரசரும் விரும்பக்கூடிய அறிவினையுடைய முதலியாரவர்களின் திறத்தினைக்கண்டு கல்லூரி மாணவர்கள் வியப்பெய்தியமை வியப்பன்றே! முதலியாரவர்கள் சிறந்த கல்வியறிவோடு பொது அறிவு மிகுதியும் வாய்க்கப் பெற்றவர்களாவார்கள். அதனாலவர்கள் மாணவர்களை எளிதில் மகிழ்ச்சியுறச்செய்து கல்வியில் கருத்துக்கொள்ளச் செய்தார்கள். கல்வியறிவோடு பொது அறிவும் வாய்க்கப்பெற்ற ஆசிரியர்களே உண்மையில் எந்த நாட்டிலும் சிறந்த ஆசிரியர்களென்று மதிக்கப்படுகிறார்கள். இதை அறியாது, 'அகழியில் விழுந்த முதலை அதுவே சிவலோகம்' என்பது போல, தாங்கள் கற்ற கல்வியே எவ்வாற்றானும் சிறந்தது ; அதற் கப்பால் தாண்டிச் செல்ல வேண்டிய அவசியமில்லை என்று நினைப்பவர்கள் சிறந்த ஆசிரியர்களாகமாட்டார்கள்.



திரு. எஸ். எஸ். அருணகிரிநாதர்

கல்வி யறிவும் பொது அறிவும் ஒருங்கே வாய்க்கப்பெற்ற நமது முதலியாரவர்கள் 1902 ஆம் ஆண்டு முதல் 1914ஆம் ஆண்டுவரையில் இப்போதும் சென்னை வேப்பேரியில் நலம் பெற்று விளங்கும் 'எஸ்.பி ஜி. ஐஸ்கூல்' என வழங்கும் திருபவுல் உயர்தரப் பாடசாலையில் தலைமைத் தமிழாசிரியராய்த் திகழ்ந்து மாணவர்கள் மனமகிழும் வண்ணம் அவர்களுக்குத் தமிழமுதத்தை அகமகிழ்ச்சியுடன் ஊட்டி வந்தார்கள். அந்தக் கலாசாலையில் முதலியாரவர்கட்குப்பேரும் புகழும் மிகுதியும் பெருகியது. மாணவர்கள் அனைவரும் முதலியாரவர்களிடம் கொண்ட அன்புக்கோர் அளவில்லை. அப்போது இக்கலாசாலையில் 'பாட்ஸ்' என்னும் பெயர் கொண்ட பேரறிவாளரான பாதிரியாரொருவர் 'பிரின்ஸ்பா'லாகவிருந்தார். அத்துரை மகனார் முதலியாரவர்களின் கல்வித்திறனையும், போதனா முறையினையும், மாணவர்கள் அவர்கள் பால் கொண்டுள்ள அன்பினையும் மாணவர்கள் பால் அவர்கள் வைத்துள்ள கருணையினையும் கண்டு கண்டு களித்துக் களித்து இன்ப மெய்தினார் என்பதை அக்காலத்தில் அக்கலாசாலையிலிருந்த ஆசிரியர்கள் பலரும் அறிவார்கள். இத்துரைமகனார்ஏனைய ஆசிரியர்களிடம் காட்டிய அன்பைப் பார்க்கினும் நமது முதலியாரவர்களிடம் தனித்ததொரு பேரன்பைக் காட்டிவந்தார்கள். இவர்கள் முதலியாரவர்கட்குச் செய்த பேருதவிகள் பலவாகும். முதலியாரவர்களுடைய சிறந்த முன்னேற்றத்திற்கு உறுதியாக அடிகோலியவர் இத்துரை மகனாரென்றே கூறலாம். அன்னிய நாட்டவராகிய இத்துரை மகனார் நமது நாட்டவராகிய முதலியாரவர்கட்குச் செய்த பேருதவியைப் போன்றதொரு பேருதவியை நமது நாட்டவர் நமது நாட்டவர்கட்குச் செய்வார்களோவென யான் ஐயுறுகின்றேன். ஒருக்கால் அவ்வாறு உதவி செய்யக்கூடியவர்கள் நமது நாட்டிலும் நமது முதலியாரவர்களைப் போன்றவர்கள் சிலரிருக்கலாமென யான் நினைக்கின்றேன். முதலியாரவர்கள் 'எஸ். பி. ஜி.' கலாசாலையிலிருக்கும்போது 'பாட்ஸ்' துரை மகனாரும், மாணவர்களும் அவரிடம் கொண்ட அன்புக்கறிகுறியாக நடந்தநிகழ்ச்சிகள் பலவாகும். நான் சுருக்கமாக எழுதப் புகுந்த இந்த வரலாற்றை அவைகளையும் சேர்த்துப் பெருக்கமாகச்செய்ய அஞ்சுகின்றேன். முதலியாரவர்களுடைய சரிதத்தை யான் பெருக்கமானதோர் நூலாக எழுதி வெளியிட எண்ணியுள்ளேன். திருவருள் துணை நிற்குமானால் அப்போது அவர்கள் சம்பந்தமான அரிய விஷயங்கள் அனைத்தையும் எழுதுவேனென்பது திண்ணம்.

யான் முன்னே ஓரிடத்தில் கூறியபடி அக்காலத்தில், காலத்தை அனுசரித்து நந்தமிழ் மாணவர்களுக்கென உலகியலறிவும் கல்வியறிவும் வாய்ந்த தமிழ் மகனால் எழுதப்பட்ட தமிழ்ப்புத்தகங்கள் இல்லாமை பெரியதொரு குறையாயிருந்தது. அந்தக் குறையை நிவர்த்திக்க வேண்டுமென்று முதலியாரவர்கள் தீர்மானித்து அதற்கான வழி வகைகளைப் பலகாலும் சிந்தித்துக் கடைசியில் 1905 ஆம்

ஆண்டு முதல் தொடர்ச்சியாக நமது மாணவர்களுக்கு அவசியமான நூல்களை எழுதத்தொடங்கினார்கள். அவர்கள் தொடர்ந்து எழுதிய புத்தகங்களைத் தொடர்ந்து வெளியிட்டு வந்தவர் 'குமாரசாமி நாயடு ஸன்ஸ்' சொந்தக்காரரான கன்னைய நாயடு அவர்களே யாவர். நாயடு அவர்கள் ஆதி முதல் தாம் இறக்கும் வரையில் முதலியாரவர்களைத் தம் உடன்பிறந்த சகோதரரைப்போன்று நேசித்து வந்தார்கள்; முதலியாரவர்களும் அவரிடத்தில் அவ்வாறே நடந்து வந்தார்கள்.

முதலியாரவர்கள் முதன் முதல் பாட புத்தகங்களை எழுதி வெளியிட்டபோது அவர்களுக்குச் சில சுயநலக்காரர்களால் ஏற்பட்ட இன்னல்கள் பலவாகும். அவைகளை யெல்லாம் அவர்கள் 'பாட்ஸ்' துரை மகனாரின் துணைகொண்டு எதிர்த்து, 'அறிவுள்ளவர்கள் எவரும் கலாசாலைகளுக்கேற்ற நூல்களை எழுதலாம்' என்னும் கொள்கையை நிலைபெறச் செய்தார்கள். அவர்கள் நிலை நாட்டிய அந்தக் கொள்கைதான் இப்போது பலரும் கலாசாலைக்கான பலவித புத்தகங்களை எழுதுவதற்கு துணையாயிற்று.

1906 ஆம் ஆண்டு முதலியாரவர்கள் தமது பெரியோர்கள் கருத்துப்படி சுந்தரம்மாள் என்னும் பெயரினையுடைய அம்மையாரைத் திருமணம் செய்து கொண்டார்கள். இவ்வம்மையாரைப்பற்றி இரண்டொரு வரியேனும் எழுதாமற் செல்ல என் மனம் இடந்தரவில்லை. இவ்வம்மையார் பத்தாவுக்கேற்ற பதிவிரதை, படிசொல் தவறாத பண்பின்மிக்கவர்; கணவர் கருத்தே தங் கருத்தாகக் கொண்டவர்; விருந்தினரை உபசரிக்கும் விருப்பு வாய்ந்தவர். இத்தகைய புனிதவதியாரோடு முதலியாரவர்கள் நடத்தும் இல்லறம் நல்லறமாக விளங்குவது வியப்பன்றே!

முதலியாரவர்கள் பல துறைகளிலும் பல விஷயங்களைப் பற்றியும் எழுதும் வன்மை வாய்ந்தவர்கள். அவர்கள் ஒரே விஷயத்தைப் பிள்ளைக்கும் விளங்கும்படி எழுதுவார்கள். பெரியவர்களுக்கும் விளங்கும்படி எழுதுவார்கள். பேசுவதிலும் இந்தத் திறம் அவர்களிடம் மிகுந்து காணப்படுகின்றது. இத்திறம் எல்லோரிடத்திலும் எளிதில் அமைவதன்றென்பதை அறிவுள்ளோர் பலரும் அறிவர்.

முதலியாரவர்கள் 1909-1910 ஆம் வருடங்களில் முறையே 'பிரிதிவிராஜன்' 'கீசகன்' என்னும் இரண்டு அரிய நாடகங்களையும் 'சுமனோ ரஞ்சன சமாஜ'த்தின் அங்கத்தினர்களின் வேண்டுகோளுக்கிணங்கி எழுதி வெளியிட்டார்கள். இவைகள் பல முறை அரங்கங்களில் நடிக்கப்பட்டன. ஆடவரும் பெண்டிரும் இவைகள் நடிக்கப்படும் போதெல்லாம் சென்று சென்று கண்டு களிக்கலானார்கள். சுருக்கமாகக் கூறவேண்டுமானால் இவைகள் இனிய, எளிய, பல அழகுகளையும் கற்பனைகளையும் தன்னகத்துக்கொண்டு விளங்குகின்றன வெனலாம். முதலியாரவர்களுடைய நாடகங்கள் 'ஷெரிடன்' முதலிய சில மேனாட்டு ஆசிரியர்கள் எழுதியுள்ள நாடகங்களையும் விஞ்சி, சிலவிடங்களில் காணப்படுகின்றன. பேரறிஞராய் விளங்கிய L. D. சுவாமிக்கண்ணுப்பிள்ளை அவர்களும், பேரறிஞராய் விளங்குகின்ற பிரணதார்த்திகர ஐயர் அவர்களும் முறையே 'பிரிதிவி ராஜன்' 'கீசகன்' என்னும் நாடகங்களுக்குத் தாங்கள் எழுதிய முன்னுரையில் அந்நாடகங்களைப்பற்றி உள்ளவாறு புகழ்ந்தெழுதி யிருக்கிறார்கள். பிரிதிவிராஜன் என்னும் நாடகத்தைக் கல்வியதிகாரிகள் 1910 ஆம் ஆண்டில் எஸ். எஸ். எல். ஸி. பரீட்சைக்கு உபபாடமாக வைத்து மகிழ்ந்தனர். முதலியாரவர்களின் திறமையினையும், புகழினையும் அறிந்த கல்வியதிகாரிகள் 1910 ஆம் ஆண்டில் எஸ். எஸ். எல். ஸி. பரீட்சைக்கு உதவி பரிசோதகராக நியமித்தார்கள். இதற்குள் முதலியாரவர்களுடைய பேரும் பெருமையும் சீரும் சிறப்பும் எங்கெங்கும் நன்கு பரவியது.

1914 ஆம் வருஷம் பல எதிர்ப்புகளுக்கிடையில் பெண்களுக்கென ஒரு கல்லூரியை அரசாங்கத்தினர் 'மேரி ராணியார் கல்லூரி' என்னும் பெயரோடு ஏற்படுத்தினார்கள். 'பெண்களுக்கென ஒரு கல்லூரியை அரசாங்கத்தார் அமைக்கும் வகையில் செலவிடும் பணம் வியர்த்தமானதாகும். அக்கல்லூரிக்குத் தேவையான மாணவிகள் கிடைப்பது அருமை. ஆகவே, அக்கல்லூரி விரைவில் வீழ்ந்துவிடும்' என்று தங்கள் கருத்துச்சிறந்ததென்று கருதியவர் கூறினார்கள். ஆயினும் அரசாங்கத்தினர் தங்கள் கருத்தை நிறைவேற்றினர். ஆயினும் அக்கல்லூரிக்கு ஆசிரியர்களை அரசாங்கத்தினர் வருந்தித் தேடி நியமிக்க வேண்டியவர்க

உங்கள் ஊர் குமார விகடன் ஏஜண்டிடமே
ரூ. **10** க்கு பெற்றுக் கொள்ளலாம்

# ஜுபிலி தமிழ்ப் பேரகராதி




இனி நீங்கள் போட்டிப்பந்தயங்களுக்குக் கவலை இன்றி தக்கவிடைகளை அதிசுலபமாகத் தெரிந்து விடை யளிக்கலாம்.

மேலும் ஒவ்வொருவருக்கும் இன்றியமையாத கருவி நூல்களுள் முக்கியமானதும் கல்வி பயிலும் மாணவர்களுக்கும், வர்த்தகசாலைகளில் தக்க பதங்களை உபயோகித்து விளம்பரம் செய்வதற்கும் இது ஒரு அரிய பொக்கிஷம் போன்றது.

ஒவ்வொரு வாசகசாலைகளிலும் இருக்கவேண்டிய தவசியமல்லவா?

ராயல் 1/8 பெரிய அளவில் 1400 - பக்கங்கள் கொண்டது. உயர்ந்த கிளேஸ்கடிதத்தில் ரெக்ஸின் தங்க கில்ட் பைண்டு செய்யப்பெற்றது.

சுதேசமித்திரன், ஹிந்து முதலிய பிரபல பத்திரிகைகளின் மதிப்புரை பெற்றதும், அரிய வித்துவான்களின் சிறப்புப் பாயிரத்துடனும் விளங்குவது.

விலை ரூபா. **10-0-0**

குறிப்பு:—இதுவரையில் வெளிவந்துள்ள எல்லா அகராதிகளைக் காட்டிலும் 1000-க்கணக்கான பதங்களை அதிகமாகக்கொண்ட இது மிக்க சிறப்புடையதென நாங்கள் கூறுவது மிகையாகாது

தமிழ் நூற் பதிப்பகம், காஞ்சீபுரம்.

## அச்சுக்கூட

### முதலாளிகளுக்கு நல்ல லாபம்.

நான் சுமார் 10-வருட காலமாக அச்சுக்கூடத்திற்கு தேவையுள்ள எல்லாவிதமான மிஷின்களும் சாமான்களும், புதியதாகவும், பழயதாகவும் வாங்கிக்கொடுத்து வருவது தங்களுக்கு நன்கு தெரிந்த விஷயம். தற்சமயம் மிகவும் ஒழுங்காக வேலை செய்துக்கொண்டிருக்கும் அச்சு யந்திரங்கள் என் வகையில் பல உள்ளன. தங்களிடத்தில் விற்பனைக்கு யிருக்கும்படியான சாமான்களை அதி சீக்கிரத்தில் விற்றுக்கொடுக்கவும் முடியும். தாங்கள் வாங்குவதற்கும் விற்பனை செய்வதற்கும் நான் மிகவும் ஒழுங்காய் நடந்துகொள்வேன். என்னிடம் ஒருதடவை வியாபாரம் செய்து பார்த்தால் நன்குவிளங்கும். தாங்கள் சென்னைக்கு வந்தால் தங்குவதற்கு வசதியான இடம் அமைத்திருக்கிறேன். தாங்கள் வருவதற்கு முன் கடிதம் எழுதினால் மிகவும் நலம்.

இப்படிக்கு, தங்கள் உண்மையுள்ள,
N. S. குப்புசாமி, 302. தங்கசாலை தெரு,
மின்ட்போஸ்டு, சென்னை.

## திராக்ஷைப்பழ லேகியம்

மலச்சிக்கலே எல்லா வியாதிகளுக்கும் காரணம். இதனால் நம் நாட்டில் கோடிக்கணக்கானவர்கள் அவஸ்தைப் பட்டு அதைச் சரியாய்க் கவனிக்காமையினால் அநேகவித நோய்களுக்கு ஆளாவதை நாம்நேரில் பார்த்திருக்கிறோம். அதற்கு இது திவ்வியமான மருந்து. சாப்பிடுவதற்கு மிகருசியாய் இருக்கும். இரவில் படுத்துக்கொள்ளும்போது ஒரு கச்சைக்காய் பிரமாணம் சாப்பிட்டு படுத்துக்கொண்டால் காலையில் மலம் தாராளமாக போய்விடும். யாதொரு கெடுதலுமில்லை. தேகம் ஆரோக்கியமாய் இருக்கும்.

½ சேர் 0—12—0    1 சேர் 1—4—0
தபால் சார்ஜ் பிரத்யேகம்.

நாராயண வைத்தியசாலை,
காஞ்சீபுரம்.

சென்னைக்கு சோல் ஏஜெண்டு:—
A. வெல்டன் & கோ.,
1/174, பிராட்வே, சென்னை.

ளானர்கள். கடைசியாகத் தகுதி வாய்ந்த தமிழ்ப் புலவர் ஒருவரைத்தேடி அமைப்பது அரசாங்கத்தினரின் அவசியமான கடமையாய் இருந்தது. இவ்விஷயத்தினை அரசாங்கத்தினர் அப்போது கல்வியிலாகா டைரக்டராயிருந்த டங்கன் துரையவர்களிடத்தில் ஒப்படைத்து விட்டார்கள். நிலையற்ற எதிர் காலத்தையுடைய அக்கல்லூரிக்கு ஒரு தமிழறிஞர் எங்கிருந்து கிடைக்கப் போகிறார் என்று 'டங்கன்' துரையவர்கள் எண்ணிக்கொண்டிருக்கும்போது அவரிடம் நமது முதலியார் அவர்களைப்பற்றி அப்போது பள்ளிக்கூட 'இன்ஸ்பெக்டராயிருந்த' இராவ்பகதூர் பிரணதார்த்திகர ஐயரவர்கள் புகழ்ந்து பேசினார்கள்.

உடனே டங்கன் துரையவர்கள் சந்தோஷப்பட்டு முதலியாரவர்களை 'மேரி ராணியார் கல்லூரி'யில் தமிழ்ப்புலவராயிருக்கும்படிக் கேட்டுக்கொண்டார்கள். 'தமக்கென வாழாப் பிறர்க்குரியாள'ரான முதலியாரவர்கள் நிச்சயமற்ற எதிர்காலத்தையுடையதென்று அக்கல்லூரியைப்பற்றிப் பலர் தமக்குச் சொல்லியும் தம்மாலானன உதவியைத் தாம் அக்கல்லூரிக்குச் செய்து அதை நிலை நிறுத்த வேண்டுமென்னும் ஒரே நோக்கத்தோடு, அதில் ஆசிரியராயிருக்க இசைந்து விட்டார்கள். அப்போது அக்கல்லூரிக்கு 'பிரின்ஸ்பா'லாக இருந்தவர் 'மிஸ் டிலாஹே' என்னும் அம்மையாராவர். அவ்வம்மையாரும், நமது முதலியாரவர்களைப் போன்ற இதர பேராசிரியர்களும் எடுத்துக்கொண்ட முயற்சியின் பயனால்தான் இப்போது அந்தக் கல்லூரி உரம் பெற்று நிற்கின்றது என்பது மிகையாகாது.

முதலியாரவர்கள் 'மேரி ராணியார் கல்லூரி'யில் பெரும்புகழ் படைத்த பேராசிரியராய் இருந்தபோது, 1917 ஆம் ஆண்டு, அரசாங்கத்தினர், அவர்களைச் சென்னைச் சர்வகலாசாலைத் தமிழ் 'போர்டி'ல் தலைமைப் பரிசோதகராய் இருக்கச் செய்தார்கள். அப்போது அந்தப் போர்டின் தலைவராகத் தமிழ்ப்பேரறிஞர் தி. த. கனகசுந்தரம் பிள்ளை அவர்களிருந்தார்கள். முதலியாரவர்களும் பிள்ளையவர்களும் ஒருவர் மீது மற்றொருவர் மிகுதியும் பேரன்புற்றிருந்தார்கள்.

பிறகு 1918 ஆம் ஆண்டில் தமிழறிஞர் அனவரத விநாயகம் பிள்ளை அவர்கள் தலைவராயிருந்தபோது முதலியாரவர்கள் 'போர்டு ஆப் ஸ்டடி'யின் அங்கத்தினரானார்கள். பின்னர் அனவரத விநாயகம் பிள்ளை அவர்கள் உத்தியோக சம்மந்தமாகச் சிலோனுக்குச் சென்ற பிறகு 1920 முதல் 1934 வரையில் நமது முதலியாரவர்களே, போர்டு ஆப்-ஸ்டடியின் தலைவராயிருந்து பல அரும்பணி ஆற்றி இருக்கின்றார்கள். அவைகளையெல்லாம் எழுதின் பெருகும். ஆனால் ஒன்றை மட்டும் சொல்லாமற் செல்ல என் மனம் இடந்தரவில்லை. அக்காலத்தில் தமிழோடு சமஸ்கிருதம் முதலிய மொழிகளைக் கற்றால் தான் வித்துவான் பட்டம் பெறலாம். அது பலர்க்கு இடர்ப்பாடாயிருந்தமையை யறிந்த முதலியாரவர்கள் தனித்தமிழ் வித்துவான் பரீட்சை ஏற்படுவதற்குப் பெரிதும் முயன்றார்கள். இவ்வாறு முதலியாரவர்கள் செய்திராவிட்டால் இப்போது இத்தனைத் தனித் தமிழ் வித்துவான்களைக் காண வியலாது. இன்னும் முதலியாரவர்கள் தமிழ் மக்களுக்காகவும் பிற மக்களுக்காகவும் செய்த நன்மையை எழுதப்புகின் அது ஒரு தனிப் புத்தகமாய் விடுமாதலால் இப்போது என் நினைவிற்கு வருகின்ற ஒரு சிலவிஷயங்களை மட்டும் கூறி இவ்வரலாற்றை சுருக்கிக் கொள்ளுகின்றேன்.

முதலியாரவர்கள் எழுதிய புத்தகங்களிற் பல, பலமுறை எஸ். எஸ். எல். ஸி., இண்டர்மீடியேட், பி. ஏ. வகுப்புக்களுக்குப் பாடமாக வைக்கப்பட்டிருக்கின்றன; வைக்கப்படுகின்றன. முதலியாரவர்களுக்கு ஆரம்ப ஆசிரியர்களிடம் எப்போதும் ஒருதனி அன்பு உண்டு. ஆகவே, அவர்கள் அவ்வாசிரியர்களின் நன்மையைக்கருதி, முன் மாதிரியாகப் பதினைந்து வருடகாலம் 'நல்லாசிரியன்' என்னும் நல்லதோர் மாதப் பத்திரிகையை நடத்தி வந்தார்கள். அதனால் நாட்டுக்கு விளைந்த நன்மைகள் பல; ஆரம்ப ஆசிரியர்கள் அடைந்த நன்மைகள் அளப்பில.

சாதாரண மக்களும் படித்துக் களிக்கும்படி முதலியாரவர்கள் ஆத்திசூடி முதல் பல நூல்களை உயர்ந்த பதிப்பில் வெளியிட்டுள்ளார்கள்.

புலவர் பெருமக்களுக்காக முதலியாரவர்கள் பதிப்பித்த புத்தகங்களில் அவர்களுடைய சிறந்த அறிவின் திறம் சுடர் விட்டுத்தோன்றுகின்றது. அவர்கள் வெளியிட்ட இளம்பூரணம் சொல்லும், பொருளும், தணிகை புரா

ணம், தஞ்சை வாணன் கோவை, இறையனுர் களவியல் முதலிய நூல்கள் அவர்களுடைய நுண்ணறிவின் பெருக்கத்தை நன்கு விளக்கு கின்றன.

முதலியாரவர்கள் எழுதிய தேசிங்கு ராஜன், ஜனகன், என்னும் இவ்விரு புத்தகங் களும் முறையே சென்னைக் கவர்னரா யிருந்த 'ஆர்தர் லாலி,' சென்னை பிஷப், ஆகிய இவர் களின் விருப்பத்திற் குரியவையாயின. தமிழ் மக்கள் தமிழின் பெருமையை அறியச்செய் ததுமன்றி, ஆங்கிலேயரும் அதன் பெருமையை அறியச் செய்தபெருமை முதலி யாருக்கு உரியதாகும்.

காலஞ் சென்ற நமது மாட்சிமை தங்கிய ஐந்தாம் ஜார்ஜ் சக்கரவர்த்தியாரவர்கள் 1911 ஆம் ஆண்டு டெல்லியில் முடிசூட்டிக்கொண்ட போது 'பாட்ஸ்,' துரைமகனுரின் உதவி பெற்று நமது முதலியாரவர்கள் கமலபந்த மொன்றியற்றி நமது அரசர் பெருமானுக்கு அனுப்பினுர்கள்; இங்கிலீஷ் மொழி பெயர்ப் பும் அனுப்பப்பட்டது. அது 30,000 தாள் களில் அச்சிடப்பெற்று டெல்லியில் வழங்கப் பட்டது. பின்னர், காரியதரிசியாரிடமிருந்து 'மன்னர் பெருமான் நீங்கள் அனுப்பிய பாட் டைக்கண்டு மகிழ்ந்தார்,' என்ற கடிதமொன்று முதலியாரவர்கட்கு வந்தது. பிறகு, முதலி யாரவர்கள் பாடிய அந்தக் கமலபந்தம் பல ரும் காணும்படியாக 'லண்டனி'ல் உள்ள இந்தியா ஆபீசில் வைக்கப்பட்டது.

இவ்வாறு முதலியாரவர்கள் சமயம் நேரும் போதெல்லாம் அரசர் முதல் அனைவரும் 'தமிழ்' என்னும் சொல்லையேனும் கேட்கும் படி செய்து வந்தார்கள். நமது மொழியினிடத் தும் அம்மொழியைக்கற்ற புலவர்களிடத்தும் முதலியாரவர்கட்குப் பெரிதும் ஆர்வமுண்டு என்று சொல்லவும் வேண்டுமோ?

முதலியாரவர்கள் எவ்வளவு அழகாக எழுத வல்லவர்களோ அவ்வளவு அழகாகப் பாடுதலி லும் வல்லவர்களாவார்கள். அவர்கள், 'குண வான் தன் குற்றம் உணர்வான்' என்னும் தலைப் பின் கீழ்ப்பாடிய பாட்டுக்கள் படிக்கப் படிக்க மகிழ்ச்சியைத் தருகின்றன.

முதலியாரவர்கள் விநோதமாகப் பாடுவதி லும், பேசுவதிலும், எழுதுவதிலும், வல்ல வர்கள் என்பது யாவரும் அறிந்தவொன்றும். 'கயவன் தன் கல்வி அருமை அறிந்தது' என் னும் தலைப்பின் கீழ் முதலியாரவர்கள் பாடி யுள்ள பாட்டுகள் எவ்வளவு சிரிப்பை விளைவிக் கின்றன!

முதலியாரவர்கள் எழுதியுள்ள 'டிராமாடிக் இன்டர்லூட்' என்னும் சிறு தமிழ் நாடகங்கள் சிறுவர் சிறுமியர்கள் நடிப்பதற்கு மிகவும் தகுதியுடையவைகளாய் இருக்கின்றன. அவை களைப்பற்றிப் பள்ளிக்கூட 'இன்ஸ்பெக்டரா யிருந்த 'வில்லியம்ஸ் பிள்ளை' அவர்கள் மிக அழகாகப் புகழ்ந்து எழுதி இருக்கின்றார்கள்.

சென்னை இராஜதானிக் கலாசாலையில் முத லியாரவர்கள் சில காலம் தமிழ்ப் புலவரா யிருந்து வந்தார்கள். எங்கும் போலவே அங்கும் அவர்கள் சிறந்து விளங்கினுர்கள். முதலியாரவர்கட்கு மாணவர்களிடத்தில் மட் டற்ற அன்புண்டு. அவர்கள் அன்பே வடிவ மாக அமைந்தவர்கள். அன்பு வேறு அவர்கள் வேறு என்று சொல்ல நான் துணிய மாட் டேன்.

முதலியாவர்களுடைய சரிதத்தைச் சுருக்க மாகவேனும் வரையவேண்டு மென்றெண்ணி வரைந்தமைக்குக் காரணம் முதலியாரவர்கள் ஒரு நற்குண நிதி. தீமை செய்தவர்களுக்கும் நன்மை செய்யும் நல்லியல்பு வாய்ந்தவர்கள். குணங்கண்ட விடத்து மகிழும் குணசீலர். பாரிக்குவமையாக மாரியைச் சொன்ன புலவர் இக்காலத்திருப்பாராயின், முதலியாருக்குவ மையாகவும் அம்மாரியையே கூறியிருப்பா ரென்பது திண்ணம்.

முதலியாரவர்கள் தங்களுடைய இடைவிடா முயற்சியினுல் முன்னேற்ற மடைந்தவர்கள். தாங்கள் வருந்தித்தேடிய பொருள்களைத் தகுதியுடையோருக்கு அள்ளி அள்ளிவழங்கிய வர்கள். இவர்களுடைய வாழ்க்கை மாணவர் களுக்கும் பெரியவர்களுக்கும் எடுத்துக்காட் டாக இருக்கின்றது. இத்தகைய பெருமகனு ருடைய பெருமையை இடமிருக்குமானுல் எவ்வளவு வேண்டுமானுலும் எழுதிச்செல்ல லாம்.

'இத்தகைய முதலியாரவர்களின் பெயரும் புகழும் சிறப்பதாக! அவர்கள் மக்களும் சுற்ற மும் புகழ் மலிந்து பெருகுவதாக!' என்று இறைவனின் முருகலர் பாதங்களை இறைஞ்சு வதன்றியாம் வேறு யாதியற்ற வல்லேம்!

இதனை எழுதுபவர் அண்மையில் முதலியார் அவர்களிடம் பயின்ற ஓர் இளைஞர். முதலியார் அவர்களை பலவர்ணப்படங்களாய்ச் சித்தரித்து அப்படியே வாசகர்கட்குக் காட்டுகின்றார். 'எங்களுக்குப் போதமும் பொருளும் புகட்டிய தரு இதோ!' என்று சுட்டிக் காட்டி இறுமாந்திடும் இக்கட்டுரையாளர், எப்படித்தான் முதலியாரவர்கள் முடிவெய்திய செய்தி கேட்டு திடுக்கிட்டாரோ நாமறியோம். —ஆசிரியர்.

# எங்கள் ஆசிரியர்

**சுமார்** ஆறு வருடங்களுக்கு முன்னேயொருநாள் எங்கள் ஆசிரியர் வெண்பா இலக்கணம் கற்பித்துவிட்டு 'புலவர்க்கு வெண்பாப் புலி' என்றுசொல்லி முடித்தார். வகுப்பிலிருந்தமாணவர்களில் எத்தனைப்பேருக்கு அந்தத் 'தேமாங்கா'யும் 'புளிமாங்கனி'யும் இனித்தனவோ தெரியாது. எத்தனைப்பேர் அந்தப் 'புலி'யை எப்போதேனும் சந்திக்க நேரிடுமென்று எண்ணினார்கள் என்பதும் சந்தேகந்தான். ஆனால், மறுநாள் அந்த வகுப்பிலிருந்த கரும்பலகையிலே,

"காரார் கருணையார் நேரார் நெறியினார்
காரா நமசிவாயப் பேராரை—ஓராயோ!
நாந்தமிழில்காட்டார்வ நாறுமலர்தாளவிழப்
பூந்தணலே வீசுகதிர் பார்."

என்னும் வெண்பா எழுதப்பட்டிருந்தது. இதிலிருந்து, சாதாரணமாகப் புளிப்பும் கைப்புமாகத் தற்கால மாணவர்கள் பாவிக்கும் அக்காயுங் கனியும், அந்த ஆசிரியரிடமிருந்து கிடைத்த காரணத்தினால், ஒருவனுக்கேனும் விரும்பிப் புசித்தற்கேற்ற இனித்த சுவைக் கட்டிகளாக ருசித்தனவென்றும், அவைகளை உண்டதனால் அவர் கூறிய புலியை மறுநாளே பிடித்துவந்து காட்டக்கூடிய பலமும் தைரியமும் அவனுக்கேற்பட்டனவென்றும்நிச்சயமாகக்கூறலாமல்லவா?



திரு. ஜெ. தங்கவேல் B.A.,

உண்மையைக் கூறவேண்டுமானால், ஆசிரியர் நமசிவாய முதலியாரவர்களது போதனையிலே இன்பங்காணாதவனை இந்தக்காலத்துத் தமிழ் மாணவர்களிடையே கூட — இல்லை; பள்ளியெழுச்சியின் ஓசை என் செவிகளில் ஒலிக்கிறது; தமிழ்த்தாய் பள்ளியெழுந்து முக மலர்ந்து வருங்காட்சி என்னை மடக்குகிறது; அந்த அம்மை ஆடையின்றி வாடையின் மெலிந்து, ஆங்கிலமாது அவமதித்து வலது பேச மூலையில் முடங்கிக் கிடந்த அந்தக்காலத்து மாணவர்களிடையேகூட — காண்பதரிதென்றே சொல்லவேண்டும்.

அவருடைய மாணவர்கள் அவர்பால் கொண்டிருந்த பற்றுக்கும் மதிப்புக்கும் என்னுடைய உணர்ச்சியையே ஓர் அளவு கருவியாகக் கொள்ளலாமென நினைக்கிறேன். முதலியாரவர்கள் வகுப்புக்கு வாராத ஒவ்வொரு நாளும் ஏதோ ஒருபெரிய பொக்கிஷத்தை—அரிய இன்பத்தை—இழந்து விட்டதாகவே எனக்குத்தோன்றும். அவர்கள் அப்படி ஓய்வெடுத்துக் கொள்வதும் அபூர்வமன்று. ஆகவே, இத்தகைய ஏமாற்றத்துக்கு நான் பலநாள் ஆளானதுண்டு. ஆனால் இந்த ஏமாற்றம் என்னைமட்டும் தாக்கவில்லையெனப் பிறகு தெரிந்துகொண்டேன். ஏனெனில், சில நாட்களுக்குப் பின்னர் அவர் கலாசாலையை விட்டுச் செல்வதாகத் தெரிந்தபொழுது ஒவ்வொரு மாணவனுந்தான் திடுக்கிட்டான்; ஒருவன் தப்பாது அனைவருமாகச்சேர்ந்துதான் கடைசிவரையிலிருந்து எங்களைக் 'கரை சேர்த்து விட்டுச்' செல்லும்படி அவரிடம் மன்றாடினோம். இக்காலத்து மாணவர்களுக்குத் தங்கள் ஆசிரியரிடம், அதிலும் தமிழாசிரியரிடம், இவ்வளவு அபாரமான அன்பு இருந்ததென்றால், இக்காலத்திய தமிழ் வகுப்பிலே ஓரளவு பண்டைய குருகுலத்தின் மணங் கமழ்ந்த தென்றால், அந்த ஆசிரியரிடத்தில் ஏதோ அரிய சக்தி இருந்திருக்கவேண்டும், அபூர்வகுணங்கள் திகழ்ந்திருக்கவேண்டும் என்பதில் ஐயமுண்டோ?

சில பெரியார்களோடு பேசிப்பழகிய பின்னரே அவர்களது மகிமையை நாம் உணருகிறோம். ஆனால் சிலரைக்கண்ட அளவிலேயே அவர்கள் வயப்பட்டுவிடுகிறோம். முதலியாரவர்கள் இரண்டாவது வகையைச் சேர்ந்தவரென்றே சொல்லவேண்டும். பிரமாதமான கட்டழகில்லை; ஆஜானுபாஹு என்றும் கூறுவதற்கில்லை; ஆனால் அந்த உருவம் கண்டார்ப்பிணிக்கும் சக்திவாய்ந்ததென்பதில் மட்டும் எள்ளளவும் சந்தேகமில்லை. முதல் நாள் அவர் எங்கள் வகுப்புக்கு வந்தபோதே எங்களில் பலரது உடலும் உள்ளமும் பூரித்தன என்றால் மிகையாகாது. இந்த அபூர்வசக்தி, ஆயிரக்கணக்கில் சம்பளம் வாங்கிக்கொண்டிருந்த பேராசிரியர்களைக் (Professors) கூட தோற்கடிக்கக்கூடியவகையிலே அவர் தினமும் ஒழுங்காக உடுத்திவந்த தூய்மையான விலையுயர்ந்த உடையில் மட்டுமில்லை; நிதானமும் கம்பீரமுங்கலந்த அவர் நடையில் மட்டுமில்லை; மூக்குக்கண்ணாடியைக் கழற்றிப்பிடித்துக்கொண்டு பார்வையை வகுப்பில் ஊடுருவிப்பாயும்படிச் செலுத்திக்கொண்டு நிற்கும் அந்தக் காட்சியில் மட்டுமில்லை. அந்த வதனத்தில் திகழும் ஒரு கம்பீரம், அந்த மீசைக்கற்றையிலே செறிந்து கிடக்கும் ஒரு அனுபவ முதிர்ச்சி, அந்த மெலிந்த இதயத்தின் தயாளத்தைப் பிரதிபலிக்கும் கூர்ந்த விழிகளிலே தோய்ந்து கிடக்கும் அளவற்ற கருணை—இவைகளே எங்கள் இதயங்களை வலிந்திழுத்தன.

கண்டார்ப்பிணிக்கும் இந்தக் காந்த வடிவத்தினின்றும் பிறக்கும் சொல்லும் கேட்டார்ப்பிணிக்குந் தகையதாயிருந்ததென்றால் நாங்கள் வலிய அடிமைப்பட்டதில் ஆச்சரியமேதேனுமுண்டோ? அறிவையும் அனுபவத்தையும் அடிப்படையாகக் கொண்டெழும் ஒவ்வொரு வார்த்தையிலும் அழுத்தமுந் திருத்தமும் ஒலிக்கும்; ஒளி மறைவில்லாது புற்றீசல் போலப் புறப்படும் ஒவ்வொரு பழமொழியிலும் உறுதியும் அஞ்சாமையும் தொனிக்கும்; புன்னகை தவழும்அதரங்களுக்கிடையே பிறந்துவரும் ஒவ்வொரு சொல்லிலும் அன்பும் தயையும் நெருங்கி உறவாடும். ஆகவே, கண்டவுடனே நமது உள்ளத்தைச் சுற்றி விழும் பற்றுக்கயிறு அவர் வார்த்தைகளைக் கேட்கக் கேட்க இறுகிக்கொண்டே வருவதில் வியப்புண்டோ? எத்தனையோ கோடி வார்த்-



பண்டிட் D.கோபாலாசார்லுவின்
ஜீவாம்ருதம்
தேகபுஷ்டியும், வீரியவிருத்தியும்
அளிக்கும் சிறந்த ஔஷதம்
ஆயுர்வேதாஸ்ரமம்,
மதராஸ்.

பண்டிட்
டி. கோபாலாசார்லு அவர்களின்
பால பாஸ்கர
அற்புத ஈரல்
குலைக்கட்டி நிவாரணி
குழந்தைகளின் வயிற்று
சம்பந்தமான மேல் சொன்ன
வியாதிகளுக்கு விரைவில் பூர்ண
குணத்தையளிக்கும்.
விவரங்களுக்கெழுதவும்:—
ஆயுர்வேதாஸ்ரமம்
தபால் பெட்டி 287
மதராஸ்

தைகள் ஒரு செவியில் புகுந்து மற்றொன்றின் வழியாக வெளியேறிவிட்டன. ஆனால், 'என்ன அம்மா?' என்னும் அந்த இரு சிறு வார்த்தைகள் இதயத்தைப் பிளந்து பார்த்தாலும் அங்கே ஆழப் பதிந்து தோன்றும் என எண்ணுகிறேன். ஏதாவது சந்தேகங்கேட்கும் மாணவன் தோள்மீது கைபோட்டுக் கொண்டு குழந்தைபோல் கொஞ்சிக்கேட்கும் அந்தக்காட்சி இன்னமும் நினைத்தபோது கண் முன் தோன்றுகிறது. உண்மையிலேயே தெளிந்த மனத்தினின்றும் வரும் அந்த வார்த்தைகளின் ஓசை ஓயாது செவிகளில் ஒலித்துக்கொண்டிருக்கிறது.

மேலே சொன்ன வெண்பாவை நான் எழுதியபோது எங்கள் ஆசிரியரை அப்படியே படம் பிடித்துவிட்டதாக எண்ணிப் பெருமிதங்கொண்டேன். ஆனால் சற்று ஆற அமர யோசித்த பிறகு, அவருடைய மீசையில் ஒரு பாகங்கூட அப்படத்தில் விழவில்லை யென்று புலனாயிற்று. எங்கள் ஆசிரியரை ஒருதமிழ்ப் பண்டிதர் அல்லது தமிழ்ப்புலவர் என்று மட்டும் சொல்லமாட்டேன். தமிழன்னையின் மணிவயிறுவாய்த்த மாபெரும்புதல்வர் என்னும் பொருளிலே—தமிழில் அறிஞர் என்னும் பொருளில் மட்டுமல்ல—தமிழறிஞர் என்றே சொல்வேன். வகுப்பிலே நாங்கள் அவரது 'தமிழ்க்கட'லினின்றுமட்டும்பருகவில்லை. தமிழ்க்கலைக்குப் புறம்பேயுள்ள அரிய விஷயங்கள் பலவற்றை ஆழ்ந்து ஆராய்ந்து சிந்தித்துத் தெளிந்த அனுபவ ஞானமெனும் அலையிலா நன்னீர்க்கடல் அண்டுவார் எவரும் முகந்து செல்லும்படி பரந்து கிடக்கக் கண்டோம்; அந்தச் சொற்பகாலத்திலே அவரவர் தாகத்துக்கும் சக்திக்குமேற்றவாறு வாரியுண்டோம். உண்மையில், புத்தகத்திலுள்ள பாடங்களைத் தற்காலக் கட்டுப்பாடுகளுக்குட்பட்டுக் கற்பிப்பதில் அவருக்கு அவ்வளவு உற்சாகம் இருந்ததாகவும் எனக்குத் தோன்றவில்லை. சிலசமயங்களில் பாடங்களிலும் மெய்ம்மறந்து ஆழ்ந்து கிடப்போம் என்பது உண்மைதான். அவரருளினால் நாங்கள் நாயனாரது நயங்களை நுகர்ந்தோம்; கம்பனின் காவியக்கடல் திளைத்தோம்; வில்லியின் விருத்தத்தை விண்டு பார்த்து உண்டோம். ஆனால் இவற்றோடு எங்கள் திருஷ்டி நின்றுவிடவில்லை. சில சமயங்களில் திடீரென்று நீலகிரிமலைமீது தாவிக் குதிப்போம். அங்கே குறிஞ்சிச் செடிகள் ஒரே நீலநிறமாகப் புஷ்பித்துக்கிடக்கும்காட்சியைக்கண்டு பரவசமடைவோம். மலைநாட்டுக்குக் குறிஞ்சி யெனப் பெயரிட்ட எங்கள் மூதாதைகளின் அறிவைக்கண்டு ஆனந்திப்போம். அடுத்தாற்போல் தோதவர்கள் வாழும் மந்துகளுக்குச் செல்வோம். அவர்களது விசித்திரமான வாழ்க்கை முறையையும் வழக்க ஒழுக்கங்களையும் கண்டு வியப்புறுவோம். 'ஒத்தைக்கல் மந்த்' என்பதை 'உதக மண்டல' மாக்கி ஏதோ பெரிய நுட்பத்தைக்கண்டுபிடித்துத் தமிழ்த்தாய்க்கும் அரிய சேவை செய்துவிட்டதாக எண்ணி மயங்கிக் கிடப்பவர்களது அறியாமையைக்கண்டு நகைப்போம். அங்கிருந்து மருதத்தில் பாய்ந்து மருத மரத்தைத் தடவிப்பார்ப்போம். சில சமயங்களில் பண்டைய பெரியார்களைத் தரிசிக்கப்புறப்பட்டுவிடுவோம். உதாரணமாக சேக்கிழாரைப்பற்றிப் பாடத்தில் வந்தால் அவருடைய விக்கிரகம் எங்கள் வகுப்பிலிருந்து எத்தனை மைல் தூரத்தில், எந்த ஜில்லாவிலே, எந்த ஊரிலே, எந்தத்திசையிலுள்ள எந்த ஆலயத்தின் எந்த மூலையில் என்ன கோலத்திலிருக்கிறது என்பதுவரை ஆராயாது விடமாட்டோம். இன்னும் சில சமயங்களில் மாதவி என்பது செடியா, கொடியா, மரமா என்ற பிரச்னைக்கு முடிவு கண்டு கொண்டிருப்போம். வேறு சிலசமயங்களில் நமது நாட்டின் சீர்கேடான நிலையைக்கண்டு கண்ணீர்வடிப்போம். சில சமயங்களிலோ, எம். ஏ. படித்தவன் கட்டைத்தொட்டி வைப்பதில் இழிவு என்ன வந்துவிட்டது என்று யோசித்து உழைப்பின் உயர்வை யெண்ணிப் பெரிய தீர்மானங்கள் செய்துகொள்வோம். இம்மட்டோ? சிலசமயங்களில் மேல்நாடுகளுக்கும் பறந்துவிடுவோம்; அங்குள்ள மக்களிடம் திகழும் அரிய குணங்களைக்கண்டு அவற்றைக் கைப்பற்றிக் கொண்டுவரப் படைதிரட்டுவோம். சுருங்கச் சொன்னால், அடிக்கடி எங்கள் வகுப்பையும் புத்தகங்களையும் மறந்து, கல்வி முடிந்து கலாசாலையை விட்டவுடனே எங்கள் நாட்டையும் நாட்டாரையும் உயர்த்தும் பெரும்பணியில் முனைதற்கேற்றபடி எங்களைத் தயாரித்துக் கொள்ளும் வேலையில் மும்முரமாக ஈடுபட்டிருப்போம். ஆகவே, திடீரென்று மணியடிக்க அந்த நிலைமாறி மீண்டும் கல்லூரிக்கும் வகுப்புக்கும் வந்தால் நாங்கள் கண்ட காட்சிகளையும், ஆராய்ந்த இடங்களையும் மனத்திலே கட்டிய

கோட்டைகளையும்விட்டு தலைவியினிடமிருந்து விடைபெறுந்தலைவனைப்போலவே புத்தக மூட்டையைத் தூக்கிக்கொண்டு வேறுவகுப்புக்குப் புறப்படுவோம்.

ஸர் தாமஸ் லிப்டன் என்னும் பெரியாரது வாழ்க்கையைப்பற்றி யெழுதும் ஆசிரியர், தாம் மிகவும் தாழ்ந்த நிலையிலிருந்து உயர்ந்த நிலைக்கு வந்தவர் என்பதைப்பற்றி அணுவளவும் வெட்கப்படாமல் கூறிக்கொள்வதுதான் அவரிடத்திலுள்ள மிகவும் அருமையான குணம் என்று பாராட்டி யெழுதுகிறார். இந்த விஷயத்தில் எங்கள் ஆசிரியர் லிப்டனுக்கு எள்ளளவும் குறைந்தவரல்லரென்று திடமாகக்கூறுவேன். "தினமும் ராயபுரத்திலிந்து ராயப்பேட்டைக்கு வந்து பாடங்கேட்டுக்கொண்டு இரவு 11, 12-மணிக்கு அடிபட்ட மாதாகோயில் (இது அக்காலத்தில் பகலில் கூட சாதாரணமாக ஜனங்கள் அண்டுவதற்கு அஞ்சும் இடமாயிருந்ததாகக் கூறுகிறார்கள்.) வழியாகத்திரும்பிச்செல்வேன். அப்பொழுது வண்டி வசதியுங் கிடையாது; வண்டியிருந்தாலும் அதற்குச் செலவிட என்னிடங்காசுங் கிடையாது. ஆகவே நடந்தே செல்வேன். அப்படிச் செல்லும்போது ஒவ்வோரு நாளும் ஒவ்வொரு வீதிவழியாகச் செல்வேன். இப்பொழுது பட்டணத்திலுள்ள வீதிகளையெல்லாம் எனக்கு நன்றாகத்தெரியும்" என்று பல வருஷங்களுக்குமுன் அவர் வகுப்பில் சொன்ன வார்த்தைகள் இன்னும் அப்படியே என் கவனத்திலிருக்கின்றன. இதிலிருந்து ஆதியில் அவரைத்திருமகள் சிறிது மறந்திருந்தாள் என அறிகிறோம். ஆனால், இவ்வார்த்தைகளிலிருந்தே அவருக்குத் தமிழ்ப்பயிற்சியிலிருந்த ஆர்வத்தையும், உலகானுபவம் பெறுவதிலிருந்த தாகத்தையும், அவருடைய அஞ்சா நெஞ்சத்தையும், எதையும் ஒளிக்காது பேச்சுந்தன்மையையும் அநுமானித்துக் கொள்வது எவருக்கும் கஷ்டமாயிராதென்றே எண்ணுகிறேன்.

இயற்கையன்னை சிலசமயங்களில் மெய்ம்மறந்து மிகவும் சிறந்த விதைகளைக் கடுமையான பாறைகளின்மேல் விதைத்து விடுகிறாள். ஆனால் அவ்விதைகள் தம்மிடமுள்ள சக்தியினால் ஏதாவது மயிரிழை வெடிப்பிருந்தால் அதில் வேரூன்றிக்கொண்டு பாறையைச் சுக்கல் சுக்கலாகச் சிதறவடித்துவிட்டு, உயர்ந்தோங்கித் தழைத்து நின்று, கனியும் நிழலுமுதவி உலகத்தின் பாராட்டுதலைப் பெறுகின்றன. அத்தகைய மரங்களே ஏனைய தருக்களெல்லாம் பார்த்துப் பிரமித்துப் பின்பற்றத் தக்கவையென்று சொல்லவேண்டுமோ? அவற்றிலுள்ள ஒவ்வொரு இலையும் வாய்திறந்தால் ஒரு போதக்கடல் பொழியுமென்பதில் ஐயமுண்டோ? அவை உலகத்திலே உன்னதபதவியெய்தித் திகழ்ந்தால் அவற்றைக்கண்டு ஏனையவை பொறாமையோ ஆச்சரியமோ கொள்ள இடமுண்டோ? 'அதிர்ஷ்ட தேவதையின் திருவடிஉதைத்து முன்னுக்குத் தள்ளிவிட்டது; அவ்வளவுதான்' என்றுவாய்திறக்கமுடியுமோ? அப்படிப்பட்ட பிரமாண்டமான விருக்ஷத்தின் கீழமர்ந்து காயுங்கனியுமுண்டு நிழலுந்தென்றலும் அனுபவிப்பது பூர்வஜென்மப் புண்ணியமேயன்றோ?

அத்தகைய கற்பகத்தருவொன்றைச் சார்ந்து, சிந்நாளேனும் கனியமுதமுண்டோம்; தண்ணிழல் குளித்தோம்; அதன் பரந்த இலைகள் சேர்ந்திசைத்த மறையொலி கேட்டோம். அது எங்கள் பாக்கியம்—பிறர் கேட்டுப் பொறாமை கொள்ளத்தக்க அனுபவம். அறுபது ஆண்டுகளாயின. அந்த நெடுந்தரு அடிபருத்து, கிளைபரவி, இலைசெழித்து நிற்கின்றது. "எங்களுக்குப் போதமும் பொருளும் புகட்டிய தரு இதோ!" என்று சுட்டிக்காட்டி இன்று இறுமாந்திடுகின்றோம். இந்த பாக்கியத்தை இன்னும் பன்னெடுநாள் எங்கட்கு ஆண்டவன் அருளானோ!

---

"பள்ளிக்கூடங்கட்குரிய வாசகபுத்தகங்கள் எழுதுவதில் தலைசிறந்தவர் பண்டித C. R. நமச்சிவாய முதலியாரென்பவர். இவர் பல தோகுப்பான வாசக புத்தகங்கள் எழுதியுள்ளார். சில பெருநூல்களும் இவரால் அச்சிடப்பட்டுள்ளன. இவர் தமிழ்ப்புலவர் பலர்க்குத் தக்க உதவி செய்துள்ளார்"

இலக்கிய வரலாறு

திரு. கா. சுப்பிரமணியபிள்ளை, M.A. M.L.,
அட்வகேட், திருநெல்வேலி.

# தோழர்
# நமச்சிவாயர்



தோழர் சி. தெ. நாயகம்.

[**இ**தனை எழுதுபவர் நெடுநாட்களாய்ச் சமூக சீர்திருத்தத் துறையில் உழைத்துவருபவர், ரிடயர்ட் டெபுடி ரெஜிஸ்ட்ரார் ஆப் கோவாபரேடிவ் சொசைட்டீஸ் (**Retired Deputy Registrar of Co-operative Societies**) அரசியலைப் பொறுத்தமட்டில் ஜஸ்டிஸ்கட்சியைச்சார்ந்தவர்; சமுதாயப் போக்கில் பச்சைச் 'சு. ம.' கட்சி. இவர் எழுதியவாங்கே எழுத்துகளையும் சேர்க்கப் பெற்றிருப்பது காண்க. —ஆசிரியர்.]

நான் பள்ளிப்பிள்ளையாக இருந்தபொழுது பள்ளிக்கூட சோதனைக்காக வந்தவர்கள் பிள்ளைகளின் படிப்புத்திறமையைச்சோதித்த பொழுது அச்சுச் சுவடியைப் படிக்கச் சொல்வதோடு கையெழுத்துத்தாளையும் படிக்கச் சொல்வதுண்டு. கையெழுத்தைப் பழக்குவதற்குப் பள்ளிக்கூடத்தில் நிலைப்பான ஏற்பாடும் உதவியும் கிடையாது. பிள்ளைகள் தாங்களே எங்கேனும் கிடைத்த கையெழுத்துத் தாள்களைப் படித்துப் பழகிக்கொள்ளவேண்டியிருந்தது. இக்குறையைநீக்க எவரும் முன்வரவில்லை. தான்வெளியிட்டமுதல்சுவடியிலேயே இக்குறையை நீக்கியவர் தோழர் கா. ரா. நமச்சிவாயர். என் பள்ளிப்படிப்பு முடிந்தபின் என் ஊரில்ஒருபெண்பள்ளிக்கூடம் துவக்கிஅதற்கு எந்தச்சுவடியை வைக்கலாம் என்று ஆராய்ச்சி செய்தபொழுது தோழர் அப்பொழுதுதான் வெளியிட்ட பள்ளிக்கூடச் சுவடியைப் பற்றி கேள்விப்பட்டேன். அந்தச்சுவடியைப் படித்த பொழுது கையெழுத்துத் தாட்கள் அதில் அச்சிடப்பட்டிருந்ததை முதல் முதல் பார்த்தேன். என் நாட்டம் அச்சுவடிகளிடம் சென்றதற்கு அதுவே முதற்காரணம். அப்பொழுதுதான் நான் முதல் முதல் தோழரையும் அவர் சுவடியையும் பற்றித் தெரிய வாய்த்தது. பின்னர் அதே பள்ளிக்கூடத்தின் ஆண்டு விழாவிற்குச் சில பள்ளிப் பெண்களுக்கு ஆங்கிலப்பா சொல்லி வைக்கவேண்டி வந்த பொழுது தோழர் வெளியிட்ட தேசிங்கு கதை என்ற ஆங்கிலப்பாவைப் படிக்க நேரிட்டது. அதிலிருந்து தோழரின் பிறப்பூருக்குப் பக்கத்திலுள்ள ராணிப்பேட்டைக்குப் பெயர் வந்த காரணமும் தெரிய நேர்ந்தது. அதன் பின்னர் தோழர் தமிழில் வெளியிட்ட இயற்கை நூல்களையும் படிக்க வாய்த்தது. இன்னும் பின்னர் குமாரசாமி நாயுடு அச்சுக்கூடத்திலிருந்து தோழரின் நூல்கள் பல ஆண்டு தோறும் வெளிவந்துகொண்டேயிருந்தன. அக்காலத்திலுள்ள பல தமிழ்ப் புலவர்களைப் போல் குறுகிய பழைய வழிகளிலேயே முயற்சியைச் செலுத்தாது புதுவழிகளில் செலுத்தியதும் ஆங்கில அறிவை வளர்த்து வந்ததும் பழைய தமிழ்நூல் படித்தலே புலமை என எண்ணியிருந்த காலத்தில் அறிவியல் நூல்களை வெளியிடுவதில் ஊக்கங்காட்டியதும் தோழரின் பரந்த அறிவுக்கு அறிகுறியாகும்.

நூல்கள் வெளியிடும் முயற்சியைத் தோழர் துவக்கியபொழுது வேப்பேரி உயர்தரப் பள்ளியில் தமிழ்ப் புலமை நடத்திவந்தார். செல்வாக்குள்ள இடங்களில் எல்லாம் ஒரு சமுகத்தாரே புகுந்து அரசியலில் அவர்கள் இசைந்தாலன்றி ஓரணுவும் அசையாது என்றிருந்த காலத்தில் தூய உடலராகிய தோழர் அரசக் கல்லூரில் வேலையில் அமர முடிந்தது, தோழர் புலமைத் திறமையுடன் ஆட்சித் திறமையும் உடையர் என்பதை எடுத்துக்காட்டும். குமாரசாமி நாயுடு அச்சுக்கூடத்தாரிடமிருந்து பிரிந்தபின் தானே அச்சுக்கூடம் அமைத்து நூல்களை செவ்வனே வெளியிட்டுவருவது தோழரின் ஆட்சித்திறமைக்கு இன்னும் ஒரு சான்றாகும்.

தமிழ்ப்புலவர்கள் பலர் புலமையில் செழிப்புடையோரேனும் செல்வத்தில் வறியோராகவே காலங் கழித்திருந்திருக்கின்றனர். தோழரோ புலமையில் எவ்வளவு முற்போக்குடையராக இருக்கின்றாரோ அதற்குக் குறையாத அளவு செல்வத்திலும் முன்னேறி இருப்பது தமிழ் நாட்டில் வேறு இடத்தில் கண்டிராத நிலமை என்றே சொல்லலாம். வேறு இரண்டொருவர் புலமையிலும் பெயர் பெற்று செல்வத்திலும் தாழாது இருப்பினும் அவர்கள் செல்வர்களிடம் கையேந்திப் பணம் பெருக்கி உயர்ந்தவர்களானவர்களாவர். தோழரோ நன் கொடையை எண்ணிச் செல்வர்கள் வாயில் மிதியாது தன் அறிவு முயற்சியாலேயே பொருள் திரட்டியவ ராவர். இதில் இவர்க்கு ஒப்பார் தமிழ் நாட்டில் பிறர் ஒருவர் இருப்பதாகச் சொல்ல முடியாது.

படிப்பதும் பணம் ஈட்டுவதுமே வாழ்வின் நோக்கமெனக் கொண்ட பிறசிலரைப்போலல்லர் தோழர். பிறரைக்கல்வியில் ஊக்குவிப்பதில் பொருளும் முயற்சியும் செலவிடுவதிலும் தோழர் முன்போந்தவராவர். சென்னை நீதி மன்ற வழக்காளர் காலஞ்சென்ற தோட்டப் பாளையம் எதிராஜ முதலியாருடன் "நடுக் கல்விச்சங்கம்" நிறுவி ஏழைப்பிள்ளைகளுக்கு பணஉதவிசெய்யும் தொண்டு பலஆண்டு நடத்திப் பின்னர் ஆட்சிப் பொறுப்பு ஏறக்குறைய முழுவதையுமே ஏற்றுநடத்தியவர் நம்தோழர்.

தமிழன்பர் மாநாடு கூட்டித் தமிழைத் தாழ்த்தித் தம்மினத்தார் ஆக்கத்தைப்பெருக்க இருந்த நெருக்கடியில் பல்லாண்டுகளுக்கு முன் தமிழ்ப்பற்றுடன் துவக்கி நடத்தப்பட்டுவந்து ஓய்ந்திருந்த தமிழ்ச் சங்கத்தைப் புதுப்பித்துப் பொங்கல் நாளைத் தமிழ்த் திருநாளாகக் கொண்டாட முன்னின்று வழிகாட்டியவரும் தோழரே.

தமிழின் பெருமை உலகுக்கெல்லாம் தெரியும்படி நூல் செய்த வள்ளுவரின் உருவத்தை சமயச்சார்பு சாதிச்சார்பு இன்றி திரண்ட நுண்ணறிவுத் தோற்றத்துடன் செய்விக்கும் தொண்டை யேற்றுக்கொண்டிருப்பவரும் நம் தோழராவர்.

தோழர் புலமையில் மாத்திரம் சிறந்தவரல்லர். பணத்தில் மாத்திரம் உயர்ந்தவரல்லர். ஈகையிலும் தொண்டிலும் மாத்திரம் உரம் பெற்றவரல்லர். மொழிப்பற்று நாட்டுப்பற்றுகளில் மாத்திரம் ஆர்வங்கொண்டவரல்லர். இவைகளெல்லாம் ஒருங்கே அமையப்பெற்ற தென்னாட்டுச்சிறந்தபெரியாராம்ஒருவர் அவர்.

—— ——

## 'தமிழர்களே வம்மின்'

தென் றமிழ்ப் பெரியீர்! தென் றமிழ்ப் பெரியீர்!
நன்றிமிக் குடைய தென் றமிழ்ப் பெரியீர்!
ஈண்டுநந் தமிழர் வேண்டிய புரிவோன்
செந்தமிழ்த் தாயின் திருவடிப் பணியோன்
சிறுவர்நெஞ் சலரத் தெளிவுடைப் பனுவலும்
அறிவர்மிக் குழைக்க அருந்தமிழ்ப் பெருமையும்
நன்கெடுத் துரைக்கும் நாவலன் தமிழ்கா
நமச்சிவாயனும் நற்பெய ராளன்
அறுபதாம் நிறைவினை யடைந்தவன் பல்யாண்
டிறைதிரு வருளா லினிது வாழியவென்
றேத்துகம் வம்மோ ஏத்துகம் வம்மோ!
நாத்தழும் பேற ஏத்துகம் வம்மோ!

—க. வெள்ளைவாரணன்.

# நீலத் திரைக் கட லோரத்திலே—

நமச்சிவாயர்

பண்டைப்புலவர் பரிசில் வாழ்க்கையர் காணாது ஈந்தால் கொள்ளார். முகமாறித் தரும் பரிசிலைப்பெறார். தகுதி யறிந்து நல்கின் தினையளவேனும் பனையளவேனும் உவந்து கொள்வார். அவர் எத்திசைச்செலினும் அத்திசைச் சோறும்! என்னே அவர்தம் பெருமிதம்!

அப் புலவர் மரபினரே நமச்சிவாயர். எனினும் பரிசிலை நச்சிச் சுரம்பல கடந்திலர். கானதர் மயங்கிலர். மலையேறி வருந்திலர். முயற்சியால் ஈட்டுவர். தாமும் துய்ப்பர். பிறர்க்கு மீவர். நூல்வல்லோர் இயல்பும் இதுவே.

வடக்கே வேங்கடம். தெற்கே குமரி. இடையில் தமிழ் நாடு. நாட்டில் நமச்சிவாயரை அறியாதார் எவர்! அவர் கலை நிறைந்தவர்; தண்ணளி மிக்கவர். எழுத்தில்—பேச்சில்—உலகியலறிவில் இணையற்றவர். சுளித்து நோக்கார்; சிரித்து நோக்குவர். பழமையும் போற்றுவர்; புதுமையும் போற்றுவர். தமிழ்ச்சுவை யறியாதார் அவருடன் பேசியதன் சுவையினை அறிதல் வேண்டும். தமிழ், தமிழ்ப்புலவர், தமிழர் இவர் தமக்கு அவர் செய்த தொண்டுகள் அளப்பில.

அவர்கடலகத்து மிருப்பர். மலைமீதும் உறைவார். எங்கே உறைந்தாலும் அங்கே சொற்போர். உவப்பத்தலைக்கூடுவர். உள்ளப்பிரிவர்.

வேதநூற்பிராயம் நூறு. நூறில் அறுபதி யாண்டு தலையாய வாணாள். அதனை யினிது கடந்தனர். இறைவனே! நரை திரை முதலியன அவர் தமையணுகாது நனி காத்தி.

---

எழுதுபவர் லாயலா காலேஜ் போராசிரியர்—சென்னைச் சர்வ கலாசாலைத் தமிழர் குழுவில் ஓர் அங்கத்தினருமாவர்.

---



திரு இ. கே. நடேச சர்மா. அவர்கள்

## நமச்சிவாய நறுமலர்

வண்டே யாதென்று கேட்டாய்? பாவம்! அறியாய்போலும். ஈதென்ன வம்பு! நமச்சிவாய நறுமலரை ஆடவர் அறிவர்; மகளிர் அறிவர்; சிறுவர் அறிவர்; சிறுமியரும் அறிவர். நீயே அறிகிலை. கூறுவேன் கேள். அது கடலகத்து மலர்ந்தது. தமிழகமுடையது. கணக்கெலாம் அறிந்தது. கோடாது குவியாது வாடாது என்று ஒரே தன்மையது. அம்மலர்க்குத் தெய்வத்தன்மை உண்டோ இல்லையோ யான் அறிகிலேன். ஆனால் ஒன்று அறிவேன். அஃது அறுப திற்றி யாண்டு முற்றியது. முயற்சியால் ஈட்டும். மலர்ந்து வழங்கும். தானுந்துய்க்கும். துய்த்துத்தணிகைப்பிரானடி மலரில்மெய்மமறந்து கிடக்கும். பல்லைக்காட்டி இரவாது. ஞானக்குமரியின் கடைக்கண் நோக்கம் புஷ்கலமாக வுடையது. திருமகள் முதற்கண் அங்குச் சென்று புலந்தாள். அவள் ஜபம் பலிக்கவில்லை. இன்னொன்று. அம்மலர் "பல்லான்றகேள்வி" என்று தொடங்கும் நாலடிச்செய்யுளை முழுப்பொய்யென்று காட்டும். அதில் பழமையும் உண்டு. புதுமையும் உண்டு. காலக்கேற்ப ஞாலத்தியலும். அதுவே நமச்சிவாய நறுமலர். அதனைப்பற்றி யான்றி யளவையிற் கூறினேன். அதற்குமேல் எதனையும் சொல்லேன். அளியே! கடலகஞ்சேர் நறுமலர்காண். மூரலு. தீந்தேன் பருகு. வாழிய விரிகடன் மணலினும் பலகாலம்! வாழிய விரிகடன் மணலினும் பலகாலம்!! என இறைவனை ஏத்தி விளரி பாடு.

சினிமா நடிகர் இதனை எழுதுகிறார் என நேயர்கள் நினைப்பரா யின் அது தவறு. சினிமா நடிகர்கள், சினிமா படம் பிடிப்பவர் கள், சினிமாப் பட முதலாளிகள் முதலானோரைக் குடைந்து குடைந்து கட்டுரைகள் தாங்கிவரும் 'சினிமா உலகம்' பத்திரி கையின் ஆசிரியராவர். இவரும் ஒரு தமிழ்ப் பண்டிதர்— ஆசிரியர்.]

# நமச்சிவாயர்-ஒரு நாடகாசிரியர்



பண்டிதர் பி: எஸ். செட்டியார்

திருவாளர் கா. நமச்சிவாய முதலியார் அவர் களை அறியாதார் தமிழ்நாட்டில் இரார். மேல் நாட்டில் இருப்பதுபோல் தமிழ் நாட்டிலும் இலக்கிய சேவையால் முன்னுக்குவந்தவர் எவ ரேனும் உளரோ என்றால், அவர் நமது நமச்சி வாயரே என்று தாராளமாய்க் கூறலாம். தமிழ்த் தாயின் பாத மலர்களில் அவர் அர்ப் பணஞ் செய்துள்ள நூற்றுக் கணக்கான நூல் களைச் சிறுவர் முதல் பெரியோர் வரை அனை வரும் அறிவர். ஆனால், அவர் நாடகங்களும் எழுதியுள்ளார் என்பது பொதுஜனங்களுக்கு அவ்வளவாகத் தெரியாதென்று நினைக்கிறேன்.

நமது நமச்சிவாயர் ஏககாலத்தில் ஒரு தமிழ்ப் புலவராகவும், நூலாசிரியராகவும், பதிப்பாசிரியராகவும், பத்திரிகாசிரியராகவும் இருப்பதோடு, ஓர் ஒப்பற்ற நாடகாசிரியராக வும் காட்சியளிக்கிறார்.

மக்களை மேனோன்னத நிலையில் சேர்ப்ப தற்கு நாடகமும் நல்லதொரு சாதனமாகும்: இந்த வகையிலும் நமது நமச்சிவாயர் பங் கெடுத்துக் கொண்டது மிகவும் பாராட்டத் தக்கது

'கீசகன்' 'பிருதிவி ராஜன்' என்னும் இரண்டு நாடகங்களை நமச்சிவாயர் தமிழ் நாட்டிற்குத் தந் திருக்கிறார். கீசகன்—இப்பாரதக் கதையை நாம் படித்திருக்கிறோம். இதை நடிப்பதற்குத் தகுதி யானதோர் நல்ல நாடகமாகத் திரு. முதலியார் கொடுத்துள்ளமைக்காக நாம் அவருக்கு நன்றி செலுத்தவேண்டும். 'பிருதிவிராஜன்' என்னும் நாடகம் தமிழ் நாட்டிற்குப் புதிது. இந்நாடகமும் அவரால் அதி அற்புதமாக எழுதப்பட்டுள்ளது.

இன்று, தான்தோன்றித் தம்பிரான்களாய்ப் பலர் எழுத்துப் பிழையும், சொற்பிழையும், பொருட் பிழையும் மலிந்த நாடகங்கள் எழுதி ஆசிரியர்கள் என்று முன் வரும்போது, இத்தகைய பண்டிதர்கள் இம்முறையில் செய்யும் பணி போற்றற்குரியதாகும். அன்றியும் பண்டிதர் என்பதற்காகத் திரேதாயுகத் துக் கடுந்தமிழில் கலியுக மக்களுக்கு எழுதி, வாச கர்களை அகராதித் துணைவர்களாய்ச் செய்யாமல் தமது வழக்கமான இனிய, எளிய, இலேசான தமிழில் இவ்விரண்டு நாடகங்களையுய் திரு. முதலி யார் எழுதியுள்ளதை எவரும் போற்றாதிருக்க முடி யாது.

மற்றும், இவ்விரு நாடகங்களின் அமைப்பும், போக்கும் மிக நன்றாகப் பகுக்கப் பட்டுள்ளன. காட்சிக்குப் பின் காட்சியாகக் கோவையாய்த் தங்கு தடங்கல் யாதுமின்றிக் கதை படிப் படியாய் வளர் கிறது. அங்கங்கள் ஒன்றோ டொன்று பின்னிக் கொண்டு ஜீவ களையோடு நடைபெறுகின்றன. ஒவ்வொரு காட்சியும், அங்கமும் அதனதன் அளவில் ஒழுங்கு தவறாது, தமது தனிப்பட்ட சிறப்பியல் களும் குறையாது விளங்குவது வியக்கத்தக்கது.

பாத்திரங்களின் குணாதிசய வளர்ச்சியும் இந் நாடகங்களில் நன்கு அமைக்கப்பட்டுள்ளது. ஆசிரி யர் நமச்சிவாயர் இந்நாடகங்களின் ஒவ்வொரு பாத் திரங்களையும் மிக அருமையாகப் படைத்திருக்கிறார்.

ஆணுயினும் பெண்ணுயினும் எந்த நாடக பாத்திரத்தையும் அவர் கெடுக்கவில்லை. சில தீய பாத்திரங்களை உள்ளவாறு சொல்வதானுலும், அதற்காகத் தாழ்த்திவிடாது ஏற்ற சமயங்களில் ஆதரவு கொடுத்திருத்திருக்கிருர்.

கீசகன் ஒரு கொடியோன், அவனிடம் நற்குணத்தின் பசைகூட இராதென்று தான் நாம் நினைப்போம். ஆனல் நமச்சிவாயருடைய கீசகன் அவ்வாறில்லை; அவனிடம் நற்குணங்களின் சாயல் விளங்குகிறது; தன்னுடைய செயலுக்காகத் தானே வருந்துகிறன். எனினும் காமாந்தகாரம் அவனது கண்களைக் குருடாக்கிவிடுகிறது. அந்த ஆவேசத்தில் தன்னையும் மறந்து, ஆடிக் காற்றில் இலவம் பஞ்சு போல் அதன் வசமாகிறன்- இவ்வாறு கொடியவனை கீசகனை அவனது கொடுமை காமத்தாலேயே ஏற்பட்டது என்று எடுத்துக்காட்டி, மன்னிப்பது மிக அருமையாக இருக்கிறது. இதுதான் கொடியோனை வர்ணிக்க வேண்டியவிதம், இதுதான் சிறந்த முறை; ஷேக்ஸ்பியர், ஸ்காட் போன்ற மேனுட்டு அறிஞரும் கையாண்ட நெறி.

அன்றியும், 'கீசக'னில் காமத்தின் கொடுமையையும், கற்பின் மாட்சியையும், நீதியின் உயர்வையும் நமச்சிவாயர் சித்திரம்போல் தீட்டியிருக்கிறர்.

கீசகன் விரதசாரணி என்னும் பெயரோடுள்ள திரௌபதியைக் கண்டு அவள்மீது காமுறுகிறன்; அவளிடம் தன் நிலையைக்கூறிக் கெஞ்சுகிறன். அதற்கு விரதசாரணி பொறுமையோடு நியாயம் சொல்கிறள். அவன் மண்டையில் ஏறவில்லை. இந்த இடத்தில் 'என் கலக்கத்தைக் கண்டால் கருங்கல்லும் உருகுமே' என்று கீசகன் சொல்ல, அதற்கு விரதசாரணி 'கற்புடையார் மனத்திற்குழன் கருங்கல் என்ன செய்யும்?' என்று பதிலளிக்கிறள். இந்த வசனங்கள் எவ்வளவு உயர்தரமாக இருக்கின்றன பாருங்கள். பிறகு, கீசகன் எனக்கு மணமாவது கோடு, மரணமாவது கோடு என்கிறன். இங்கு கீசகனுக்கு விரைவில் வரப்போவதை அவன் வாயிலேயே வருமாறு செய்திருப்பது காவியத்தின் உச்சமாகும்.

பிருதிவிராஜன் இது ஒரு (Tragedy) துக்க சம்பவ நாடகம். இதிலே எவ்வாறு குடும்பச்சண்டையால் நமது தேசம் பாழடைந்தது என்பது தெளிவாக்கப்பட்டிருக்கிறது. இக்கதை சிறிதளவு இந்தியச் சரித்திரம் வாசித்தவர்களுக்கும் நன்கு விளங்கும். இந்நாடகத்தில் பிருதிவி, சம்யுக்தை இருவரது தெய்வத் திருக்காதலும், ஒப்பற்ற வீரமும், ஜயசந்தனது அசைக்க முடியாத தன்னலமும், அகங்காரமும் விளக்கப்படுகின்றன; இரஜபுத்திர வீரம் பொங்கித் ததும்பி யோடுகிறது; பிருதிவி, சமர்சிங்கன், சம்யுக்தை, பிருதை முதலியோர் உச்ச ஸ்தானத்திலும், கோரி, ஜயசந்தன் ஆகியோர் நீச ஸ்தானத்திலும் இருந்து காவிய வானத்தில் நட்சத்திரங்களாகப் பிரகாசிக்கின்றனர். இந் நாடகம் சிறிது சிறிதாக வளர்ந்து சம்யுக்தை தன் காதலனைக் காப்பதற்காக அவன் மேல் விழும் வாளைத் தான் ஆணுருவில் தாங்கிச் சாவதும், அதுகண்ட வெற்றி வீரன் பிருதிவி தன்னைத்தானே உடைவாளால் குத்திக்கொண்டு இறத்தலுமான நாடக உச்சமாகிய அச் சோக சாகரத்தில் நம்மையும் மறந்து நாம் கண்ணீர் விடுமாறு செய்கிறது. 'பிருதிவி ராஜன்' காதல், வீரம், சோகமாகிய அரிய ரசங்களின் சாகரமாகும்.

இவ்வீர காவியத்தினிடையில் வரும் சந்தக்கவியும் அவர் பாடும் சில கவிதைகளும் பாவலர் விருந்தாக இருக்கின்றன. ஒரு சமயம் 'சூரியன் மனைவியாகிய தாமரை தன்னை நாடி வரும் சந்திரனைக் கண்டு இக்காரியம் தீது என்று தன் இதழ்க் கதவம் அடைத்துக் கொள்கிறள்; அதைக் கண்டு ஆம்பல் மகள் 'பக்' என்று சிரிக்கிறள்' எனச் சாதாரண இயற்கைத் தோற்றத்தைக் கற்பனைப் படுத்தும்,

'சூரியன் மனைவி யாகும்
தூய பத் மினியாம் மாது
பேரியல் நிலவு தன்னைப்
பெற்றிட வருதல் நோக்கிக்
காரியம் தீய தென்றே
கலையிதழ் மூடிக் கொண்டாள்
பாரியாம் குமுதம் கண்டு
பக்கெனச் சிரிக்கின் றளே'

என்னும் கவிதை மிக அழகாக இருக்கிறது.

வீரன் பிருதிவி, அழகு தேவதை ஸம்யுக்தையைப் பற்றிக் கேள்வியுறுகிறன்; அவளது திருவுருவப் படத்தைப் பார்க்கிறன்; பிறகு தனியே இருந்து அந் நங்கையர் நாயகத்தின் எழிலை எண்ணிப் புகழ்கிறன். இந்த இடத்தில் அவன் பாடுவதாக நமச்சிவாயர் இயற்றியுள்ள

பொன்னையே உருக்கி வார்த்துப்
புதுக்கிய பதுமை யீதோ
மின்னையே பிடித்து வந்து
விளங்கிடச் செய்த மாதோ
என்னையே மயக்க வந்த
இந்திர ஜாலப் பெண்ணே
உன்னைநான் அடைந்தால் வானேர்
உலகையும் விரும்பி டேனே'

என்னும் பாடல் இன்ப ஊற்ருக இருக்கிறது. இத்தகைய பல கவிதைத் துண்டுகளை நமச்சிவாயர் ஆங்காங்கே அள்ளித் தெளித்து நம்மை ஆனந்த வாரிதியில் ஆழ்த்துகிறர்.



தமிழாசிரியர் மயிலை சிவ.
முத்துக்குமாரசுவாமி முதலியார்.

# முயற்சியின் உயர்ச்சி

இதனை எழுதும் தமிழாசிரியர் — மயிலை சிவ. முத்துக் குமாரசுவாமி முதலியார் அவர்கள். காலஞ்சென்ற மணி. திரு நாவுக்கரசு முதலியார் அவர்களின் முழு அன்புக்கோர் கலனாய்த்திகழ்ந்தவர். அமயம் நேர்ந்துழி, ஆங்காங்கே பத்திரிகை யுலகிலும் இவரது கட்டுரைகளைப் பொதுமக்கள் காணக் கூடும். —ஆசிரியர்.

"இக்கடற்கரையின் அருகே ஓர் அழகிய மாளிகை அமைத்து அதில் வாழ்தல்—ஆ! எத்தகைய இன்பம்!" என ஓர் இளைஞர் சுமார் நாற்பது ஆண்டுகட்கு முன்னர் மயிலைக்கடற்கரையின் அணித்தே ஓர் சோலையின்கண் நின்று நீடு நினைந்து நினைந்து நெட்டுயிர்ப் புறுவாராயினர். தமிழ் கற்பதன் பொருட்டுச் சென்னைத் தண்டையார் பேட்டையினின்று திருமயிலைக்குக் கால்வழி கொள்ளக் கடுநடை கொள்ளும் நிலையினில் நின்ற அவ்விளைஞர்க்கு இவ்வெண்ணம் தோன்றுதல் வியப்பினும் வியப்பே!

"எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியார் திண்ணிய ராகப்பெறின்" என்றியம்பிய வள்ளுவர் வாய்மொழி பொய்க்குமோ? கூர்ந்த மதியினராய அவ்விளைஞர் துறைபோகக் கற்று, மெய்வருந்த உழைத்துப் பொன்னும் புகழும் பெற்றுத் தாம் எண்ணியவாறே கடற்கரைக்கு அணித்தே கவின்பெறு மாளிகை அமைத்து அகமகிழ் வெய்தினர். அவ்விளைஞர்தாம் யாவர்? அவரே நம் அருந் தமிழ்ப் பெரியாராய உயர் திருவாளர், கா. ரா. நமச்சிவாய முதலியார் என்னும் பெருந் தகையாளர்.

இப்பெரியார் இத்தகைய உயர் நிலையினை அடைந்தமைக்குக் காரணம் முற் பிறப்பிற் புரிந்த புண்ணியப் பேற்றின் பயனே என ஒருசிலர் கருதுதல் கூடும். இவர்தம் கூர்ந்த அறிவும், ஆழ்ந்த கல்வியும், தளரா முயற்சியுமே இவர்முன்னேற்ற முற்றமைக்கு முதற் காரணங்களாகும்.

இப்பெரியாரை ஏறக்குறைய இருபத்தைந்து ஆண்டுகட்கு முன்னர் நான் என் ஆசிரியர் மணி-திருநாவுக்கரசு முதலியார் அவர்களோடு முதன் முதல் சென்னையின்கண்ணுள்ள காவேரி இல்லத்திற் சென்று காணும் பேற்றினைப் பெறலாயினேன். அக்காலத்தே தமிழாசிரியர்கள் பெரும்பாலும் சைவ வைணவ சம்பிரதாயங்களுள் யாதேனும் ஒன்றினைப் பெரிதும் தழுவிச் சுத்த வைதிக நிலையிலே விளங்குவர். நம் முதலியார் அவர்களோ

---

கடைசியில் சில வார்த்தைகள். நமச்சிவாயரது இவ்விரண்டு நாடகங்களும் மகா உத்தமமானவை. உயர்தரத்தில் சேர்க்க வேண்டியவை. தமிழ் நாட்டில் உயரிய நாடகங்கள் சில உண்டாயிருக்குமானால், அவைகளில் இவ்விரண்டும் தலைமை வகிக்குமென்பதில் தடையில்லை. வள்ளியையும், அல்லியையும், சதாரத்தையும், சாவித்திரியையும், அரிச்சந்திரனையும், கோவலனையும் விட்டால் வேறு விதியில்லாத தமிழர்களுக்கு, இந்நாடகங்கள் ஆறுதலளிக்குமென்பது திண்ணம். இவை படிப்போர்க்கும், நடிப் பார்க்கும் நாடக மேடையில் பார்ப்போர்க்கும் உன்னதமான உயர்ந்த எண்ணங்களை உண்டாக்கி, மட்டற்ற மகிழ்ச்சியை யளிக்குமென்பதில் தடையில்லை. இந்நாடகங்களால் நமச்சிவாயர் தமிழ் நாடக உலகிற்குப் புத்துயிரளித்திருக்கிறார். நாடகக் கம்பெனிகளும், அமெச்சூர் சபாக்களும் இந்நாடகங்களை நடித்துப் புகழ்பெறுவார்களாக.

அவ்வாறன்றி மேல்நாட்டு நவீன முறையில் முற்றிலும் ஈடுபட்டிருந்தமை கண்டு நான் பெரிதும் வியப்புற்று, "ஆங்கில நாட்டுப் பழக்கவழக்க ஒழுக்கங்களை ஆதரிக்கும் இயல்புள்ள இவர் நம் செந்தமிழிற் பொதிந்துள்ள திட்பநுட்பங்கள் அனைத்தும் எவ்வாறறிந்திருத்தல் கூடும்" எனப் பலப்பல நினைத்து மிகுதியும் ஐயுறலாயினேன். எனினும் என் ஐயுறவனைத்தும் அற்றைப் பகலே அகன்றேடலாயின.

நம் முதலியார் இல்லம் செல்விருந்தோம்பி வருவிருந்து பார்த்திருக்கும் வழக்குடையதாதலின் நாங்கள் சென்றதும் சிறிது சிற்றுணக் கொண்டு சிரமம் தீர்ந்திருந்தனம். அதுபோது முதலியார் அவர்கள் ஓர் அழகிய சாய்வுநாற்காலியிற் சாய்ந்திருந்த வண்ணம் என் ஆசிரியரிடம் நட்புரிமையிற் பற்பல விநோதக் கூறறுகள் விளம்பிப் பின்னர் என் வரலாற்றினையும் வினவி யறிந்தனர். அக்குறுகிய காலத்திலேயே அவர் தம் அறிவின்திறம் என்னை அகமகிழ்வித்தது. பின்னர் நம் முதலியார் தம் வாழ்கைச்சரிதையிற் சிற்சிலகூறி வருங்கால் தாம் புத்தகம் எழுதநேர்ந்த நேர்மையினையும் எங்கட்கு எடுத்துரைக்கலாயினர்.

"நம் அறிவிற்குச் சிறிதும் எட்டாத ஒரு பெருந்தொழிலை மேற்கொண்டு அதனை அரைகுறையாக அவசரத்துடன் புரிந்து பெருமை பெற முயல்வதைக் காட்டிலும் நமக்கு நன்ருகத் தெரிந்த ஒரு சிறுதொழிலை ஏற்று அதனையே பல்கால் ஆழ்ந்து சிந்தித்துப் பொறுமையுடன் உழைத்தலே சாலச் சிறந்தது என்பது என்கொள்கை இக் கொள்கையின் படியே நான் எனக்கு மிகவும் எளிதாகத் தோன்றிய இளைஞர் வாசகபாட வரிசையினை என்னால் இயன்ற அளவில் வருந்தி யுழைத்து வெளியிட முயன்றேன்" என்று நம் முதலியார் அவர்கள் மொழியலாயினர்.

நம் முதலியார் அவர்களின் இடையரு முயற்சியின்பயனே அவர்தம்மை இத்தகைய மேல் நிலையினுக்குக் கொண்டுவந்தது. அவர் நீடூழி வாழ்ந்து நம்தமிழுலகம் மேன்மேலும் பெருமையுறுமாறு எல்லாம்வல்ல இறையவன் அருள்புரிவானுக.


கேசரியின்

மூன்று இரத்தினங்கள்

# லோத்ரா

கருப்பாசயத்திற்குரிய பலவிருத்தி ஒளஷதம்

வலியோடும், காலந்தவறியும், குறைவாகவும், அதிகமாகவும், மாதவிடாய் ஆகுதல், வெள்ளை, மலட்டுத்தனம், மூர்ச்சையடைதல், இடுப்புவலி தூக்கமின்மை அஜீரணம், மலச்சிக்கல் இருமல், சுவாச காசம், தலைவலி, முதுகுவலி முதலியவைகளை குணப்படுத்தும்.

# அமிர்தா

இரத்த சுத்தி ஒளஷதம்

இரத்த மின்மை, தளர்ச்சி, நாடித் துடிப்பு, அஜீர்ணம், மலச்சிக்கல், மூளை பலயீனம், ஞாபகசக்தியின்மை, கண் மங்கல், மூத்திர வியாதிகள் சரும வியாதிகள், சம்போகத்திற் பிரியமின்மை, முதலியவைகளுக்கு ஒப்பில்லாதது.

# அர்கா

ஜ்வர நிவாரணி

இன்புளுபன்சா, டைபாய்ட், மலேரியா முதலிய எல்லாவித ஜுரங்களையும், ஈரல், மண்ணீரல் வீக்கம் முதலியவைகளையும் குணப்படுத்தும்,

விபர பத்தகத்திற்கு எழுதுங்கள்.

**கேசரி குடீரம்,**

எழும்பூர் :: சென்னை

தமிழ் ஜில்லாக்களுக்கு சோல் ஏஜண்ட்:-
T. N. C. நாகலிங்கம்பிள்ளை
மருந்து வியாபாரம்
36, வடக்கு சித்திரைவீதி, மதுரை.

'என்னைப்பற்றி மற்றெதுவும் குறிப்பிடாதிருந்தால் நான் கட்டுரை தரத்தயார்' என்று ஓர் நிபந்தனை விதித்து கட்டுரையளித்த விளம்பரப் பிரியரல்லாத நண்பராதலால் இதை எழுதுபவரைப்பற்றி பிறிதொன்றும் சொல்வதற்கில்லை. —ஆசிரியர்.

# சீர்திருத்தப் புலவர்

[ பு. செல்வராஜ் ]

உயர் திரு. கா. நமச்சிவாய முதலியார் அவர்களை அறிந்திராத தமிழன் தமிழ் நாட்டில் எவ்விடுக்கினும் இருக்கமுடியாது. கடந்த 40 ஆண்டுகளாகவே, அவர்கள் தமிழ்ப்பெரு மக்களுக்குரிய முறையில் அரிய வசன பாட நூல்கள் பலஇயற்றிவந்திருக்கிறார்கள். தொல்காப்பியத்தைச் சிறந்த முறையில் இப்போது அச்சிட்டு உதவி வருவதையும் எவரும் மறத்தல் முடியாது. இதுமட்டுமின்றி இன்னம் பல நீதி நூல்களையும் அவர்கள் தொகுத்துப் பல பாட பேதங்களுடனெல்லாம் வெளியிட்டு உதவி யிருக்கின்றார்கள்.

தமிழ்ப்பெரும் புலவர்களுள் உள்ள சீர்திருத்த நோக்கம் படைத்த மிகச் சிலருள் உயர்திரு முதலியாரவர்கள் தலையாயவர்கள். அகத்தியனாரைப்பற்றி அவர்கள் ஆராய்ந்து ஒரு நூல் வெளியிட்டிருப்பது அவர்களுடைய சீர்திருத்த நோக்கத்தை வெளிப்படுத்தும். சீர்திருத்தக் கருத்துக்களை வெளிப்படுத்தி, அத்துறையில் மாணவர்களைப் பண்படுத்தி மாணவர்களனைவரும் மௌட்டிய எண்ணங்களற்றவர்களாய்ப் பகுத்தறிவுபெற்றவர்களாய்த் திகழ வேண்டுமென்பது அவர்களது பேரவா. அதற்கெனவே அவர்கள் பேசி, உழைத்து வந்திருக்கிறார்கள். பல விடத்துச் செய்த அவர்களுடைய பிரசங்கங்கள் தமிழர்களுள்ளத்தில் புராதன தமிழர் நாகரிகத்தையும் ஆராய்ச்சியறிவையும் புகுத்தி வைத்திருக்கின்றன.

அவர்கள் சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பகுதியின் உறுப்பினராகவும், தலைவராகவும் பலஆண்டுகள் இருந்து, தமிழரின் குறைகள் பலவற்றைப் போக்கி யிருக்கிறார்கள். தமிழ்ப் புலவர்கள் பெரிதும் அசட்டை செய்யப்பட்டு, மிகக்குறைந்த வருவாய் பெற்று வந்திருந்த காலை, அவர்களின் நிலையை உயர்த்தி, அவர்களுக்குப் பிழைப்புக்குரிய வருவாயையேனும் அளிக்க வேண்டுமென்று முயன்று அப்படியே வருவாவை உயர்த்திய பெருமை உயர்திரு முதலியாரவர்களையே சாரும்.

தமிழுக்கெனத் தனிப்பெருமை காட்டாதிருந்த சென்னைப் பல் கலைக் கழகத்தை, தமிழையும் முக்கிய மொழியாகக் கருதும்படி செய்து, அதற்கெனத் தனியாக 'வித்துவான்' பரீட்சை வைத்துப் பட்டங்கள் வழங்கும்படி செய்து, தமிழரின் கண்ணியத்தைக் காத்த பெருமையும் உயர்திரு முதலியாரவர்கள் பாலதே.

ஏழை, பணக்காரன் என்ற வித்தியாசம் பாராமல் அனைவர்க்கும் எளியராய், எல்லார் மாட்டும் புன்னகை பூத்தவராய்ப் பேசி, ஜாதி மத பேதங்களின்றித் தம்மை அடைந்தார்க்கெல்லாம் தம்மாலான உதவிகளைச் செய்து, தமிழரின் நலத்தை வளர்த்து வந்த பெருந்தகையாளர் உயர்திரு முதலியாரவர்கள்.

இவ்வண்ணம் பலஎளிய மாணவர்களுக்குப் பொருளுதவி புரிந்து, கல்வி போதித்து, தமிழர்களுக்குப் பலவகைகளில் பற்பல உதவிகளெல்லாம் புரிந்து தமக்கென வாழாமல் தமிழர்க்குரியராய் வாழ்ந்து, தமிழ்ப் பெருமக்களின் தனிப்பெருந்தகையாய் விளங்கும் உயர்திரு. கா. நமச்சிவாய முதலியாரவர்களின் அறுபதாம் ஆண்டு நிறைவு விழாவாகிய இந்நாளைக் கொண்டாடி, அவர்கள் நீண்ட ஆயுளுடன் செல்வந்தழைக்க வாழ்ந்து தமிழர்க்கு இன்னம் பல நலன்கள் புரிய வேண்டுமென அவாவுறுகிறோம். தமிழர்கள் இவ்வண்ணம் ஒரு முகமாய் அவாவி, தங்கள் மனச் சக்தியினால் உயர்திரு முதலியாரவர்கள் இன்னும் பேருக்கமும் வன்மையும் கொள்ளச் செய்வார்களாக.



[முதலியாரவர்கள் உடல் நலத்தோடிருக்கும் போது எழுதப்பெற்றது இது. —ஆசிரியர்]

முதலியாரவர்கள் நீண்ட காலமாகச் சிறந்த தமிழ் நூல்க ளியற்றி வெளியிட்டுத் தமிழ் மாணவரும் பிறரும் நம் செந்தமிழறிவு பெற்று விளங்கச் செய்தவர்கள். அதுவேயுமன்றி, ஏழை யெளிய மாணவரிடத்தும், நந் தமிழ்ப் புலவரிடத்தும் பேரிரக்கம் வைத்து அவர்கட்குப் பல வகையில் உதவியாற்றிய, ஆற்றி வருகின்ற வள்ளன்மை வாய்ந்தவர். அத்தகைய பெரியாரின் ௬௰-ஆம் ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடுதலும், அவர் மேலும் எல்லா நலங்களிலும் பெருகி இன்னும் நீடு வாழ்கவென வாழ்த்துதலுந் தமிழ ரெல்லார்க்கும் இன்றியமையாத கடமையாகும்.

அன்புள்ள

மறைமலையடிகள்

## நாவலரும் — பாவலரும்

எந்த நாட்டிலும் புலவர்க்கு வறுமை பிறவிக் குணம்; ஆனால் தமிழ்ப் பேராசிரியர் உயர்திருவாளர் கா. நமச்சிவாய முதலியாரவர்களின் வாழ்க்கை வரலாறு இதற்கு விலக்கு. எளிய நிலையில் ஒரு சாமானிய ஆசிரியராய்த் தமது வாழ்க்கையைத் தொடங்கிய முதலியாரவர்கள் ஒரு ஒப்பற்ற கல்லூரிப் பேராசிரியர் நிலையை எய்தி ஓய்வின்பம் நுகர்ந்தார். தமிழ்த்துறையில் பெரும்பொருளீட்டி—ஏழை பங்காளராய்—வரையாது வழங்கும் வள்ளலாய்த் திகழ்ந்தார். சென்னையில் உயர்திரு முதலியாரவர்களின் பழைய புதிய மாளிகைகளாகிய "காவேரியகம்"மும் "கடலகம்"மும் அடையாத வாயிலகங்களாய் - அன்ன சத்திரங்களாய் விளங்கிக்கொண்டிருந்த பெருமை தமிழகம் அறியும். பல ஏழை மாணவர்கட்கு உண்டியும் உடையும் உதவி வந்தார். யார் எச்சமயத்தில் எந்த உதவியை வேண்டினாலும் விரைந்து செய்ய முந்தும் இயல்புடையவர். தமிழ் மொழிக்கும், தமிழ்ப் பண்டிதர்கட்கும் இப்பெரியார் செய்துள்ள அருந்தொண்டு போற்றத் தக்கதாகும்! பெரியார் நமச்சிவாயர் நல்ல நூலாசிரியர்; உரையாசிரியர்; நாவலர்; பாவலர்; தேனினுமினிய உரைநடை வல்லார்; கதாசிரியர்; நாடகாசிரியர்; பதிப்பாசிரியர்; பத்திரிகாசிரியர். இப்பெரியாரின் அறுபதாவது ஆண்டு நிறைவு விழாவை மகிழ்ச்சியுடன் கொண்டாடவிருந்த தமிழகம் இப்பொழுது துன்பங்கொண்டாட நேர்ந்தது வருந்தத்தக்கது. வாழ்க நமச்சிவாயர் திருநாமம்!

ரா. ரங்கநாயகி, தமிழ்ப் பண்டிதை, நுங்கம்பாக்கம்

போலிகளால் ஏமாந்து விடாதீர்கள்!

உஷார்! உஷார்!! உஷார்!!!

எல்லா இடங்களிலும்

நீண்ட காலமாக சகோதர சகோதரிகளால் ஆதரிக்கப்பட்டு வரும்

# அசோகா அசல்

சுகந்தம் நிறைந்த

# பாக்குத் தூள்

கவனித்து வாங்குங்கள்

கடைக்காரர்களிடம் அசோகா என்று கேட்டு

நெம்பர் **1506** பார்த்து

வாங்குங்கள்

தயாரிப்பவர்

**M. K. கிருஷ்ண செட்டி**

வைசியாள் வீதி, கோயமுத்தூர்

---

சோல் ஏஜண்ட்ஸ்:—

**V. கனகய்யசெட்டி அண்டு கோ.,**

105, நைனியப்ப நாய்க்கன் தெரு, P T மதருஸ்

# ‘நமச்சிவாயத்தை’’ நான் கண்டு கொண்டேன்

வடலூராரின் பெயரோடு விளங்கும் இக்கட்டுரையாளர் இருகால் சைதாப்பேட்டை நகரசபைக் கமிஷனராக யிருந்து வருகிருர். இளம் வயதினர். தமிழ்மொழியிடத்தே அளவுகடந்த ஆர்வங் கொண்ட அன்பர். வாழ்க்கையைச் சத்திய நெறியில் நடத்த முற்படுஞ் சிலருள் இவர் ஒருவர் —ஆசிரியர்

சென்னை உவெஸ்லிக் கல்லூரியிலே 1918-ம் ஆண்டிலே, மாணவனுகப் படித்துக்கொண்டிருந்த போதுதான் நான் முதன் முதலில் பெருந்தகையார் கா. நமசிவாய முதலியார் அவர்களைப்பற்றி அறிய நேர்ந்தது. அவர்கள் எழுதியுள்ள வாசக புத்தகங்கள் என்னுள்ளத்தைக் கவர்ந்தன. நமது தமிழ்த் தாய்க்கு நல்ல ஆபரணங்களாக அணியவல்ல அந்த வாசகபாடங்களை, நான் சிறுவகுப்புக்களில் படிக்கும் போது பாட புத்தகமாகப் படிக்கக் கொடுத்து வைக்காது போனேனே என வருந்தினேன். நான் பாடசாலை வகுப்புக்களில் வாசிக்கும்போதே அப்பாட நூற்கள் வெளியிடப் பெற்று இருக்கவேண்டும். ஆனல், எங்கள் பாடசாலை அதிகாரிகள் அவைகளைப் பாட புத்தகங்களாக எங்களுக்கு வைக்க எண்ணங்கொள்ளாது போயிருக்கவேண்டும். என்ன காரணங்கொண்டு எண்ணங் கொள்ளாது போனர்களோ எனக்குத் தெரியாது. என் துர் அதிர்ஷ்டத்துக்குத்தான் தெரியும். பள்ளிக்கூடத்தில் பாட புத்தகங்களை வைப்பதும், வைக்காமல் விடுவதும், புத்தகங்களுடைய உயர்வுதாழ்வைக் கருதி மாத்திரம்அல்ல என்பதை இக் காலத்துப் புத்தக வியாபாரிகளும் பள்ளிக்கூடங்களை நடத்துபவர்களும் நன்ருக அறிவார்கள். அக்காலத்திலும் இக்காலத்துச் சட்டங்கள் கையாளப் பெற்றுத் தானிருக்கும்.



திரு. கீ. ராமலிங்கம் அவர்கள் B. A.,

அன்று முதலியார் அவர்களது பாடநூற்களில் ஒன்றைப்பார்க்க நேர்ந்த நான், அப்போதே அதிலுள்ள பாடங்களில் ஒன்றைப் படித்தேன். அதன் சுவையினுல் இழுக்கப்பெற்று இன்னென்றை வாசித்தேன். இப்படியே அந்நூலிலுள்ள எல்லா பாடங்களும் அதுபோதே படித்து முடிக்கப்பெற்றன. அந்நூலைமுடித்த இன்பம், அதே போன்ற இன்பத்தை மேலும் நுகரத் தூண்டிக் கொண்டே இருந்தது. அத்தூண்டுதலின் பயனுல் பிறவகுப்பு வாசகங்களையும் வருவித்துப் படிக்கலானேன். பாடங்களில்கண்ட பொருள்கள் பல விடங்களில் இருந்து அரும்பாடுபட்டுச் சேகரிக்கப் பெற்றன வாய் இருந்ததுமாத்திரம் அந்நூல்வரிசையின் சிறப்பாகாது. பாடங்கள் எழுதப்பெற்றிருந்த மொழியின் இனிமையே என்னைக் கவர்ந்தது. தெள்ளத் தெளிந்த தமிழ் மொழி! கரடு முரடு காணுத கற்கண்டுச் சொற்கள்!! வாசித்துக்கொண்டு போகும் போதே நேசம் விளைவிக்கும் இன் இசையின்பம்!!! சுவையும், இன்னவும் அதுவரை நான் வாசகபாடங்களில் கண்டிராத மகிழ்ச்சியை உண்டாக்கின.

அப்பாடங்களை ஆசையினுல் மனப்பாடம் செய்யவும் முயன்றேன். நமது சிறுர்கள் எட்டாம் வகுப்பு வரை இந்நூல் வரிசைகளைப் பொருள் விளங்க அறிந்து, உருப்போட்டு விடுவார்களானுல், அவர்களுக்குத் தமிழ்மொழியை இனிமையாகவும் திருத்தமாகவும்பேசவும் எழுதவும் எளிதில் வாய்த்துவிடும் என்பது திண்ணம். நான் பிற்பால் அலுவல் முறைக்காகத் தெலுங்கு படிக்க நேர்ந்தகாலத்து, திருவினர், வீரேசலிங்கம் பந்துலு அவர்களது பாட வரிசைகளில் இரண்டாம் புத்தகத்தை உருப்போட்டேன். அவ்வொரு நூலை மனப்பாடம் செய்ததே எனக்குத் தெலுங்கில் பெரும்பயன் அளித்தது. அப்படியாக, நமது இளைஞர்கள் நமது முதலியார் அவர்களது எட்டுவாசக பாடங்களை உருப்போட்டு விடுவார்களானுல், தமிழ்பாடத்தைப்பற்றி அவர்கள் மேல் வகுப்புக்களில் சிறிதுகூட அஞ்சவேண்டுவதே இல்லை. வாழ்க்கையில் தமிழ் மணங்கமழும் உரையும் எழுத்தும் உடையவர்களாய் உண்மைத் தமிழர்களாய் விளங்குவார்கள் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

பிள்ளைகள் படிக்கும் பள்ளிக்கூடத்துப் புத்தகங்கள் தானே யென்று அவைகளை எள்ளி விட்டுவிடுபவர்கள் பொருள்களின் உண்மை யறியாதவர்களே யாவர். தமிழ் உரைநடைக்கு உயர்ந்த நல் இலக்கியங்களாக அந்நூற்களைப் போற்றுதல் வேண்டும். பிற அறிஞர்கள் முன்னும், பிற்பாடும், எழுதியிருக்கும் வாசக பாடங்களில் எதுவும், முதலியார் அவர்களது ஒரு நூலுக்கும் உயர்வாகாது. ஒப்பாகச் சொல்லக்கூடியதும் இல்லையென்றே கொள்ளலாம். முதலியார் அவர்கள் எழுதியுள்ள நாடகங்கள், பிற உரைநடை நூற்கள், வெளியீடுகள் பண்டை இலக்கிய இலக்கணப் பதிப்புக்களைக் காட்டிலும் அவர்களது வாசக பாடங்களே தலைசிறந்து விளங்கற்பாலவும், தற்காலத்திற்குப் பெரிதும்

வேண்டப்படுபவவுமான ஒப்பற்ற உரைஇலக்கியங்கள் என்பது எனது முடிந்த முடிபு. ஆங்கிலத்திலே, 'கண்டதுங் காதல்' என்பதுபோல, இவ்வாசகங்களை முதலில்கண்ட அந்நாளே அவற்றின் மீது கொண்ட காதலானது ஒத்தும் ஆராய்ந்தும் சீர்தூக்கிப்பார்க்கும் இந்நாளிலும், ஆராஅமுதளிக்கும் அளிந்த காதலாகவே இருந்துவருகிறது. என்னைப் போலவே. இவ்வசன இலக்கியங்களின் மீது இன்பக் காதல் கொண்ட அன்பர்களும் நண்பர்களும் பலர் ஆவர்.

தமிழ்மொழியின் இனிமையினலே, முதலியார் அவர்கள்பால் இழுப்புண்ணப் பெற்ற உள்ளம்பூண்ட எனக்கு அவர்களை நேரேகண்டு களிக்கும்பேறு உடனே கிடைத்துவிடவில்லை. நேர்முகமாகப் பார்க்கவும், வணங்கவும், அளவளாவவும், அவாமாத்திரம் நாளுக்கு நாள் வளர்ந்துகொண்டே வந்தது. முதலியார் அவர்களது பெயரை அவ்வப்போது தமிழ்க்கழகங்கள், மகாநாடுகள் முதலியன சம்பந்தமாக கேள்விப்பட்டு வருவது இயற்கையாயிற்று. கூட்டங்களிலும் வழிகளிலும் நைக்கிளையாகக் கண்டுகளித்து வருதலும் கைகூடு ஆயிற்று. இந்நிலையிலே முதலியார் அவர்கள் நட்பு கொண்டாடிவந்த ஒருகுடும்பத்தோடு, கொள்வினை கொடுப்பினை ஏற்பட்டது. எனது தங்கையின் மாமனரும் கமிசேரியேட்டில் பெரியவேலையிலிருந்து பிற்பாடு துவிபாஷாக இருந்தவருமான திருவினர், தி. கிருஷ்ணசாமி முதலியார் என்னேடு முதல் முதலில் உரையாட நேர்ந்தபோதே தமிழிலே எனக்குப்பற்று உண்டுஎன்பதை அறிந்தவராய் நமசிவாயத்தைப் பற்றிப் புகழ்ந்து கூறலானர். பிறகு அவரோடு பேசிவந்த போதெல்லாம் 'நமசிவாயத்தைப்'பற்றி சிறிதுசிறிதாக எனக்குச் சொல்லிக் கொண்டே வருவார்.

தின்னனூரிலே, லோகல்பண்டு பள்ளிக்கூடத்திலே உபாத்தியாயராக இருந்தவரும் தமது சிறிய தாயாருடைய மணளருமான திருவினர்: சண்முக முதலியார் வீட்டிற்குத்தமது சொந்தஊராகியகாவேரிப் பாக்கத்திலிருந்து 'நமசிவாயம்' வந்ததும், அங்கிருந்தபடியே சென்னைக்குச்சென்று, பச்சையப்பன் பாடசாலையில் தமிழ்ஆசிரியராக இருந்த, திருவினர் வித்வான் மயிலை-சண்முகம் பிள்ளை அவர்களிடம், தமிழ்படித்து வந்ததும், அவ்வாசிரியர் தொண்டை மண்டலம் துளுவவேளாள உயர்தர பாடசாலையில் பண்டிதரானபோதும் அப்படியே படித்து உயர்ந்ததும், அக்காலத்திலே, மேற்சொன்ன திருவினர் தி. கிருஷ்ணசாமி முதலியார் அவர்களும் அங்கு வந்து தமிழ்ப்படித்துவர இருவருக்கும் நட்பு ஏற்பட்டதும், அதுமுதல் இருவரும் அண்ணன் தம்பியர்போல், கலந்து ஒருவர் உடையை ஒருவர் உடுத்திக்கொள்ளுதற்குரிய அவ்வளவு நெருக்கத்தோடும் அன்பினேடும் பழகியதும், முதலியார் அவர்களது உடன்பிறந்தவரும் இப்போது வில்சன் கம்பெனியில் துவிபாஷியாக இருப்பவருமான மாணிக்க முதலியார் இவர்களோடு வந்துசேர்ந்ததும், அப்போதோ அதற்கு முன்பேயோ, 1901-லோ அல்லது 1902-லோ செயின்ட் பிரான்ஸிஸ் சேவியர் பாடசாலையில் முதலியார் அவர்கள் தமிழாசிரியர் ஆனதும், வித்வான் மயிலை சண்முகம் பிள்ளை தொண்டை மண்டலத்தைவிட்டு, எஸ், பி. ஜி. பாடசாலைக்குப்போய் சிலகாலம் ஆசிரியராயிருந்து அப் பள்ளியை விட்டு மயிலாப்பூர் சென்தோமுக்குச் சென்றதும் தமது குருவுக்குப் பின்னல் முதலியார் அவர்கள் எஸ். பீ. ஜிக்கு ஆசிரியராகப்போனதும், பிராட்வே சாலையில் தாம் சன் கம்பெனிக்கு எதிரே ஷை திரு. தி. கிருஷ்ணசாமி முதலியாரும் அவரது தம்பி திரு. இராமசாமி முதலியாரும் ஆரம்பித்த 'பீகாக் அண்டு கோ' 'கிளியர் டைப் பிரஸ்' என்னும் அச்சுச்சாலையில், முதலியார் அவர்களும் பங்கு எடுத்துக்கொள்ள ஏற்பாடானதும், ஏதோ சில திட்டவேறுபாட்டால் முதலியார் அவர்கள் எழுதும் அரியநூற்களை அச்சிடும்பேறு அந்த அச்சுச்சாலைக்கு வாய்க்காமல் போனதும், பிறகே குமாரசாமி நாயுடு அண்டு சன்ஸ்ஸா ரோடு முதலியார் அவர்கள் ஒப்பந்தம் செய்துகொள்ள நேர்ந்ததும், இன்னும் பிறவும், இடையிடையே இருவரது கலந்த நட்பும் கனிந்த அன்பும்,ஷை திருவினர். மாமா கிருஷ்ணசாமி முதலியார் வாயிலாக அறியலானேன்.

இவ்வளவும் கேட்டபிறகு முதலியார் அவர்களோடு அறிமுகமாகவேண்டும் என்னும் அவா மேலும் வளர்ந்து வருவதாயிற்று. ஆனல் கண்டு அளவளாவி மகிழும்காலந்தான் கைகூடவில்லை. படிப்பை முடித்து, உத்தியோகம் ஏற்று வெளியூர்களுக்குச்சென்று உழலத் தொடங்கிவிட்ட பிறகு இந்தஅவா இன்னும் அடர்ந்து கொண்டேவந்தது.

நேராகப் பார்த்துப் பேசிப் பழகியிரா விட்டாலும், அத்தனைக்காலமாக இப்பெருந்தகையாரைப் பற்றி எண்ணியும், கேட்டும் ஒரே வழிக்கண்டும் இருத்தலின், அவர்கள் புதியவர் என்ற கருத்து தோன்ருது மறைந்தது. எனக்கு மிக்கப் பழக்கமானவரும், பெரிதும்வேண்டியவரும் போன்றே எண்ணிவரலானேன். இப்படியிருக்க 1933ம் ஆண்டிலே நான் வட ஆர்க்காடு ஜில்லாவில் பள்ளிகொண்டையென்னும் ஊரில் தொழில் ஆற்றி வந்தபோது நேர்ந்த நண்பர் ஒருவர், முதலியார் அவர்களைக் காணவேண்டும் என்ருர். கிறித்துமஸ் விடுமுறையில் சென்னைக்கு வந்தோம். ஒரு நாட்காலை கடலகத்திற்குச் சென்ருேம். உள்ளே நுழையும்போதே என் உள்ளத்தில் உந்தி ஊற்றெடுத்த உவகையினை எப்படிச் சொல்லுவேன்! முதலில் தோட்டத்தை

# முதலியாரவர்கள் தவம்



திரு: A. M. நித்யாநந்தன்

[சென்னை ஜில்லா கல்விச்சங்கத்து அங்கத்தினர்- தலைமை உபாத்தியாயரும் பள்ளி யுரிமையாளரும் இராமலிங்க சுவாமி பாடசாலை சென்னை- செய லாளர், தேசிய பெண்பாடசாலை, சிந்தாதிரிப் பேட்டை; சன்மார்க்கசங்கம், சென்னை; சிந்தாதிரிப் பேட்டை பெற்றோர் சங்கம்; அன்னதான சமாசம்; பள்ளியுரிமை ஆசிரியர் சங்கம் தென்பாகம் சென்னை. தலைவன்,ஆரம்ப பள்ளியுரிமையாளர் சங்கம்,சென்னை. அதிகாரி, சிந்தாதிரிப்பேட்டை உயர்தர பாடசாலை. உதவி செயலாளன் சிந்தாதிரிப்பேட்டை கூட்டுறவு சங்க நிதி, இத்தனைப் பொறுப்புகளும் உள்ளவர் இதை எழுதுபவர்—ஆசிரியர்.]

திரு. முதலியார் அவர்கள் இளஞ் சிறுவர்களது முன்னேற்றத்திற் கென்றே தம் உடல் பொருள் ஆவி மூன்றையும் கொடுத்துதவும் பெரியார். அவர் வாழ் நாள் அனைத்தையும் அத்துறையிலேயே செலவிட் டுள்ளார். அவருடைய நூல்களனைத்தும் அப்பேரன் பின் பேரொளியாக விளங்குகின்றன.

மாண்டிசோரி முதலிய மேனாட்டுப் பேறிஞர் கள் வைத்து நடத்தும் தலை சிறந்த பள்ளிக்கூடங் களைப்போல நம் தமிழ் நாட்டிலும் உலகிற்கே எடுத்துக்காட்டாய் இருக்கும் வகையில் பள்ளிக் கூடம் ஒன்று நடத்திக் கண்ணால் பார்க்கவேண்டும் என்று பல நாளாகத் தவம் கிடக்கின்றார் இக்கட லகச் செல்வர். என் பேத்தியின் வயிற்றுப் பேத்தி யின் திருமணத்தைக் கண்ணாலே காணவேண்டும் எனத் தன்னலம் வேரூன்றிய நம்மிடையே ஏசுநாதர் போல இளஞருலகே இறைவனுலகென நம்பி அதற் கென செந்தண்மை பூண்டு உழைக்கும் இவ்வந்த ணர் பெருமகனர் அறவோரில் தலைசிறந்த முனிவர் அன்றோ? அக்கோயிலும் விரைவில் எழுந்து விளங்கு மாக.

இளைஞரிடத்தே அன்பு பூண்டொழுகுபவர், அவ் விளைஞர்க்கே கல்விகற்கும் ஆசிரியர்களிடத்தும் அன்பு பூண்டொழுகுதல் இயல்பு தானே. பண்டித சங்கத்தின் தலைவராக இருப்பதும் இதுபற்றி யன்றோ. நம் மாகாண பள்ளியுரிமை ஆசிரியர்கள் சங்கத்தின் துணைத் தலைவராகவும் அப்பெரியார் விளங்குகின்றார். பள்ளியுரிமை யாசிரியனாக இருந்து சென்னை தென்சங்கத்தின் செயலாளனாக இருக்கும் வகையில் இப்பெரியார் எங்களிடத்தே வைத்துள்ள அளவிடா அன்பைக் கண்டு களிக்கும் பேறு பெற் றேன். தேனைச் சுற்றி வண்டு மொய்ப்பதுபோல அவரைச்சுற்றி யாங்கள் மொய்த்து நின்று எங்களை யும் மறந்து இன்புற்றுக் கிடைப்பதைப்பலரும் கண் டிருப்பர். எங்கள் குறைகளைத் தம் குறையாகக் கொண்டு எந்த நேரத்தும் எங்களுக்காவன செய்து வரும் இப்பேராசிரியரை நாங்கள் எப்படி மறக்கக் கூடும்.

---

கண்ணுற்றோம். குறிஞ்சி, முல்லை, செய்தல் மருதம் என்னும் தமிழ் நானிலத்திற்குரிய மாஞ் செடிகளை நான்கு மூலையிலும் கொண்டு பச்சைப்பட்டு விரித் தது போன்ற புல்தரை பூண்ட நந்தவனம் எங் தன் மனதைக் கட்டுண்ணச் செய்தது. உடன் வந்த நண்பரும் தமிழ் மணம் நுகர்ந்து களிக்கலானார்.

இன்னும் உள்சென்று, மாடி யேறினோம். மகிழ்ச்சி ததும்பிற்று. கண்டோம் 'நமச்சிவாயத்தை." கழி பேருவகை யெய்தினோம். நானே அறிமுகமாகா தவன். மிகப் பழகியவன் போல எனது நண்பரை அறிமுகம் செய்வித்தேன். என் குடும்பத்தின் பேரைச் சொன்னதுமே என்னை முற்றும் அறிந்த வர் போலவே என்னிடம் கலந்த அன்பில் கனி வுடன் உரையாடினர். தமிழன்னை ஈன்ற தவப் புலவர், காட்சிக்கு இவ்வளவு எளியவராகவும், அன்பு மிளிர்ந்தவராகவும், நெடுநாள் பழகியவரோடு பேசுதல் போல் மிக்க உரிமையோடும் உவகை யோடும் உரையாடுபவராகவும் இருப்பது உற்று நோக்கி நோக்கி உளம் பூரித்தேன். சிறிது நேரம் நலமும் பிறவும் உசாவினதும், தோட்டத்திற்கு அழைத்து வந்து தமிழ் மணம் வீசத்தாம் அமைத் திருக்கும் செடி கொடிகளின் அருமையை அருமை யாக விளக்கிக் காட்டினர். பிறகு பிரியாவிடை பெற்று, அவர்கள் பாலே ஏக்கங்கொண்டதாய், என்பால் வருவதற்கு ஒருப் படாது இருந்த உள்ளத்தை ஈர்த்து வரித்துக்கொண்டு, நண்பருடன் 'கடலகம்' கடந்தேன்.

இதுதான் 'நமசிவாயத்தை' நான் கண்டு கொண்ட வரலாறு. அதற்குப் பின் பலமுறை கண்டு மகிழ்ந்திருக்கிறேன்,

# திருப் பெருந் தகையாளர்

பைந்தமிழ் ஒளிர் செவ்விய நாட்டில் பகர்தற்கரியசெம்மை நலம் மிகுந்த ஒள்ளிய குணமும், உரையில் அடங்காக் கல்வியின் பெருநலமும் தவழப் பெற்று, மாணவர் உலகை முற்றிலும் அடிமை கொண்ட தமிழ்ப் பேராசிரியர், திரு. நமச்சிவாய முதலியார் அவர்களே யாவார்கள். தற்காலத்தே தமிழுலகில் தோன்றும் பெரும்பான்மையான தமிழ்ப் புலவர்கள் போன்றும் வித்துவான்கள் போன்றும் அல்லாது, பண்டைய நற்றமிழ்ப் புலவர்கள் போன்றே திட்ப நுட்பம் செறிந்த, பொருளழகுகள், நயங்கள், கற்பனைகள் இன்னும் பிறதமிழ்ச்சுவைகள் கெழுமிய ஒப்புயர்வில்லாத் தமிழ் நூல்கள் அனைத்தையும் ஏறக்குறைய இருபது ஆண்டுகள் ஒரு தமிழாசிரியர் பால் செவ்வனம் பயின்று, பழுத்த புலமைபெற்றுத் திகழ்பவர் இப்புலவர் நாயகம். திருமிக்க சென்னைமா நகரில் மிளிரும் பல கல்விச்சாலைகளில் தமிழ்ப் புலமை நடாத்தும் தமிழாசிரியர்கள் பலர் இப்பெரியார் நல்லுதவி பெற்றே அத்தொழிலைப் பெற்றனர் என்று இயம்பல் மிகையாகாது. தமிழ்ப்புலவர் கட்குப் பேருவகையுடன் ஒண்பொருள் ஈவதும் அவர்களோடு விருந்துண்பதும், அவர்களுக்கு அவ்வப்போது தக்க இன்னுதவி புரிவதும், அவர் நனி விழையும் அரும்பெருஞ் செயல்கள். உதவியற்ற மாணவர்கள் பற்பலர் இவ்வருமைப் பெரியார் மாப் பெருங்கருணையின் பொலிவால் பொருள் உதவி பெற்று, மாண்பட்டங்கள் பெற்றுச் சிறந்த உத்தியோகங்களில் அமர்ந்து இனிது வாழ்கின்றனர். இப் புலவர் மணியின் பரோபகாரச் செயல்களையும் வள்ளன்மைச் செயல்களையும் கருணைச் செயல்களையும் தமிழுலகம் செவ்வனம் அறிந்துளது. எல்லோர் மாட்டும் இனிமையாகவும், சகோதர பாவனையோடும், கள்ளம் கபடம் இன்றி ஒழுகும் மேன்மை தவழும் நடையுடையார் இத்தமிழ்ப் பேராசிரியரே என்று உறுதியாகக் கூறலாம். இக்கருணையாளர் முயற்சியால் தான் தமிழ்க்கல்வி சிறந்த நிலையை தற்போது எய்திவருகின்றது எனவும், வித்வான் பரீக்ஷைக்கு நம்மவர்கள் செல்வதற்கு வசதிஉண்டாயிற்று எனவும் எவரும் அறிதல் வேண்டும். கல்விப் பொருளும், செல்வப் பொருளும் இரண்டும் ஒருங்கு தழைக்கப்பெற்று ஒளிரும் தமிழ்நாட்டுத் தமிழ் நாயகர் இவரே என்று சொல்லவும் தகும்.

இத்தகைய சிறப்புக்கள் பற்பல மிளிரும் இப் பெருந் தகையார்பால் ஒருவர் ஒருநாள் கலந்து பழகுவார்களாயின், அவர் பின்னர் இவர்தம் கெழுதகை நட்பையும், அன்பின் மாட்சிமையும் அணிகளாகவே பூண்டுகொள்வார்கள். இத்தமிழ் நாயகரிடம் தாராளமாக மாணவர்களும், பிரபுக்களும், பெரியோர்களும், சிறியோர்களும் பேசிக் காலத்தை இனிது கழிக்கலாம். கபடமில்லாப் புனிதராக ஒளிர்வதால் இப்பெருந்தகையாளர் எல்லோரிடத்தும் நெடுநேரம் இன்பமாகப் பல்பொருள் பொதிந்த விஷயங்களைப் பேசிக் காலத்தைக் கழிக்கப் பேரவா உடையவராகக் காணப்படுகின்றனர். என் இன்பப் பெருக்காகவும், தமிழ்ச்செருக்காகவும் மிளிரும் என்னிடத்தும், என்குடும்பத்தார் சகோதரர் ஆகிய இவர்களிடத்தும் பேரன்பும், பெரும் பொறுப்பும் பெற்று ஒளிரும் என்ஆசிரியர் நமசிவாய முதலியார் அவர்கள் இன்னும் அநேக ஆண்டுகள் தமிழுலகில் நின்று தழைத்துத் தமிழ்ப் பயிரை வளர்த்துத் தமிழர்களுக்குப் பெருநலம் அருட்செய்யுமாறு எல்லாம் வல்ல இறைவன் இணையடிகளைப் பெரிதும் வழுத்துகின்றேன்.

இங்ஙனம் வித்துவான்,

மணி. திருஞானசம்பந்த முதலியார்.


இந்தியாவில் சிறந்ததும் மலிவானதும்

நஞ்சன்கூடு பல்பொடி

டப்பி) ட. ட No.61. மெடிகேட்டட் (அ)

போலிகள் இருப்பதால் நேரில் எழுதுக

I.D.L. ச்யாவனப்ராச சிறந்த டானிக் சத்வைத்யசாலை - நஞ்சன்கூடு

பலவிருத்திக்கு I. D. L. மகரத்வஜமும் ஆல்மண்டைனும்

ஜ்வரேக் ஸோல் எவ்வித ஜ்வரங்களுக்கும் ஏஜன்ட் யுனைடெட் கன்ஸர்ன், பந்தர்தெரு, மதராஸ்

(சோல் ஏஜண்டு:- யுனைடெட் கன்ஸர்ன், 54, பந்தர் தெரு, மதறுஸ்.)



# கருணைப் பெருக்கு

திரு: மணி. கோடீஸ்வரன் அவர்கள் B A. L. T.

[ஒரு நாளுக்கு 24மணி நேரம்தான் என்பதை ஓராது, அனந்தங்கோடி அலுவல்களைத் தம்இளந்தோள்களின் பேரில் சுமந்து நிற்கும் மாணவராம் இவர், கோவிந்தப்ப நாயக்கன் கலாசாலைத் தலைமை யாசிரியர்! பல தொழிலாளர் சங்கங்களில் மிகுந்த பொறுப் பேற்றுவருகின்றார். ஏழைகட்கு ஓயாது உழைப்பதையே தம் உயரிய பணியாய்க் கருதுபவர். பெரிய குடும்பம் இவரைத் தொங்கிக் கொண்டிருக்கிறது. இதற்கெல்லாஞ் சளைக்காது புத்தம் புதுப் பொது நலச் செயல்களிலும் ஈடுபட இன்றும் துணிந்து நிற்பதோர் விந்தை. குறிப்பிட்ட நேரத்தைக் காக்க முடியாமல் தவிக்கும் இவரிடமிருந்து குறிப்பிட்ட காலத்துக்குள் முதலியாரவர்களைப் பற்றிய கட்டுரை நம் கைக்கு எட்டியது, கோடைக்காலத்தில் பெருமழை பிடித்து அடித்தது போலத்தான்!—ஆசிரியர்]

முதலியாரவர்கள் தமிழ் மொழி வளர்ச்சிக்கும் பண்டித மக்கள் முன்னேற்றத்திற்கும் ஆற்றிய பணிகட்கு பண்டித உலகம் என்றும் நன்றி செலுத்தக் கடப்பாடுடையதாம்.

தாய் மொழியில் வல்லார்கள் எத்தகைய சீரும் சிறப்பும் அடைதல் கூடும் என்பதை உலகிற்குத் தன் வாழ்க்கையில் நடத்திக்காட்டிய பெருந்தகையாளர் முதலியாரவர்களேயாவர். தாய் மொழியில் ஆர்வம் குன்றி ஆங்கிலக் கல்வியில் அவாமிக்கிருந்த அற்றை நாளில் தாய் மொழிக்குப் பெருமை தந்து தமிழன்னைக்குப் பணி செய்தலே தன் பணி எனக் கொண்ட மிகச்சில தமிழ்ப்பெரியார்களில் முதலியாரவர்களே முதன்மை பெற்றோர்கள் என்பது மிகையாகாது. இருபது ஆண்டுகட்கு முன்னிருந்த பண்டித உலகுக்கும், இப்போதிருக்கும் பண்டித உலகுக்கும் உள்ள சீரிய வேறுபாடுகளுக்கு முதலியாரவர்களே முக்கிய காரண ராவார்கள்.

தமிழ் மொழியின் முன்னேற்றத்திற்குப் பல துறைகளிலும் முதலியாரவர்கள் இயற்றிய தொண்டு எக்காலத்தும் நிலையுள்ளதாகும். கண்டோர், வியப்புற விழைவும் கொள்ளும் வண்ணம் எண்ணிறந்த நூல்களையும் இயற்றியுள்ளார்கள்.

மாணவர்க்குப் பயன் படுமாறு பாடபுத்தகங்களைச் சிறந்த முறையில் மேல் நாட்டு அனுபவத்தோடு எழுதி வெளிப்படுத்தி யுதவியதை எவரும் நன்கு அறிவர். முதலியாரவர்களை அறியாத ஆசிரியரும் மாணவரும் இலர்.

முதலியாரவர்களின் அறிவு ஆற்றல் முதலியவை தனைக்கண்டு அகமகிழும் மக்கள் அவர்களது அளவிலா அன்பையும் கற்றோரிடத்தும் மற்றோரிடத்தும் காட்டும் கருணையையும் நோக்குந்தோறும் நெஞ்சம் உருகுவர். சென்னையில் இருபத்தைந்து ஆண்டுகட்கு முன்னர் கல்விச்செல்வத்தை அடைதற் பொருட்டுத் தங்கள் இல்லம் விட்டு வந்த மாணவர்க்கு காவிரி யில்லம் தாயகமாக இருந்ததை யாவரும் நன்கு உணர்வர். இடவசதி, உணவு வசதி மிகக் குறைந்த அக்காலத்து இப்பெருந்தகையாளர் வருவோரை இன்முகங்காட்டி அன்போடு ஏற்று அவர்க்கு ஆவன செய்து ஆதரித்தனர். பாடசாலை ஆரம்பகாலத்து காவிரி யில்லத்து நூற்றுக் கணக்கான மாணவர்கள் புத்தகமுதவி, பணமுதவி, பாடசாலைச் சம்பளமுதவி, உணவு விடுதிகளிற் சேருதற்கியன்ற உதவி, எனப்பல்வேறு உதவிகள் பெற்றமையைக் கண்ணுற்றோரே இவர்தம் கருணையின் பெருக்கை அறிதல் கூடும்.

வரையாது கொடுப்போர்க்குச் செல்வம் குறையாது பெருகும் என்னும் உண்மையை, இவர் ஆண்டுதோறும் மக்கட்கு இல்லை என்னாது வழங்கிய செய்கையே காட்டும். இவ்வரும் பெருஞ் செயலே காவிரியில்லத்தைக் கடலகமாக மாற்றியது. செல்வம் நிறைந்த காலத்து மக்களிடத்துச் சில குறைபாடுகள் இயற்கையாகக் காணப்படுகின்றன. ஆனால் தமிழ் நாட்டிற்குத் திலகமெனவே நிலவும் இவரிடத்து எக்காலத்தும் அக்குறைபாடுகளை யாவரும் கண்டிலர். உலகில் ஆராய்ச்சிக்காரர்களையும், சிறந்த புலமை வாய்ந்தவர்களையும், செல்வந்தர்களையும் காணுதல் கூடும்; ஆனால், அறிவு, ஆராய்ச்சி புலமை, செல்வம், அருள், அன்பு ஆகிய யாவும் ஒருங்கே அமையப்பெற்ற முதலியார் போன்றார் மிகச் சிலரே. இவர்தம் அன்பின் மாட்சியையும் அருளின் பெருக்கையும் நோக்குங்கால் இவரைப் பாரி என்போர் சிலர். சடையப்ப வள்ளலென்போர் பலர். கம்பனைப்போல் கவிவாணரிருப்பின் இவர் தம் செய்கையை எவ்வாறு போற்றுவர் என்பதை எண்ணி எண்ணி இன்புறுவோமாக.

தமிழ் நாடு செய்த நற்றவத்தால் தோன்றிய முதலியாரவர்கள் உடல் நலம் பெற்று செல்வப் பெருக்கெய்தி என்றும் இன்புற்றிருத்தல் வேண்டுமென இறைவன் திருவடிகளைப் போற்றுதலே அவரால் நன்மை பெற்ற என் போன்ற மாணவர்கள் அவர் தமக்கு இயற்றும் கைம்மாறாகும்.

மணி. கோட்டீஸ்வரன்.


# காய கல்ப ரசம்

(ரிஜிஸ்டர்ட்)

எல்லாவித வியாதிகளுக்கும் தேவாமிர்தம் போன்றதென உலகப் பிரசித்தி பெற்றது. சகலவித ஜுரங்கள், தலைவலி, ஜலதோஷம், தொண்டைக் கம்மல், ஒற்றைத் தலைவலி, புறங்கழுத்து இழுப்பு, நரம்புச்சிலந்தி, இடுப்புவலி, ஜன்னி, அஜீரணம், மந்தம், புளியேப்பம், வயிற்றுப்போக்கு, வயிற்று உப்பிசம், பசியின்மை வாத ரோகங்கள், பல்வலி, வாய்நாற்றம், சூதகஜன்னி, சூதகக்கட்டு, காலரா, பிளேக், வாயு வியாதிகள், சிறு குழந்தைகளுக் குண்டாகும் மாந்தம், கக்குவாய், முதலிய வியாதிகளுக்குக் கைகண்ட மருந்து. துளிக் கணக்கிலும், உள்ளுக்கும் மேலுக்கும் உபயோகித்து நிமிஷக் கணக்கில் சுகமடையலாம். ஒவ்வொரு குடும்பத்திலும் டாக்டரைப் போல உதவக்கூடியது. ஒரு முறை பரீக்ஷித்தால் உண்மை விளங்கும்.

புட்டி விலை ரூ. 1—8—0 தபால் சார்ஜ் வேறு.

## இந்தியன் மெடிகல் ஒர்க்ஸ்,

ஆலந்தூர் போஸ்ட், சென்னை. | 234-நே. கோவிந்தப்ப நாய்க்கன் தெரு, சென்னை.



# தமிழ்நாடு புலம்பல்

## இராயப்பேட்டை முனிவர்

ஆசிரியர் திரு. வி. கலியாணசுந்தர முதலியார் அவர்களைப்பற்றி என்னென்று இயம்புவது? "ஆங்கிலமொழியிலே இனிமை ததும்பும் வண்ணம் இன்பூட்டிய காலஞ்சென்ற 'கோல்ட்ஸ்மித்' போன்று தமிழில் எழுதுகிறார்" என ஓர் நண்பர் எம்மிடம் கூறியது இதுகால் நினைவிற்கு ஓடோடி வருகின்றது. எழுத்திலே எளிய இனிய நல்ல நடை. ஒழுக்கத்திலே தூய்மையுடையவர். இவரது நடை, நொடி, பாவனைகள் அனைத்தும் தமிழ் நாட்டினர் பின்பற்றத்தக்கனவாயுள.

பொது வாழ்வைத் துறந்து நிற்பதாய் இறுமாந்திருக்கும் இந்தஇராயப் பேட்டை முனிவர், முன்னம் பொது மேடைகளிலே பேரிடி முழக்கத்தோடு பெருமழை பொழிந்தவர் என்பதை யாரே மறப்பர்?—ஆசிரியர்.

### ஆசிரியப்பா

நமச்சி வாய ! நமச்சி வாய !
பட்டனை என்று விட்ட செய்தி
உறுத்தது மின்னென இறுத்தது வெருக்கோள்
பொறிபுலன் கலங்கி நெறியுணர் வழித்தன
மண்ணுஞ் சுழன்றது விண்ணுஞ் சுழன்றது
எங்கும் இருளே தங்கிய தன்றே
தெளிவுறு நிலையில் களிபொழி லுடுத்த
அளிதமி ழுருவி இழிதரு மலையாய்
விளங்கிய காட்சி வழங்க வில்லை
என்னே உலகம்! மன்னே உலகம்!
இருந்தார் நெருநல் இறந்தார் இன்றே
என்னும் உண்மையில் மன்னிய நெஞ்சையும்
நின்றன் பிரிவு நின்றே உருக்கும்
நமச்சி வாய ! நமச்சி வாய !
அருந்தினை தமிழைப் பொருந்திய அமிழ்தென
அம்மொழி பயின்றோர் செம்மை யுறவே
சேர்த்தனை செல்வம் கூர்த்த மதியால்
கற்றவர்க் கென்றும் உற்றுழி உதவ
மற்றவர்க் குழைத்தல் நற்றவ மென்னும்
விழுமிய கொள்கையைத் தழுவி நின்றனை
இடனில் பொழுதுங் கடனறி காட்சியில்
ஒல்கா திருந்தனை பல்கால் எவரும்
அச்ச மின்றி நச்சின ரிலமே
என்று மின்மொழி நன்றே வழங்கினை
சாதியை யொழித்து நீதியில் நடந்தனை
முருக னடியிணை கருதி வாழ்ந்தனை
மூன்று பள்ளியில் ஆன்ற சேவையில்
கனியெனப் பிள்ளைகட் கினிமை யாயினை
செந்தமிழ்த் தாயின் சிந்தை மகிழக்

சால ஒப்பனை சாலச் செய்தனை
விருந்துகண் டஞ்சாத் திருந்திய மனையும்
மக்களும் நட்பும் ஒக்கலும் பெற்றனை
கன்னித் தமிழருள் மன்னவன் நீயெனப்
பெற்றனை எல்லாம் பெற்றனை ஐயா !
தறையில் வாழ்வில் குறையே இல்லை
கரந்த தென்னே கரவறி யாயே
இறைவ னுணை நிறைவோ அறியேம்
உள்ளும் புறமும் ஒத்த நண்ப !
நின்மொழி யுன்ன நின்செயல் எண்ண
உள்ளங் குழையும் ஊனுங் கலரையும்
என்பு நெக்குறும் அன்புக் கடலே !
பெரிதே துன்பம் பெரிதே
காண்ப தென்றோ மாண்புறு முகமே. (1)

வெண்பா

மூவேந்தர் காத்த மொழிவளர்க்கப் போந்தவருள்
மாவேந்த லென்று மகிழ்ந்திருந்தார்—நாவேந்தர்
புந்தி வருந்தப் பொருநமச்சி வாயஅவர்
சிந்தைநிலை காணுயோ சேர்ந்து. (2)

கட்டளைக்கலித்துறை

காவேரிப் பாக்கக் கடலெழுங் தெங்குங் கதிர்பரப்பிச்
சேவேறச் செய்த செழுமணி வீழ்ந்து திகழ்வதெங்கே
பாவேறு சொல்லைப் பருகிய மாந்தர் பரிதவித்து
நோவேறு கின்ருர் நுவலுரை யுண்டோ நொசிதவமே. (3)

விருத்தம்

பரவையலை ஓயாது பாடப் பாடப்
பான்மதிய நிலவுமணல் படர்ந்து கால
விரவின்பம் கடலகத்தில் விளையப் பேசி
விருந்தோம்பு விற்பனனே விரைந்த தெங்கே
கரவுணரா மனங்கொண்டு கலைக ளாய்ந்து
கற்பகம்போல் உதவிவந்த கல்விப் பேறே
பரவுதமி ழன்னைக்குப் பழைய சீர்த்திப்
பண்பளிக்க வந்தவனே பார்ப்ப தென்றோ. (4)

செந்தமிழ்க்கா லெழுமலைபாய்ச் செறிந்த கானுத்
தெளிநூல்கள் விளைபுலனுய்ச் செம்மைத் தண்மைச்
சந்தஅலை எறிகடலாய்த் தழைத்து நின்று
தனித்திணையின் வழக்கோம்பத் தவமே செய்தாய்
இந்தநிலம் இறுமாந்தே இருந்த காலை
எழில்நமச்சி வாயஎழுந் தெங்கே சென்ருய்
சிந்தனைநோய் நண்பருக்குச் செய்தல் நன்றோ
சேயடியில் மனங்கொண்ட செல்வக் கோவே. (5)

—திரு. வி. கலியாணசுந்தரன்



1934 ௵ டிசம்பர் ௴ சென்னையில் நடந்த சென்னை மாசாண ஆசிரியர் மானேஜர் மகாநாட்டின்போது எடுத்த படம்

திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளை அவர்கள் B. A., L. T., சென்னை நகர சபை கல்வி அதிகாரி எழுதியது.

முழுமதியின் வரவாற் கடல் பொங்குதல் போலத் தமிழன்பர் உளமெலாம் திருவாளர் சா. நமச்சிவாய முதலியாரவர்களை நினைத்த வளவிற் பூரிக்கும். முதலியாரவர்கள் தமிழ் நூல்கள் பலவற்றைத் தக்க ஆசிரியர்பாற் பண்டை நன் முறைப்படி பயின்று, தமது குன்றா ஊக்கத்தால் தமிழ்ப்புலமையை வளம்படுத்திக்கொண்டதோடு, சிறந்த ஆங்கில நூல் பல கற்று அதன்வழி பெருகிய பரந்த நோக்கையும் ஆராய்ச்சித் திறனையும் தம் தமிழ்த் தொண்டிற்குப் பயன் படுத்தியுள்ளார்கள். பல ஆண்டுகளாகப் பல்வேறு தரப் பாடசாலைகளில் தமிழாசிரியராக விளங்கிய இவர்கள், மாணவர்கட்கேன்றே எழுதியுள்ள புத்தகங்களின் தனிச்சிறப்பைத் தமிழுலகம் நன்கறியும். இவர்களியற்றியுள்ள பிற பல நூல்களும், உண்மைச் செறிவு, நடைத்தெளிவு, திட்பம், வனப்பு முதலிய இயல்புகளால் தமிழுக் கணி செய்வனவாம். தம்மையடைந்தார் துயர் தீர்ப்பதொன்றே தம் தலையாய கடன் என்னும் கோட்பாட்டை இவர்கள் தம் வாழ்க்கையில் சிறிதும் பகட்டின்றிப் பின்பற்றி நடந்து வந்துள்ளார்கள். இவர்கள் அருள்நிறைந்த உளமனைய "கடலகம்" தன்னை அடைந்தார்க்கு என்றும் அடையாத வாயிலகமாய் இலகுவதொன்றும். இத் தமிழ்ப்பெருமகனரது அறுபதாம் ஆண்டு நிறை நாளை ஒரு பெரு விழாவாகக் கொண்டாட அறிஞர் பலர் முற்போந் திருப்பது பெரு மகிழ்ச்சி தருகின்றது.

# “நான் கண்ட புதையல்”

தனக்கென வாழாது தமிழர்க்குரியராய் வாழ்ந்துவரும் திருவாளர் முதலியார் அவர்களிடத்து இருந்து வந்த, வருகின்ற நாட்களில் யான் கண்ட அரிய பெரிய குணங்களையும், அழகிய விழுமிய விகடங்களையும் “யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்” என்றாங்கு யான் கண்டுங் கேட்டும் எய்திய இன்பத்தைப் பிறரும் பெறக் கருதி நினைவுக்கு வந்த சிலவற்றை எழுதத் துணிந்தேன்.

## உள்ளப் பாங்கு

கல்விப் பொருளும் செல்வப் பொருளும் ஒருங்குபெற்ற இப்பெரியார் ஒருநாள் “தொல்காப்பிய எழுத்ததிகாரத்தை இளம்பூரணர் உரையோடு பதிக்க வேண்டும்” என்று அறிவித்த பொழுது, யான் ‘வேறு பதிப்பு இருக்கிறது; இப்பொழுது விலையாகாது; ஆகவே அதைப் பதித்தலில் பயனில்லை’ என்று கூறினேன். அதற்கு அவர்கள் ‘தமிழன் தலைமை நூலை நல்ல முறையில் அழகிய வகையில் பொறிப்பது தமிழராகிய நம் கடமை என்பது கருதியே அச்சிட்டேன்—அச்சிடுகிறேன்’ என்று மொழிந்தார்கள். இம்மொழிகளிலிருந்து அவர்களது பரந்த உள்ளத்தையும் தமிழ்நூலிடத்துக் கொண்டுள்ள பற்றையும் கண்டு களித்தேன்.

## உள் அன்பு

மைவரை உலகத்துத் தெய்வமாகிய முருகனிடத்து வெளி வேடம் அற்ற அன்பு கொண்ட சிலர் என்பதைக் கண்டு சிந்தித்து ஆராய்ந்ததுண்டு. இவ்வுண்மை, முதலியார் தங்கள் திருநிறை செல்வர்களுக்குத் தணிகை வேலு, தணிகை மணி யென்றும், பெயரனுக்குப் பழனி வேலு என்றும், தன்னுடன் பிறந்தார் மகனுக்குத் தணிகை பதி யென்றும் பெயரிட்டிருப்பதும், நம் நாட்டில் பல புராணங்கள் இருக்கவும், பணந்தந்து வாங்குவாரற்ற தணிகைப் புராணத்தைத் தமிழ் நாட்டுக்கு அச்சிட்டு அருளியதும், அதற்கு ஒரு சிறந்த உரை இருத்தல் வேண்டும் என்னும் பேரவாக் கொண்டிருத்தலும் தணிகைச் சிங்கார சதகம்போன்ற சில நூல்கள் செய்து இருப்பதும் ஆகிய இன்னோரன்னவற்றால் இனிது வெளியாயிற்று.



வித்வான் M.C. கண்ணபிரான்

முதலியார் அவர்களின் ஆதரவுக்கும் கண்காணிப்புக்கும் முழுப் பாத்திரமானவர்.

## உள்ளங்கரவா உதவி

சினமென்னும் நெருப்பைக் கனவிலுங் கண்டறியா முதலியாரவர்கள், யார் வந்து யாருக்குச் சிபார்சு கடிதம் கேட்டபோதிலும் இல்லையென்னாமலும் தெரியாதவர்கள் என்று கருதாமலும் கொடுத்துதவி வருவார்கள். இதில், அவர்களுடைய கருத்து, “வருகிறவர்கள் வேலை முடிவு பெற்றால் பெறுக. இன்றேல் ‘கடிதமும், சிறிது காலமும் வீண் ஆகுக.’ என்பதே என்று ஒரு நாள் நிகழ்ச்சியிலிருந்து அறிந்து அகமிக மகிழ்ந்தேன்.

## விகடப் பேச்சு

அருந்தமிழோடு ஆங்கிலமும் அமைவுறக்கற்ற முதலியாரவர்கள் வேடிக்கையாகப் பேசுவதிலும் மிகச் சிறந்தவராவார்கள். அவர்கள் அப்படிப் பேசிய பலவற்றுள் சிலவற்றைக் கூறுகிறேன். யாவரும் கேளிர்.

முதலியாரோடு பேசிக்கொண்டிருந்த அவரது சுற்றத்தார் ஒருவர், உறவினர் என்பதற்கு “அவர்கள் நமக்கு மனுஷாள்” என்றார். முதலியார் ‘யாவரும் மனுஷாள் தான் ஒருவரும் மிருகங்களல்ல’ என்றும், உலகமக்கள் அனைவரும் உறவினரே யாவர் என்றும் பொருள் கொள்ள “யார் மனுஷாள் இல்லை” என்று மறுமொழி கூறினார்கள். “யாவதும் ஊரே யாவரும் கேளிர்” என்ற கருத்தை மனத்திற் கொண்டு அறிவித்தனர் என்பதை அறிந்து இன்பம் எய்தினேன்.

## இருமல்

வயது சென்ற ஆசிரிய நண்பர் ஒருவர் முதலியார் வீட்டுக்கு வந்தார். முதலியார் “என்ன ஆசிரியரே” என்றார்கள். அவர் ‘இருமல்’ என்றார். அக்காலத்து முதலியார் வேடிக்கையாக ‘அரையிலிருப்பது ஒரு மல் தானே? இருமல் என்கிறீர்களே? ஓ ஓ! விளங்கிற்று. வீட்டில் ஒருமல், பள்ளியில் ஒருமல்லவோ?” எனக் கேட்போர் வியக்கக் கூறினார்கள். யான் அதை எண்ணி எண்ணி இன்பம் பருகினேன்.

## மனமிருந்தால் இடமிருக்கும்

ஒருநாள் மாலை முதலியார் தங்கள் காரிலிருந்து கொண்டு, கடற்கரைக்குப் போகவேண்டுமென்னும் கருத்துடைய என்னை, “வரவில்லையோ?” என்றார்கள். யான் ‘இடமில்லையே, இருந்து கொள்ளுகி

# நெஞ்சு குமுறுது

திரு. ஜெ. தங்கவேல் B. A.

நெஞ்சுகு முறிவெடிக்குதையா—எங்கள்
நினைவு தடுமாறிப் போகுதையா
பஞ்சுபடாத பாடா குதையா—எங்கள்
பாரமலையொன்று சாய்ந்ததையா

தமிழர் கலையின் சிகரமையா—செல்வம்
தங்கியமாமலை யாகுமையா
தமிழாரத்தின் உருவமையா— வண்மை
தழைத்திடுஞ் சற்குணக் குன்றமையா

தமிழ்க்கடல் ஈந்த அமுதமையா—நாங்கள்
தருக்கிக் கிடந்திடச் செய்ததையா
தமதென் றெல்லோருமே சாரும்வேளை—நமன்
தட்டிப் பறித்தேகி னானேயையா.

முத்தமிழ்த்தாய் தந்த மாமணியே—அவள்
முத்தம் விரும்பிப் பறந்துவிட்டாய்
சித்தங் கலங்கிக் கதறுகிறோம்—எங்கள்
சிந்தை கிழிக்குஞ் சொல் எட்டிடுமோ?

தந்தையே என்றொரு கூட்டமழும்—வித்தை
சாற்றிய சற்குருவே யென்றழும்
அந்தோ எம் மா தரவே யென்றழும்—அந்த
அந்தகன் செவியு மிழந் தனனோ?

ஆண்டு பல்லாண்டுகள் ஆற்றாமலே—புரண்
டழுதுமடிந்தாலும் அவனியிலே
மாண்டவர் மீண்டிடா ரென்றறிவோம்—எங்கள்
மனமந்தநீதி கேட் டாறலையே.

எத்தனைப் புலவர்க்கிடங்கொடுக்கும்—தினம்
எத்தனைப்பேரதை நாடிடுவார்
எத்தனைப்பேரங்கே பாரி கண்டார்—இனி
ஏழைக் 'கடலகம்' என்னசெய்யும்?

நித்தமும் நின்றன் உருவங்கண்டே—இன்பம்
நீளப்பருகிடும் நீலக்கடல்
பித்தனைப்போலே யறற்றுதையா—அதன்
பேரிரைச்சல் செவிக்கெட்டலையோ?

மதுவினைச் சூழ்ந்திடும் வண்டுகள்போல்—நினை
மாலையும் மொய்க்கும் புலவரெலாம்
விதியினைநோகவிட் டேகினையே—அந்த
விண்ணவர்கக்கென் குறை வந்ததையா?

கண்ணில் தவழ்ந்த தயை யென்செயும்—நின்றன்
கரத்தில் வளர் வண்மை எங்கே உய்யும்?
எண்ணித் தொலையாதபேர் புகழும்—நின்றன்
இன்சொலு மெங்கிடந் தேடுமையா?

ஆன அறுபதை உன்னியுன்னி—நாங்கள்
ஆவி குளிர்ந்து கொண்டாட எண்ணி
வானளாவக் கோட்டை கட்டி நின்றோம்—எங்கள்
வயிறு பகீரெனப் பற்றுதையா.

மணக்கோலந்தன்னில் மகிழ்ந்துனக்கே—சூட்ட
மமதையாய்த் தொடுத்த எம்மாலையெல்லாம்
பிணக்கோலந் தனக்கிடநேர்ந்ததுவே—எங்கள்
பீடைவிதியினை என்ன சொல்வோம்.

நாட்டிற் சிறந்ததோர் மண்டபத்தில்—நின்றன்
நலன்களைப் போற்றிடக் காத்திருந்தோம்
காட்டமடுக்கியதில் கிடத்தி—சுடு
காட்டிற் கலங்கக் கதியோவையா.

அண்ணாவோ எம்மாவி சோருதையா—ஆயின்
அன்னை பராசக்தி போட்டியிட்டால்
எண்ணமுடியுமோ எம்முரிமை—அதை
எண்ணியே உள்ள முந் தேறிடுவோம்.

அம்மையடி நிழல்தங்கிடுவாய்!—அவள்
அருளிற் குளித்துத் திளைத்திடுவாய்!
எம்மைச்சிறிதங்கும் எண்ணிடுவாய்!—நாங்கள்
ஏற்றமடைவழி கேட்டிடுவாய்!

---

றேன்' என்றேன். உளநூல் முறையை உலக நெறியிலிருந்து உணர்ந்த அவர்கள் "மனமிருந்தால் இடமிருக்கும்" என்று உரைத்தார்கள். உடனே உடனிருந்து உன்னி உளம் மகிழ்ந்தேன்.

## ஒரு ரூபாய் நாற்காலிக்கு ஒன்பது ரூபாய் கல் மேலானது

ஒருநாள் முதலியார் வீட்டுக்கு இருவர் வந்தனர். முதலியார் அவர்களை அமரச் சொன்னார். ஒருவர் ஆசனத்தமர்ந்தார். மற்றொருவர் கீழே கருங்கல்லின் மேல் இருந்தார். ஆசனத்தமர்ந்தவர் உடன் வந்த நண்பரை மேலே இருக்கும்படி வேண்டினார். அதை அவர் ஏற்றுக் கொள்ளவில்லை. உடனே முதலியார் 'ஒரு ரூபாய் நாற்காலிக்கு ஒன்பது ரூபாய் கல் மேலானது என்று கருதுகிறார்' போலும் என்று மகிழ்ந்த மனத்தோடு கூறினார். யாவரும் மகிழ்ந்தோம்.

உரைநடைக் குழைத்த உத்தமராய முதலியார் அவர்களிடத்துக் கண்ட பண்பையும் விகடங்களையும் விரிக்கின் பெருகு மென்றஞ்சி இத்துடன் முடித்து இறுதியில் இத்தகைய பெரியார் பல்லாண்டு இன்பத்துடன் வாழவேண்டி எல்லாம் வல்ல இறைவன் இணையடியை மனமார வாயார மெய்யார எண்ணி வாழ்த்தி வணங்குகிறேன்.

திருவாளர். கா. நமச்சிவாயரைப் பற்றி யான் நினைக்கும் பொழுதெல்லாம் பழமையொடு புதுமை அவர்களிலினிது கலந்து மிளிர்வதை யுணர்ந்து மகிழ்கின்றேன். தமிழ்ப் புலமை யுடையவர்கள் பெரும் பாலும் பின்னேக்கும், பிற்போக்குமுடையவர்கள், என்றெரு கருத்துண்டு. யான் பல்கலைக் கழகப் பட்டம் பெற்று ஆசிரியத்தொழில் தொடங்கிய நாளில் தமிழில் யான் அக்காலத்திற் கண்ட அரிய வுண்மைகளை ஆங்கிலப் பெரும் புலவர் கருத்துக்களோடு இயைவித்து மாணவர்க்குக் கூறவேண்டுமென்ற நோக்கமுடையவனு யிருந்தேன். என்னுலியன்ற அளவு இதனைச் செய்து வருங்கால், நமச்சிவாயரைக் கண்டு பேசும் சமயங்கள் எனக்கு வாய்த்தன. அவர்கள் முன்னேற்றத் துறைகள் சிலவற்றில், என்னினும் திண்ணிய வுறுதி யுடையவர்களா யிருத்தல் கண்டு யான் வியப்பும் உவப்பு மொருங்கே யடைந்தேன்.

சில யாண்டுகளுக்குப் பின் வேலூரில் எங்கள் பள்ளித் தமிழ்ச் சங்க ஆண்டு நிறை விழாவிற்குத் தலைமை பூண்டு அவர்களாற்றிய சொற் பொழிவுகளைக் கேட்டேன். இதன் பயனுக அவர்கள் பால் எனக்குள்ள அன்பு பெருகிற்று. எனதுணர்ச்சிகளை யெளிதாக யான் வெளியிடுகின்றவனல்லன். அக்காலத்தில் அவர்களோடு அளவளாவி நெருங்கிப் பழக வேண்டுமென்ற பேரவா எனக்கிருந்தும் அங்ஙனஞ் செய்யாது விட்டேன், அதை யொரு குற்றமென்றே நினைக்கின்றேன்.

இதன்பின் பல யாண்டுகள் கழிந்தன. ஒருநாள் அவர்களுடைய வுதவி எனக்கு வேண்டியதா யிருந்தது. யான் திடீரென்று வேலூரிலிருந்து கடலகத்திற்குச் சென்றேன். அவர்கள் சில நண்பர்களுடனே நூற்றுக் கணக்கான புத்தகங்களைப் பரப்பி வைத்துக் கொண்டு ஆராய்ச்சித் துறையிலிருந்தார்கள். எனினுமவர்கள் என்னையுளமுவந்து வரவேற்றுபசரித்த வகை எந்நாளும் மறக்கற்பாலதன்று. யான் வேண்டி நின்ற துணையையவர்கள் எனக்களித்த முறையு மெனது மனத்தை விட்டேஞ்ஞான்று மகலாது.

இங்ஙனம் அன்பன்

"க. ப. சந்தோஷம்"

தலைமையாசிரியர் ஊர்ஹீஸ் கல்லூரி,

வேலூர்.



திரு.
பாரிப்பாக்கம்
கண்ணப்ப
முதலியார்
அவர்கள்

தமிழகத்து இக்காலை மணி விளக்கங்களாக ஒளிரும் நல்லிசை நிறுத்த புலவர் பெருமக்கள் சிலரில், ஒருவராக விளங்குபவர், தமிழ்ப்பேராசிரியர், கா. நமச்சிவாய முதலியார் அவர்கள் ஆவர். இவர் முத்தமிழ்ப்புலமையும் வித்தகக் கவியும் வல்லவர் என்பது இவர் இயற்றிய நூற்களான் இனிது விளங்குவதாகும். மணிமேகலை என்னும் தமிழமுது பழுத்தத் தண்டமிழ்க் காவியத்தினை, முதன் முதலாக அச்சிட்டுத் தமிழ் உலகிற்குதவிய திருமயிலை வித்துவான் சண்முகம் பிள்ளை அவர்களிடத்தே, வரலாற்று முறையில் செந்தமிழ் நூற்கள் பற்பலவும் பாடங் கேட்டு முடித்த இவர்கள், இக்காலத்திற்கு ஏற்குமாற்றுன் அவற்றைப் பயன் படுத்தி வரும் பேரறிவு, பெரிதும் போற்றற் குரியது.

'உடுக்கை யிழந்தவன் கைபோல வாங்கே
யிடுக்கண் களைவதாம் நட்பு'

என்னுந் திருக்குறளுக்கு எடுத்துக் காட்டாக இவர்கள் இலங்குகின்றுர்கள் என்பது, எப்பாலார்க்கும் ஒப்பமுடிந்த தொன்றும்.

'செல்விருந்தோம்பி வருவிருந்து பார்த்திருக்கும்' இவர்களை, 'அடையா நெடுங்கதவு அஞ்சல் என்ற சொல்லும் உடையார்' என்றும் புகழ்க்குரியார் என்றும் கூறுதல் மிகப் பொருத்த முடையதாகும்.

இவர்கள், தணிகைமலைமீதெழுந்தருளி யிருக்கும் செந்தமிழ்த் 'தெய்வ பரமாசாரியனிடத்தே உரு' கிய மனத்தின் பெருகிய அன்புறு காதல் உடையவராவர்கள். என்றும் தம் நண்டரோடு தணிகைக்குச் சென்று வருவதைப் பேரின்பமாகக் கருதும் இயல்பினையுடையவர்கள். தமது அருமைப் புதல்வர்கள் இருவருக்கும், தணிகைமணி, தணிகைவேள் எனத் தாம் வழிபடு கடவுளாகக் கொண்ட அப்பெருமான் திருப்பெயர்களே பெயர்களாக இட்டிருக்கின்றுர்கள். இவர்கள் திருமாளிகையின்கண், வெற்றிவேற் பரமன் ஊர்தியும் கொடியுமாக இலங்கும் மயிலும் சேவலுமே சுவரை யலங்கரிக்கும் சித்திரப் படங்களாக விளங்குகின்றன.

நந்தம் செந்தமிழ் நாட்டிற்கு ஒரு நந்தா மணி விளக்காய் விளங்கும் பெரியார் நமச்சிவாய முதலியார் அவர்களின் அறுபதாம் ஆண்டு விழாவைப்பற்றி என்னுள்ளத்தே தோன்றும் சில கருத்துகளைக் 'குமார விகடன்' வாயிலாக வெளியிட நேர்ந்தமைக்கு நான் மிகவும் மகிழ்ச்சி யுறுகிறேன்.

திரு. முதலியாரவர்களின் அருட்கதிருக்கு யான் இலக்கான வகையை இங்கெடுத்தெழுத என் உள்ளம் உரையளவு கடந்த உவகை அடைகிறது. என் அருமைத் தந்தையார், யான் சிறு பிள்ளையாய் இருந்த பொழுது அகால மரணமடைய, யாங்கள் மிகவும் துன்பப்பட்டோம். அந்த நெருக்கடி



திரு. நாகை. த. குமரசாமி அவர்கள்

யான நிலையில் — பேரிரைச்சலோடு இடியும் மழையும் காற்றும் இருளும் கலந்த சமயத்தில், நடுக்கடலில் செல்லும் மரக்கலமொன்றின் மீகாமன் மறைந்து போன அந்த நெருக்கடியான சமயத்தில்—முதலியாரவர்களின் அருள் என்னும் அமுத மின்னல் பளிச்சென்று தோற்றி என் கல்வி பழுதுபடா வகை செய்தது. என்னைப் பள்ளியில் சேர்க்கப் பொருளுதவி செய்து, எனக்கு வேண்டிய பாட நூல்களை யெல்லாம் வாங்கிக் கொடுத்து என்னைக் கல்வி பயிலச் செய்த அருட்குணத்தை யான் எழுமையும் மறவா வகையை எனக்கு இறைவன் கொடுத்தருள்வானாக. யான் ஒவ்வொரு வகுப்பாக மாறிக்கொண்டே வர, முதலியாரவர்கள் தொடர்பாக எனது பாட நூல்களை வாங்கித் தந்த பெருந்தகைமை எத்தனை சிறந்தது என்பதை நினைக்க என் உள்ளம் மகிழ்கிறது.



வித்வான்

**S.** ஆறுமுக முதலியார் அவர்கள் M.A., L.T.

"பல்லான்ற கேள்விப் பயனுணர்வார் பாடழிந்
தல்ல லுழப்ப தறிதிரேல்—தொல் சிறப்பின்
நாவின் கிழத்தி யுறைதலாற் சேராளே
பூவின் கிழத்தி புலந்து." என்று பண்டைக் காலப் புலவர் ஒருவர் கூறிச்சென்றது பெரும்பாலும் உண்மையே எனினும், ஒரோவழி, இவ்வுண்மையினையும் பொய்யாக்க வல்ல ஒரு சிலர் அன்றும் இன்றும் தோன்றிக் குன்றிலிட்ட விளக்கெனப் பொன்றாப் புகழுடன் விளங்குகின்றனர். அன்னாரில் ஒருவரே காவேரிப்பாக்கத்து வேளாளப் 'பழங்குடி' ஒன்றில் தோன்றிய நமசிவாய முதலியாரவர்கள்.

எட்டு ஆண்டுகளுக்கு முன்னர் முதலியாரவர்களை முதன் முறை பார்த்துப் பழகும் பேறு எனக்குக் கிடைத்தது. அவரது உரையாடல் வன்மையும் இனிமையும் சாதுரியமும் பொருந்திய பேச்சும், நகைச்சுவை ததும்பும் மொழிகளும் என் மனதைக் கவர்ந்தன. அதற்குப் பிறகு முதலியாரவர்கள் இராஜதானிக்கல்லூரியில் (Presidency College) தமிழாசிரியராய் நியமிக்கப்பட்டபொழுது ஒரு இரண்டு மாதங்கள் விடுமுறை எடுத்துக்கொண்டார். நான் அவருக்குப்பதிலாக அவ்வேலை பார்க்க நேர்ந்தது. பிறகு 1930-ம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் ஆசிரியாவர்கள் ஓய்வு பெறுவான் வேலையினின்றும் விலகிக்கொண்டபிறகு நிரந்தரமாக அப்பதவியில் நியமிக்கப்படும் பேற்றைப் பெற்றேன். அங்கு சென்ற பிறகும் ஆசிரியாது உயர்ந்த தமிழறிவும், தமிழறிவுறுத்தும் ஆற்றலும், சொற்பொழிவாற்றுந் திறனும், மாணவர்களிடையினிது பழகும் பான்மையும் பிறவும் மாணவர்களிடைப்பதிந்து ஊன்றிக் கிடந்ததை யான் காணநேர்ந்தது. அவரோடு வேலை பார்த்துவந்த பிறஆசிரியர்களும் அதற்குச் சான்று பகர்வார்கள்.



நந்தம் தமிழுலகில் திரு. கா. நமசிவாய முதலியாரவர்களைப் பற்றி யறியாதா ரொருவரு மிரார் என்பது மிகையாகாது. 'நமசிவாய' என மங்கலங் கூறி ஒன்றைத்தொடங்குவது போலவே நம் தமிழ் அறிஞர் நமசிவாயப் பெயரினர் எழுதிய அரிச்சுவடியைக் கொண்டே தம்கல்வியைத் தொடங்குன்றனர். மாணவர்க்கெனவும் இவர்களால் எழுதப்பட்ட நூல்கள் எத்தனையோ கல்வித் துறையிலும் ஆராய்ச்சித்துறையிலும் உழைத்துவரும் பெரியார் யாவரேனும் அறிந்து போற்றப்படும் பெருந்தகையினர் இவ் வரும்புலவர்.

சிறியோர் பெரியோர், உயர்ந்தோர் இழிந்தோர், நல்லோர் அல்லோர், இனத்தார் புறத்தார் என்பனவாகிய வேற்றுமை எட்டுணையுமின்றி யாவரிடத்தும் பொதுமையான நண்பும் பொதுமையான அன்பும் காட்டி அளவளாவி யொழுகும் இப்பேரறிவாளரது இனிய இயல்பு இவர்களோடு நெருங்கிப்பழகியவர்கட்கே விளங்கும். அடியேனும் அடுத்திருந்தும் அகலவிருந்தும் இவர்களது பலதிறப்பட்ட சிறப்புக்களையும் பண்புகளையும் அறிந்தவனாவேன்.

"எவ்வுயிரும் பொதுவெனக் கண்டிரங்கி யுபகரிக்கின்றார் யாவரந்தச்
செவ்வியர்தஞ் செயலனைத்தும் திருவருளின் செயலெனவே தெரிந்தே னிங்கே
கவ்வையிலாத் திருநெறியத் திருவாளர் தமக்கேவல் களிப்பாற் செய்ய
ஒவ்வியதென் கருத்தவர்சீ ரோதிடவென் வாய்மிகவு மூர்வ தாலோ."

(ஸ்ரீ இராமலிங்க சுவாமிகள்)

என்றவாறு இத்தகைய அரிய பெரிய நல்லோரது சீரை எடுத்துரைக்க யாவர்க்கும் நாவூறாதிராது.

த. ம. மூகையதீன்.
யுனைடெட் தியலாஜிகல் காலேஜ்
பெங்களூர்

'யாரைப் பிடித்தால் இந்தக் காரியம் முடியும்' என்னும் கேள்வி எனக்கும் எனது நண்பர்களுக்கும் உதித்த சமயங்கள் பலப்பல. ஒவ்வொரு சமயமும் 'நமச்சிவாய முதலியாரைப் பிடித்தால் ஆகலாம்' என்னும் பதிலே எங்களுக்குக் கிடைத்துள்ளது; அப்படி அவரைப் பிடித்தே சாதித்துக் கொண்டுமிருக்கிறோம். கலியாணங் கூட்டிவைக்கவாகட்டும், உத்தியோகந்தேடிக் கொடுக்கவாகட்டும், கல்லூரியில் சேர்த்து விடவாகட்டும், மேல் வகுப்புக்களுக்கு ஏற்றி வைக்கவாகட்டும், வியாபாரந்துவக்கித்தரவாகட்டும், எலெக்ஷனில் ஓட்டுப் பெறவாகட்டும், அநீதக்காரரைத் தாக்கவாகட்டும், அதிகாரவர்க்கத்தார் தயவை நாடவாகட்டும், முதலியார் துணைகொண்டு தத்தம் காரியங்களைச் சாதித்துக் கொண்டவர்கள் எங்களைப்போல் பதினாயிரம் பேர் உளர். இவர்கள் அனைவரும், 'எங்கள் நமச்சிவாயன் வாழ்க! அவரை உலகுக்கு ஈந்த நாதன் தாள் வாழ்க!' என்று எப்பொழுதும் வாழ்த்திக் கொண்டிருக்கிறார்கள் என்பது கற்பனைச் சித்திரமாகாது.



திருவாளர்.
ம. சண்முக சுந்தர முதலியார் அவர்கள், M. A. L. T.

முதலியார் அவர்களுக்கு அறிமுகமானவர்களின் தொகையைப் போல் தங்களுக்கும் உண்டு என்று சொல்லிக்கொண்டு முன்வரக் கூடியவர்கள் தமிழ் நாட்டில் வெகுசிலரே. தோழமை, உள்ளன்பு, கனிவு, உண்மை, பெருமனமுமுதலிய சீரிய குணங்கள் அவரிடம் திகழ்வது போல் அவ்வளவு இயைபுற்றுப் பெரும்பாலோரிடம் திகழ்வது அருமை. அவரது நட்பின் திறத்தையோ, விருந்தோம்பலின் சிறப்பையோ, முயற்சியின் வன்மையையோ புகழாதாரிலர். பேச்சில் அவரை 'இன்சொற்களஞ்சியம்' என்றே சொல்ல வேண்டும்.

போதகாசிரியராகவும் நூலாசிரியராகவும் அவரை உணர்ந்தவர்கள் அவரை 'அறிவுக்களஞ்சியம்' என்றும் கூறுவர்.



திரு. ப. அ. முத்துத்தாண்டவராய பிள்ளையவர்கள்
பறங்கிப்பேட்டை. :: சீகாழி

நன்று புரிந்திடுமால் ஞானிலத்து மெய்ப்புலமை
துன்று கவிஞன் றுரைக்கோமான்—என்றும்
அமைச்சவாங் கீர்த்திக் கரையன்சென் னைக்கா
நமச்சிவா யன்சீர் நமக்கு. (க)

இமிழ்கட லுலகில் தமிழரே யன்றி
யேவரும் மனத்தொடு பொருந்தத்
தமிழ்மொழி யதனைத் தனிமொழி யென்று
சாற்றவும் சலிப்பதி லாமல்
அமிழ்தெனச் சுவைத்துத் தஞ்சிறர் வாயும்
அத்தனி மொழிமண மின்றுங்
கமழவும் செய்யுந் திறமிகப் பெறுவோன்
கவிநமச் சிவாயநா வலனே. (உ)

செந்தமிழ்த் தொண்டு செய்வதே தமது
சீரிய பணியென நினைத்து
வந்தநாள் முதல்தாம் வகைவகை யாய்ச்செய்
மாபெருந் தொண்டர்கள் பலருள்
இந்தநம் நமச்சி வாயரு மொருவர்
என்றுதாய் தினமிகக் களிக்க
எந்தநே ரத்தும் தொண்டனு யிருப்போர்
எழினமச் சிவாயநா வலனே. (ங)

கற்றவ ரன்றி மற்றவ ரெவர்க்குங்
காலத்திற் கேற்ப முன் வேண்டும்
நற்றுறை யமைந்த பொருள்தனை யாங்கும்
நலம்படச் சொலும்பொழு தொன்றும்
வெற்றுரை யாகா வணம்பொது மக்கள்
விரும்பிய வாறறி, வுரையைச்
சொற்றவப் பெரியார் எவரெனில் நமது
துரைநமச் சிவாயநாவலனே. (ச)

சென்னையில் மேலாம் அரசர்கல் லூரி
திகழ்குயின் மேரிகல் லூரி
உன்னத நிலையைப் பெறவவ ணிருந்தே
வுபாத்திமைத் தொழின்மிகப் புரிந்து
நன்னரே தமிழின்வளமிகத் தழைக்க
நந்தம தாசியற் றுறையில்
முன்னமே சமயந்தொறு-மெதிர் முயல்வோன்
முதனமச் சிவாயநா வலனே. (ரு)

பற்பல மொழியி னிடைப்படு தமிழின்
பண்பினைத் தன்னிடம் பயிலக்
கற்பவர் தம்மா லிவ்வுல கியாங்கும்
கற்பிக்கச் செய்வது மன்றி
முற்படு ஜனவி னோதனி யென்னும்
முதன்மைகொள் பத்திரி கையினும்
பொற்புரை நடைச்செல் வத்தினைத் தந்தோன்
புகழ்நமச் சிவாயநா வலனே. (சா)

---


# சுந்தரர் தேவாரம்

சைவசித்தாந்த சமாஜ 2-ம் பதிப்பு.
[நூதன முறை]

முக்கியமான பெரியபுராணச் செய்யுள்களும் சமாஜ உதவித்தலைவர் திரு. அ. சோமசுந்தர செட்டியார் M A. எழுதிய சரித்திரம், குறிப்புரை விஷய அகராதியும் அடங்கியுள்ளது.

ஒவ்வொரு சைவரிடத்தும் அவசியம் இருக்கவேண்டியது.

தேவாரம் ஓதுபவர்களுக்கு அத்தியாவசியம்.

கலிகோ கட்டிடத்துடன் விலை அணா **12**
6–பிரதிகள் ரூபா **4** தபால் செலவு வேறு.

கிடைக்குமிடங்கள்.

(1) சைவசித்தாந்த மகா சமாஜம்,
22-A. கல்லுக்காரத் தெரு, மைலாப்பூர் சென்னை.

(2) அ. சோமசுந்தரஞ் செட்டியார்,
15-கிழக்குமாதா கோவில்தெரு, ராயபுரம்.



திரு.
அ. மா: சிவஞானம்
அவர்கள்
ஆம்பூர்

நம் தண்டமிழன்னையின் தனிப்பெரும் பேறாய் விளங்கும் உயர் சைவத் திருவாளர் கா. நமச்சிவாய முதலியார் அவர்களைத் தமிழுலகில் அறியாதார் யாரே! அவரால் பேருதவி பெற்றோர் மிகப் பலர். யானும்என் குடும்பத்தினரும் இவரை நன்கறிவோம்.

வாலாஜா முனிஸிபல் ஹைஸ்கூலில் தலைமைத் தமிழ்ப்புலமை நடாத்தித் தற்போது ஒய்வு பெற்றிருக்கும் எனது பாட்டனர் திருவாளர் ஆ. கமலநாத முதலியார் அவர்கள் தாம் வேலையினின்றும் நின்றதன் பின் இவர்பால் பல உதவிகளைப் பெற்றுள்ளார்கள். அன்றியும் அடியனேன் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பண்டிதப் பயிற்சி வகுப்பில் இடம் பெறும் பொருட்டு, அவ்வமயம் தென்னாற்காடு ஜில்லா கல்வியதிகாரிகளாக இருந்த திருவாளர் அப்பர் சுந்தரமுதலியார் அவர்களின் உதவியை நாடிச் சென்றபோது நமது முதலியார் அவர்கள் உடனிருந்து என்னை அன்புடன் ஆதரித்து என் முயற்சியில் வெற்றியுறுமாறு செய்தனர்.

நமது முதலியார் அவர்கள் தம்பால் அடைந்தார் வேண்டியவற்றை அன்புடன் அளித்துதவும் அருட்டிறம் மிகுந்தவர். தம்மை நாடி வருவார்க்குக் காட்சிக் கெளியர். எப்பொழுதும் இன்மொழியும் மலர் முகமுங் கொண்டொளிரும் பேரழகர்.

தற்போது எங்கள் M. E. L. I. M. ஹைஸ்கூலில் 'ரைட்டராக' இருக்கும் திருவாளர் A. தேவாசீர்வாதம் பிள்ளையவர்கள் சுமார் இருபது வருடங்களுக்கு முன் உதகமண்டலத்தில் ஸவுத் இண்டியன் டிரேடிங் கம்பெனியில் ரைட்டராக இருந்ததாகவும் அவ்வமயம் நமது முதலியார் அவர்கள் கோடை கால விடுமுறைக்கு அங்கு வந்து தங்கும் போதெல்லாம் அவரோடு அளவளாவினதாகவும் அவர்களின் அருங்குணங்களை அடிக்கடி வியந்து பேசுவார்கள்.

அத்தகைய ஆன்றோர்கள் நந்தாய் நாட்டில் வெகு சிலரே உளர். அவர்களில் முன்னணியில் முதன்மை பெறுவார் நமது உயர் சைவத்திருவாளர் கா. நமச்சிவாய முதலியார் அவர்களே. இவர்கள் தமிழன்னைக் கியற்றுந் தொண்டின் திறத்தை இந்நாட்டில் அறியாதார் யார்?


# கெற்ப சஞ்சீவி எண்ணை

ஸ்திரிகளுக்கு மாதாந்திரத்தில் வரும் பொறுக்க முடியாத வயிற்றுவலியை அந்த க்ஷணமே நிறுத்தும். சூதக க்ஷயம், சூதக சூலை, சூதக ஜுரம், சூதக வாய்வு, சூதக கட்டு, சூதகச் சிக்கல், சூதகத்திரக்ஷி, சூதககக்கட்டினால் உண்டாகும் தலைவலி, உடம்பு வலி, கை கால் பொருத்துகள் உளைவு, மேலெல்லாம் குத்து, குடைச்சல், உடம்பு ஸ்தூலித்துப் போதல், வயிறு பெருத்தல், காந்தல், எழுந்திருக்க முடியாமை, திகைப்பு, மூச்சு, மயக்கம், பசியின்மை, சாப்பாட்டில் வெறுப்பு, ஒரு செம்பு ஜலங்கூட தூக்க முடியாத பலஹீனம், சூதக ஜன்னி, முதலிய வியாதியெல்லாம் தீர்த்து கெர்ப்பப்பை சுத்திகரிக்கப்பட்டு கெற்ப உற்பத்தியை உண்டுபண்ணும். 6-வித மலடும் தீரும். கெற்பம் தரிக்கவொட்டாது பண்ணும் கிருமிகளை கூட்டுடன் வெளியிலகற்றி விடும், திடகாத்திரமும், பூரண ஆயுளுமுள்ள குழந்தை தரிக்கும்.

## குணம் இல்லாவிடில் ரூ. 5 வாபீஸ்

1-நபருக்கு 3-புட்டி வேண்டும்:
1-புட்டி ரூ. 2. 3-புட்டி ரூ. 5.
சிலவு வேறு

பழனி வைத்திய ஆசிரியர்,
ஆர். எம். கே. வேலுசாமி பிள்ளை
சித்த வைத்தியசாலை, 146-B புரசவாக்கம்
ஹைரோடு, சென்னை.

தலைமை ஆபீஸ் பழனி.

# : நமது நண்பர் :



தீவான் பகதூர் க். தெய்வசிகாமணி முதலியார் அவர்கள்

இவர் நமது முதலியார் அவர்களைப்போலவே முயற்சியால் உயர்ச்சியடைந்த பெரியார். ஐக்கிய நாணயச் சங்கத்தில் ஒரு குமஸ்தாவாக வாழ்க்கையை ஆரம்பித்து தன் முயற்சியால் படிப்படியாய் அந்த துறையின் உச்சாணி கிளையாகிய சென்னைமாகாண கூட்டுறவு சங்கங்களின் ரிஜிஸ்ட்ராராயிருந்து சமீபத்தில் உபகாரச் சம்பளம் பெற்றார். பரந்த சைவப்பற்றுள்ளவர். தமது பிற்காலத்தை கடவுள் தொண்டில் ஈடுபட எண்ணியுள்ளதை அறிந்து அவரை சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் துணைத்தலைவராக தேர்ந்தெடுத்திருக்கின்றனர்.

—ஆசிரியர்.

நமது நண்பரை பல வருஷங்களாக நான் அறிவேன். தமிழுலகில் நன்கு மதிக்கப் பெற்ற புலவராக திகழ்கின்றார். பள்ளிச் சிறுர்களுக்கு தெள்ளிய செந்தமிழ் நடையில் பலநூல்கள் எழுதி உதவியிருக்கிறாரென்பது உலகறிந்த விஷயம். இவர் சிறுபிள்ளைகளுக்கு நூல் எழுதுவதன்முன், அவர்கள் படித்த புத்தகங்கள் பிள்ளைகள் தினசரி வாழ்க்கையில் காணாத பொருள்களை பின்பற்றி எழுதினவாக காணப்பெற்றன. தமிழின் நடையோ அன்னியன் ஒருவன் எழுதினது போலிருந்தது. நமது நண்பரோ இம் முறையை மாற்றி தமிழ் நாட்டின் செய்திகளை பொருட்களாகக்கொண்டு சுத்த செந்தமிழ் நடையில எளிதில் விளங்குமாறு ஆரம்பக்கல்வி பாடசாலை முதல் ஹைஸ்கூல் பாடசாலை வரையில் மாணவர்களுக்கு தமிழ் நூல்கள் வரைந்து பேருபகாரம் செய்தார்களென அஞ்சாது கூறலாம்.

இவர் தனக்கேயன்றி பிறர்க்கும் வாழ்பவர் என்னும் உண்மையை தமது வாழ்க்கையில் நன்கு எடுத்துக் காட்டியிருக்கின்றார். ஏழை மாணவர்களுக்கும், சுற்றத்தார், உதவியை நாடினவர், உதவிக்குரியவர் இவர்கள் யாவருக்கும் கரவாது கொடுத்தவர் என்பதை உலகத்தார் அறியவேண்டும்.

இப்பெருந்தகையார் நீடூழி வாழ்ந்து தமிழுலகிற்கு நிரந்தரமான நன்மையை செய்ய வேண்டுமென்றும் இவருடைய, உதவி பலர்க்கும் கிடைத்து மிக்க கீர்த்தி பெற்று வாழ வேண்டுமென்றும் எல்லாம் வல்ல இறைவனை வழுத்துகின்றேன்.


## பவுன்டன் பேனா அதிர்ஷ்ட நெம்பர் பரிசுகள்.

குமார விகடன் 3-வது மாலை 11-வது மலர் (1-3-36ல் வெளிவந்தது) அடியிற் கண்ட அதிர்ஷ்ட நெம்பர் பிரதிகளை வைத்திருப்பவர்கள் 25-4-36-க்குள் நமது காரியாலயத்திற்கு வந்து சேருமாறு அனுப்பி வைத்துப் பரிசு விளம்பரப்படி பவுன்டன் பேனாக்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

3-வது மாலை 11-வது மலர்

அதிர்ஷ்ட நெம்பர்கள்

**71162, 716,70 71769, 71822, 71998.**



இதனை எழுதுகிறவர் திரு. A. தம்பிரான் முதலியார் அவர்கள் சென்னை தொண்ட மண்டலம் பாடசாலையில் ஆசிரியராயிருந்து வருகிறார்-ஆசிரியர்.

தேனினுமினிய நற்றமிழ்மொழி, என்றும் நீங்கா இளமைகொண்டிருக்கும் தாய்மொழி, பழமை, வளர்ச்சி இலக்கண இலக்கியப் பெருமையாதிய வற்றால் சிறந்து விளங்கும் செந்தமிழ்மொழி, தனக்கொப்புயர்வில்லாத் தமிழ்மொழி; பிறமொழிக் கலப்பின்றித் தனித்தியங்கும் ஆற்றல் வாய்ந்த நம் தமிழ்மொழி, தாக்கி விடுவாரின்றித் துன்பக் கடலிலாழ்ந்து சிதைவுற்றுத் தத்தளித்த ஞான்று தமிழ் மொழியில் உரை நடை நூல்களே இல்லாத காலத்து உரைநடை நூல்கள் பல வியற்றி வழிகாட்டியும் பேராதரவு தந்தும் தமிழ் மொழியின் மானத்தை— தமிழரின் மானத்தைக்காத்தும், ஆண்டுதோறும் தமிழ்த் திருநாள் விழாவாற்றி மகிழ்ந்தும் போற்றிய பெருமை திரு. முதலியார் அவர்கட்கே உரியதாகும் என்பது உலகமறிந்தது.

தொன்னூல் புலவர்களது பொன்னூல்களையன்றி கல்வெட்டுகளையும் மாணவர்க் குரியதாக்க ஏட்டுப் பிரதி நூல்களையும் தேடிக் கண்டு களிகூர்ந்து கசிந்து கசிந்துள்ளுருகி அவைகள் சிதையா வண்ணம் 'தாமின்புறுவ துலகின்புறக் கண்டு காமுறுவர் கற்றறிந்தார்' என்பார்போல் அவைகளை பதிப்பித்துப் பிறருக்கின்னூட்டுந் தகைமையைத் தமிழர்கள் போற்றாதிருக்க முடியாது. அதிலும் ஒல்காப் பெருந் தமிழ் தொல்காப்பியப் பேரிலக்கணத்தைத் தமிழ்ச்சுவை யறியாதாரும் தனித்துக் கற்கும் முறையில் பதிப்பிக்கும் அவரது தமிழ்ப்பணி சீரிய தமிழ்ப்பணியாகும். தமிழர்கள் இற்றை ஞான்று நன்னிலை யெய்தவேண்டுமெனில் முதற்கண் அவர்கள் அரசியலில் நன் மதிப்புப்பெற வேண்டும் என்ற கருத்தை உளத்தே நிறுத்தி சமீபத்தில், பள்ளித் தமிழாசிரியர்கள் ஊதிய உயர்வு பெறும்படி உழைத்தவர் திரு. முதலியார் அவர்கள் ஆவர் என்பது அனைவருமறிவர். திரு. முதலியார் அவர்களின் உதவியால் தமிழாசிரியர்களையன்றிபிற தமிழர்கள் பலரும் உத்தியோகமும், ஊதிய உயர்வும உயர்நிலையும் இன்ன பிறநன்மை பெற்று உளமாரவாழ்த்துவதை இன்றும் செவிமடுக்கிறோம்.

---


# தண்ணீரைப் பணமாக்குங்கள்



## பணம் சம்பாதிக்கும்
## -- சோடா பவுண்டன்

இது சுத்த சுதேசி மிஷின்.
தண்ணீரும் எசென்சும் இருந்தால்
சோடா, கலர் முதலியவை கோடை காலத்திற்கேற்ற
குளிர்ந்த பானங்களாக செய்து விற்கலாம்.
போட்ட முதலை ஆறு மாதத்தில் எடுத்து விடலாம்.
உங்கள் ஊரில் இந்த மிஷின்ஒன்று
கட்டாயம் இருக்கவேண்டும்.
விபர கேட்லாக்குக்கு உடனே எழுதுங்கள்.

| | | |
|---|---|---|
| 2 வாசஸ் சோடா பவுண்டன் | விலை | ரூ 700—0—0 |
| 4 வாசஸ் சோடா பவுண்டன் | விலை | ரூ 800—0—0 |
| 6 வாசஸ் சோடா பவுண்டன் | விலை | ரூ 900—0—0 |
| 4 வாசஸ் போர்டபில நிக்லிங் சோடா பவுண்டன் | விலை | ரூ 750—0—0 |
| 6 ,, ,, ,, | விலை | ரூ 850—0—0 |

உற்பத்தி செய்கிறவர்களும் விற்கிறவர்களும்

**A. G. RAJOO & CO.,-A. G. ராஜு அண்டு கம்பெனி,**

**2/64, சாமி நாயக்கன் தெரு, சிந்தாதிரிப் பேட்டை, சென்னை.**



திரு. A. முத்தையா அவர்கள். M.A., சென்னை.

"தொண்டை நன்னாடு சான்றோருடைத்து." அச் சான்றோர்கட்குச் சிகாமணியாய் இருப்பவர்கள் நம் ஆசிரியர் அவர்கள். அப்பெரியாருடைய வாழ்க்கையை உற்று நோக்கில் தமிழர் யாவரும் அறிந்து, தம் வாழ்க்கையின் நடைமுறையிற் கொண்டு வரக்கூடிய உயரிய பல கருத்துகள் புலனாகும்.

நந் தமிழ்ப்புலவர் தன் இடையறா முயற்சியாலும், தளர்விலா உழைப்பாலும் சிறிய ஊதியமுள்ள ஆசிரியர் நிலையிலிருந்து, தமிழறிஞர் உத்தியோக முறையில் அடையக்கூடிய பெரும்பதவியாகிய சென்னை அரசினர் கல்லூரியின் தலைமைத் தமிழ்ப்புலவர் ஆனார்கள். எனவே தமிழர், "உழைப்பின் வாரா உறுதிகள் உளவோ?" என்னும் உயரிய உரையின் உண்மையை அறிய, இப்பெரியார் வாழ்க்கை பெரிதும் பயனுடைத்து என்பது மிகையாகுமோ?

இவ் வைந்தெழுத்தண்ணல் மாபெரும் "வேளாளர்." வேளாளரென்போர் தாளாண்மை யுடையாரென்பதை விளக்குபவர் நம் முதலியார். "அடையா நெடுங்கதவும் அஞ்சலென்ற சொல்லும், உடையார்" நம்புலவர் சிரோமணி. அண்டினோரை ஆதரித்தலேயன்றி, எவருக்கு என் நன்மை செய்யலாம், எவ்விதத்தில் ஆதரவளிக்கலாம் என்பதே சிந்தனையாக உடையார் இவ் வள்ளல். 'தனக்கென வாழாப் பிறர்க்குரியாளராக' இருக்கவேண்டும் என்னும் உயரிய வாழ்க்கை லட்சியத்தை உடைய தமிழரிற் றலை சிறந்தவர் இவர் எனக் கூறவும் வேண்டுமோ? இவராற் பயன் பெற்றவர் எண்ணிலர் என்பது எல்லாரும் அறிந்த இரகசியம்.

சுருங்கக் கூறுமிடத்து இப்பெரியார் சிறந்த அறிஞர்; கல்விக்கடல்; காருண்ய சொரூபம்; பணிசெயும் பண்பினர்; உயர்வழி காட்டுபவர்.

---

தமிழ்ப் பேர் அறிஞர் உயர்திருவாளர் கா. நமச்சிவாய முதலியார் அவர்களை நான் சென்ற 25 ஆண்டுகளாக அறிவேன்.

அவர்கள் ஏனைய தமிழ்ப்புலவர்களைப்போல் அல்லாது, ஆங்கிலப்புலவர்களின் செந்நெறிப்போக்கைப் பின்பற்றி, ஆங்கில நூல் வெளியீட்டு முறைகளையும் பின்பற்றி, நூல் வெளியீட்டிலும், தமிழ் வாசகங்கள் எழுதும் முறையிலும் தமிழ்மொழிக்கே ஒரு புத்துயிர் அளித்துள்ளார்கள்.

அவர்கள் நடத்திவந்த "நல்லாசிரியன்" என்ற பத்திரிகையானது, தமிழ் உலகிற்கே ஒரு வழிகாட்டியாகத் திகழ்ந்தது.

ஆரம்பக் கல்வி முதல் ஐஸ்கூல் வரையும் வாசக பாடங்கள் அவர் எழுதியுள்ளார்.



அவர் பல வகுப்புக்களுக்கு எழுதியுள்ள இலக்கண நூல்களானது படிக்கப் படிக்க இனிமையாய், கற்போர் உள்ளம் சலிப்படையா வண்ணம் தகுந்த உதாரணங்களுடன் மிளிர்கின்றன. உதாரணங்கள் தமிழ் நாட்டுக்கு ஒத்ததாகவும், தமிழர் சரிதங்களை ஒட்டியும், தமிழர் பழக்க வழக்கங்களை எடுத்துக் காட்டியும் விளக்கப்பட்டுள்ளன.

இவர் தமிழ் மொழிக்கு பாத்திரமன்றி, தமிழ் மொழிகற்கும் ஆசிரியர்கட்கும் (ஆசிரியர்கள் என்ன ஜாதியாயிருந்தாலும் சரி—பிராமணனானாலும் தமிழன் ஆனாலும்) வேண்டிய உதவிகளைப் புரிந்து வந்தார்கள்.

தங்கள் இனத்தார்க்கு ஒரு மாதிரி, வேறு இனத்தவர்க்கு ஒரு மாதிரி உதவிசெய்து கொண்டுவரும் ஏனைய தமிழ்ப் புலவர்கள் இவரிடமிருந்து இப் பெரிய குணத்தைக் கற்றுக்கொள்ள வேண்டும். இவர் தம்முடைய பேச்சாலும் செய்கையாலும் மற்றப் புலவர்களுக்கு ஒரு வழிகாட்டியாயுள்ளார். ஆகையால், இவர் செந்தமிழ்ப் பாவலர்ப் புரவலர் ஆகத் திகழ்கின்றார்.

துடிசைகிழார். அ. சிதம்பரனார்.